1-12-1990 ரூ.1

# தமிழரசு











குழந்தைகள் தின விழாவையொட்டி, மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர்
திரு.க.அன்பழகன் அவர்கள், சென்னைக் கலைவாணர் அரங்கில்
கலை நிகழ்ச்சியில் பங்கேற்ற சிறுவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார் (16.11.90)

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021

கார்த்திகைத் திங்கள் - 15

மலர்: 21 இதழ்: 11

1-12-1990


## இந்த இதழில்...


இனிய இந்தியாவை உருவாக்குவோம்!
—மாண்புமிகு முதல்வர் கலைஞர் ... 2

சக்தி சோயா தொழிற்சாலை தொடக்க விழாவில் முதல்வர் கலைஞர் உரை ... 4

மக்கள் தேவைகளை நிறைவு செய்வோம்
—மாண்புமிகு முதல்வர் கலைஞர் ... 7

நூலகத் துறையின் குறிக்கோள்களும் சாதனைகளும்
—மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் ... 9

செய்தித் துளிகள் ... 12

அரசினர் பொதுமருத்துவமனை: நரம்பியல் நிலையத்திற்கு ரூ. 1 கோடி வழங்கப்படும்
—மாண்புமிகு முதல்வர் கலைஞர் ... 13

பாராளுமன்றக் குழுக்களின் பங்கு
—மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ.பெ.துரைசாமி ... 17

வெண்மைப் புரட்சியில் வியத்தகு சாதனை! ... 20

ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல!
—கருத்து விளக்கப் படங்கள் ... 24

பல்லக்கும் காட்டு நாயக்கன்களும் ... 26

பெரியார் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள் ... 29

காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான் ... 33

தமிழகத்தில் தொழில் கூட்டுறவும் வேலை வாய்ப்பும் ... 35

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள் ... 40

அனைத்திந்தியக் கூட்டுறவு வார நிறைவு விழா ... 42

நலிவுற்றோர்க்கு வாழ்வுதரும் நலத்திட்டங்கள் ... 44





மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் சென்னையில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் ''ஹார்மோனி இந்தியா'' என்ற அமைப்பைத் தொடங்கி வைத்தார் (22-11-90).

# இனிய இந்தியாவை உருவாக்குவோம்!

கலைவாணர் நடத்திய 'கிந்தனார்' என்ற ஒரு கதாகாலட்சேபத்தை முழுமையாகக் கேட்டவன்நான்; கேட்டு ரசித்தவர்களில் பலர் இங்கு இல்லாவிட்டாலும் சிலர் இங்கு இருக்கக்கூடும்.

நந்தனார் என்ற புராணக் கதையில் நந்தனார் தில்லையில் இருக்கிற நடராச பெருமானைச் சென்று வணங்குவதற்குப் பல்வேறு தடைகள். தில்லைக்குச் சென்ற பிறகும்கூட, நந்தி வழி மறித்தது என்று கதை கூறுகிறது. இப்படி தில்லையிலே உள்ள ஆண்டவனைத் தொழுவதற்கே நந்தன் என்ற பக்தனுக்கு இடமில்லை என்பதை அந்தக்கதை மையமாகக் கொண்டு வழங்கப்படுகின்ற ஒரு புராணமாகும்.

அதையே கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் மாற்றி 'கிந்தனார்' என்கின்ற பெயரில் தமிழகத்தின் பல்வேறு நகரங்களில், கிராமங்களில், கலை நிகழ்ச்சிகளில் நடத்திக் காட்டினார்.

நந்தன் ஆலயத்திற்குச் செல்ல விரும்பினார். இடம் கிடைக்கவில்லை. கிந்தன் பள்ளிக்கூடத்திற்குச் செல்ல விரும்புகிறான், இடம் கிடைக்கவில்லை, சாதியின் காரணமாக, மதத்தின் காரணமாக, பேதங்களின் காரணமாக, உயர்வு தாழ்வு என்ற அடிப்படையில், கிந்தனுக்குப் பள்ளிக்குச் செல்ல அனுமதி கிடைக்கவில்லை. எப்படியும் சென்றே தீருவது என்று, சென்னைக்கு ரயிலில் திரும்புகிறான். அந்த ரயிலில் கிந்தன் பயணம் செய்யும்போது அந்த ரயிலைப் பற்றி ஒரு பாட்டுப் பாடுகிறான். ''ரயிலே... ரயிலே...'' என்ற அந்தப் பாடல் ஆரம்பமாகும்.

அதிலே சொல்லுகிறான் - ரயில் ஒன்றுதான் முஸ்லிம் என்றும், இந்து என்றும், கிருத்துவர் என்றும், சீக்கியர் என்றும், புத்தர் என்றும், உயர் சாதிக்காரர் என்றும், தாழ்ந்த சாதிக்காரர் என்றும், செட்டியார், முதலியார், பிள்ளை என்றும் பேதம் பாராமல், எல்லோரையும் ஏற்றிச் செல்கின்ற ஒன்றே ஒன்று ரயில் தான் என்று அந்த ரயிலைப் பாராட்டிப் பாடுகிறான்.

எனவே அந்தப் பேதங்களை எல்லாம் ரயில் அகற்றிக் காட்டுகிறது என்பதைத் தன்னுடைய நகைச்சுவை வாயிலாக எடுத்துச் சொன்ன கலைவாணர் அரங்கத்தில் பேதங்களை வீழ்த்துவதற்காக நாமெல்லாம் கூடியிருப்பது மிகமிக பொருத்தமான ஒன்று என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஹார்மோனி இந்தியா என்ற இந்த ஆங்கிலச் சொற்றொடருக்கு நண்பர் லத்தீப் அவர்கள் ''சௌசன்ய இந்தியா'' என்று குறிப்பிட்டார்கள். நான் அதை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்பது அவருக்குத் தெரியும். இந்தியாவில் வாழ்கிற நாம் சௌசன்யமாக இருக்க வேண்டும் என்று புழங்குகிற மொழியில் அவர் சொன்னார். சௌசன்ய இந்தியா என்றால் சில பேருக்கு வாயிலே நுழையாமல் கூட போய்விடும். எனவே இதற்கு மிகமிக பொருத்தமான பெயர் - எந்த இந்தியாவை நாம் காண விரும்புகிறோம்? ஒன்றுபட்ட இந்தியா என்று நாம் சொல்லுகிறோம்! சரி! ஒன்றுபட்ட இந்தியா என்று நாம் சொல்லும்போதே, அது பல கூறுகளாக இருக்கிறது என்பது உண்மையாகிறது. இந்தியா என்பதை நாம் ஒத்துக் கொள்கிறோம். எனவேதான் ஒன்றுபட வேண்டும் என்று சொல்கிறோம். இரண்டாக - மூன்றாக - நான்காக - ஐந்தாக இருந்தாலும், அந்த வேற்றுமையில் ஒற்றுமைகாண வேண்டும் என்று சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

எனவே ஒன்றுபட்டவர்கள் நாம் என்று சொல்லி, வேறுபட்டு இரு என்பதைத் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லாமலே, இதை இந்த சொற்றொடரை ''இனிய இந்தியா'' என்று அழைக்கலாம் என நான் கருதுகிறேன்.

இனிய என்பதில் அமைதி அடங்கியிருக்கிறது. இனிய என்பதில் வெறுப்பற்ற தன்மை அடங்கியிருக்கிறது. இனிய என்பதில் கசப்பற்ற உணர்வு அடங்கியிருக்கிறது. இனிய என்பதில் ஒற்றுமை அடங்கி இருக்கிறது. இனிய என்பதில் உறவு அடங்கியிருக்கிறது. எனவே ''இனிய இந்தியா'' என்று இந்த அமைப்பின் பெயர் இருக்கலாம். ஏனென்றால் ஆங்கிலம் படித்தவர்களிடத்திலே மாத்திரம் நாம் ஒற்றுமையை - உறவை-உருவாக்க இந்த அமைப்பைத் தோற்றுவிக்கவில்லை. ஆங்கிலம் தெரியாத, பிற மொழி பயின்ற - அல்லது வேறு மொழிகளைத் தாய் மொழியாகக் கொண்டிருக்கிற எல்லா மக்களிடத்திலும் நாம் சொல்லும் போது அந்தந்த மொழியில் இதனுடைய பொருளைக் குறிக்கும்போது தமிழில் இனிய இந்தியா என்று குறித்தால் பொருத்தமாக இருக்கும் என்று நான் நம்புகின்றேன்.

வள்ளுவரைப் பற்றி குறிப்பிட்டார்கள். ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற திருமூலரைப் பற்றி-அவருடைய அந்த இனிய வாசகத்தைப் பற்றி - பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி நினைவுபடுத்துவார்கள். ஒன்றே குலம்! ஒருவனே தேவன்! என்ற அந்த சொற்றொடர் திருமூலர் காலத்திலேயே பயன்படுத்தப்பட்டது.

ஒன்றே குலமாக இல்லாத காரணத்தினால், ஒருவனே தேவன் என்று

வழங்கப்படாமல் ஆயிரக்கணக்கான தெய்வங்கள் வழங்கப்பட்டு, அதன் காரணமாக மாறுபாடுகள், முரண்பாடுகள், பேதங்கள், கலவரங்கள், அமளிகள் ஏற்பட்ட காரணத்தினால் அன்றைக்கே ஒரு திருமூலர் தேவைப்பட்டிருக்கிறார்.

சாதிப் பிரிவுகளால் சமுதாயம் சீர்குலைவதை காணச் சகிக்காமல் தான் வள்ளுவர் பெருமான் குறிப்பிட்டார்.

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்**

என்று குறிப்பிட்டார்.

எல்லா உயிர்களும் பிறப்பால் ஒத்தவர்கள்தான், ஒப்பானவர்கள் கொண்டோம். ஆனால் அதற்கு நியாயமான பொருள், செய்கின்ற தொழில் ஒவ்வொன்றிலும் சிறப்பு - சலவைத் தொழிலாளர்களில் யார் சலவையை நன்றாகச் செய்கிறார்களோ அது சிறப்பான தொழில். ஐ.ஏ.எஸ்; அதிகாரிகளில் யார் நல்ல திறமையான ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருக்கிறாரோ அந்தத் தொழிலில் அவர் சிறப்பானவர். இப்படித்தான் செய் தொழில் வேற்றுமை என்பதை எடுத்துக் கொள்ள வேண்டுமேயல்லாமல் ஒவ்வொரு தொழிலுக்கும் ஒரு சாதி என்று எடுத்துக்கொண்டு அது ஆயிரம் சாதிகளாக ஆகி, கவிச்சக்ரவர்த்தி பாரதியார் கேட்டார் - ''ஆயிரம் உண்டிங்கு சாதி, இதில் அந்நியர் வந்து புகல் என்ன நீதி!'' திலே இன்றைக்கு வீழ்த்தப்பட வேண்டும், சமுதாயத்திலே புறக்கணிக்கப்பட வேண்டும் என்று யாரும் கூற முடியாது.

அத்திமரம் பார்த்திருக்கிறோம் நாம். அத்தி மரத்தில் உச்சியிலே இருக்கின்ற தழைக்கு அருகாமையில் உள்ள கொப்பிலும் காய் காய்க்கிறது. அத்தி மரத்தில் கிளையிலும் காய் காய்க்கிறது. அடி மரத்திலும் காய் காய்க்கிறது. வேரிலே காய்த்த காய் புடலங்காய், அடி மரத்திலே காய்த்த காய் வேப்பங்காய், கிளையிலே காய்த்த காய் பரங்கிக்காய், கிளை நுனியிலே-தழையில்-காய்த்த காய் சுண்டைக்காய் என்று யாரும் சொல்வதில்லை. கிளையிலே காய்த்ததும், நுனிமரத்திலே காய்த்ததும், அடி மரத்திலே காய்த்ததும், வேரிலே

---

**இனிய என்பதில் அமைதி அடங்கியிருக்கிறது.**
**இனிய என்பதில் வெறுப்பற்ற தன்மை அடங்கியிருக்கிறது.**
**இனிய என்பதில் கசப்பற்ற உணர்வு அடங்கியிருக்கிறது.**
**இனிய என்பதில் ஒற்றுமை அடங்கியிருக்கிறது.**
**இனிய என்பதில் உறவு அடங்கியிருக்கிறது.**
**எனவே 'இனிய இந்தியா' என்று இந்த அமைப்பின் பெயர் இருக்கலாம்.**
**— முதல்வர் கலைஞர்**

---

தான். எப்போது ஒப்பானவர்கள் அல்ல என்றால் ''சிறப்பு ஒவ்வா செய் தொழில் வேற்றுமையால்!'' - பிறப்பு எல்லோருக்கும் ஒன்று போலத்தான் - ஒப்பானதுதான். ஆனால் சிறப்பு ஒவ்வா செய்தொழில் வேற்றுமையால் - இதைக்கூட நாம் தவறாக இடைக்காலத்திலே எடுத்துக் கொண்டோம். அதற்கு பொருள் கண்டோம்.

'செய்தொழில் வேற்றுமையால் சிறப்பு ஒவ்வாது' என்று எடுத்துக் கொண்டோம். செய்கின்ற தொழில் ஒருவர் ஆசிரியராக இருந்தால் ஒருவர் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருந்தால், ஒருவர் மண்வெட்டி கூலி வேலை செய்பவராக இருந்தால், ஒருவர் வேளாண்மைத் தொழிலைச் செய்பவராக இருந்தால் - வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்ட விவசாயி ஒரு சாதி! அதைப்போலவே பூஜை செய்கின்ற புரோகிதர்கள் ஒரு சாதி! சலவைத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளி ஒரு சாதி என்று இப்படி செய்தொழில் வேற்றுமை என்பதற்கு நாம் தவறான பொருள் என்று கேட்டார். அப்படி கேட்ட போது அந்நியர் வந்து நுழைய அவர்களுக்கு அனுமதி கிடையாது என்று சொன்னாலும், ''ஆயிரம் உண்டு இங்கு சாதி'' என்பதை ஆதங்கத்தோடுதான் அன்றைக்கே பாரதி ஒத்துக்கொள்ள வேண்டியிருந்தது.

அதைத்தான் புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் முப்பது கோடி மக்கள் உண்டென்றாலும், சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகை இருக்கும்!'' என்று வருத்தப்பட்டான்.

அந்த வருத்தத்தை, வேதனையை நீக்கி, சாதிகளால் மதங்களால் நாம் பிளவுபட்டு விடாமல் ஒற்றுமையாக இயங்க, இனிய இந்தியாவை உருவாக்க அனைவரும் ஒன்றுபட வேண்டும். ஏழை பணக்காரர் இருக்கலாம். ஆனால் ஏழை பணக்காரன் என்ற நிலை மாறுவதற்கு, பொருளாதாரத் துறையில் நாம் வேகமாக விரைவாக புரட்சிகரமான திட்டங்களைக் கொண்டு முன்னேற வேண்டும் என்றாலும்கூட, ஏழையாக - பணக்காரனாக - இருக்கிற காரணத்திலேயே, அவன் சமுதாயத் காய்த்ததும் அத்தனையும் அத்திக்காய் என்பதைப் போல், ஆண்டவன் படைப்பிலே எங்கே மனிதன் பிறந்திருந்தாலும் அனைவரும் மனிதன் தான். அத்திமரத்திலே காய்த்தது அத்தனையும் அத்திக்காய் என்பதைப் போல் - அனைவரும் மனிதர்கள் தான் என்கின்ற அந்த உணர்வை நாம் பெற்றாக வேண்டும்.

அதற்கு இந்த அமைப்புக்களைப் போல - அரசின் சார்பிலே மாத்திரம்தான் இந்த முயற்சிகளைச் செய்யவேண்டும் என்று இல்லாமல் ஆன்றோர்களை - சான்றோர்களை, அமைதியிலே நாட்டம் கொண்டவர்களை, இது போன்ற அமைப்புக்கள் பயன்படுத்திக்கொண்டு மக்களிடத்திலே சீரிய செழுமிய அமைதிக்குத் தேவையான பிரச்சாரத்தை நாம் செய்தாக வேண்டும்.''

**(சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற 'ஹார்மோனி இந்தியா' அமைப்பின் தொடக்க விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து)**

**(22.11.90).**



# சக்தி சோயா தொழிற்சாலை தொடக்க விழாவில் முதல்வர் கலைஞர் உரை

"இங்கு நடைபெறுகின்ற இந்த இனிய விழா நிகழ்ச்சியில் நான் கலந்து கொண்டு அரசுக்கும் உரிமையுடைய கூட்டுத்துறை நிறுவனமான இந்தத் தொழிற்கூடத்தைத் தொடங்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

நண்பர் மகாலிங்கம் அவர்களுடைய அசோசியேட் என்ற அளவிலே உள்ள இந்த நிறுவனத்தோடு தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் - டிட்கோ என்று அழைக்கப்படுகின்ற நிறுவனம் ஒரு கூட்டுத் துறை என்ற அமைப்பில் இன்றைக்கு இந்த சோயா நிறுவனத்தைத் தொடங்கியிருக்கின்ற நிலையை நீங்களெல்லாம் காண்கிறீர்கள்.

1970-ஆம் ஆண்டில் அன்றைக்கு அரசுப் பொறுப்பிலே இருந்த நான், இந்த கூட்டுத் தொழில் துறையை அறிமுகப்படுத்த வேண்டும் என்று விரும்பி, சட்டமன்றத்திலே 'ஜாயின்ட் செக்டார் - கூட்டுத் துறை என்ற அறிமுகத்தைச் செய்து, அதற்குப் பிறகு தொடர்ந்து இன்றுவரையில் அந்த முயற்சிகளின் காரணமாக 56 தொழில்களில் 'டிட்கோ' நிறுவனம் இன்றைக்கு ஈடுபட்டிருக்கிறது.

இந்த 56 தொழில்களில் ஈடுபட்டிருக்கின்ற இந்த நிறுவனத்தின் சார்பிலும், அந்தக் கூட்டுத் துறையின் சார்பிலும், ஆயிரத்து இருநூற்றி நாற்பது கோடி ரூபாய் முதலீடு செய்யப்படவும், ஏறத்தாழ 22 ஆயிரம் பேர் 'டிட்கோ' கூட்டு வைத்துக் கொண்டிருக்கின்ற நிறுவனங்களின் சார்பில் வேலைவாய்ப்பைப் பெறவும், ஒரு முயற்சி இன்றைக்கு வெற்றிகரமாக தமிழகத்தில் நிகழ்ந்திருக்கிறது என்றால், அதற்குக் காரணம் 70-ஆம் ஆண்டு அன்றைக்கு தி.மு.க. அரசு எடுத்த இந்தத் தொழில் கொள்கைதான்.

இப்போது மீண்டும் ஆட்சிக்கு வந்தபிறகு, அந்த ஜாயிண்ட் செக்டார் என்பதைப்போல இப்போது வேறு ஒரு முயற்சியும் தொழில்களை ஊக்கப் படுத்த இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. இது அசோசியேட் செக்டார் என்பதாகும். கூட்டுத் துறையில் அரசின் பங்குத் தொகை 26 சதவிகிதம், மகாலிங்கம் போன்ற தொழில் அதிபர்கள் அல்லது தொழில் நிறவனங்களின் பங்குத் தொகை 27 சதவிகிதம், மீதமுள்ள பங்குத் தொகை பொது மக்களுடைய பங்குத் தொகை என்பது கூட்டுத் துறையின் இலக்கணம்.

இப்போது அசோசியேட் செக்டாரில் அரசின் பங்குத் தொகையாக அதாவது டிட்கோவின் பங்குத் தொகையாக 11 சதவிகிதம் போடப் படுகிறது. அந்தத் தொழில் நல்ல வளர்ச்சி பெற்ற வுடன், அந்த பங்குத் தொகை திரும்பப் பெறப் பட்டு, இன்னொரு தொழிலுக்குத் தரப்படுகிறது. எனவே அசோசியேட் என்கிற முறையிலேதான் இந்தத் தொழில் துறையில் இரண்டாவது ஒரு கட்டத்தை இந்த அரசு இன்றைக்கு நிறைவேற்றி அதன் மூலம் ஒரு நல்ல பலனை, தொழில் துறையில் காணமுடியும் என்று நம்புகிறது.

இங்கே இந்த சோயா நிறுவனத்தைப் பொறுத்த வரையில் டிட்கோ சார்பாக 26 சதவிகிதத்திற்கு ஏறத்தாழ 2 கோடியே 12 இலட்ச ரூபாய் முதலீடும், நண்பர் மகாலிங்கம் அசோசியேட் சார்பாக 25 சதவிகிதத்திற்கு ஏறத்தாழ 2 கோடி ரூபாய் முதலீடும் மற்றும் பொது மக்கள் பங்காக 4 கோடி ரூபாய் முதலீடும், இந்திய தொழில் நிறுவனம் மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கனரா வங்கி இவை களைப் போன்ற நிறுவனங்களின் சார்பாக ஏறத் தாழ 16 கோடி ரூபாயும் மொத்தம் 24 கோடி ரூபாய் முதலீட்டில் இந்த தொழிற்சாலை தொடங்கப் பட்டிருக்கிறது.

இந்த சோயா விதைகளை மூலப் பொருளாகக் கொண்டு இந்தப் பணிகளை இந்தத் தொழிற் சாலை ஆற்ற இருக்கிறது.

**ஊடு பயிர் சோயாவினால்**
**உரச்சத்தும் கிடைக்கிறது!**

நான் நண்பர் மகாலிங்கத்திடம் விசாரித்த போதும், தம்பி மாணிக்கத்திடம் பேசியபோதும், டிட்கோ நிர்வாகிகளோடு கலந்து பேசியபோதும் எனக்குக் கிடைத்துள்ள தகவல்கள் சோயாவிதை களைத் தயாரித்துத் தரக்கூடிய நிலையில் தமிழ்நாட்டு விவசாயிகள் அதிகமாக ஆர்வம் கொள்ளவில்லை. அக்கறை காட்டவில்லை, எனவே இந்தத் தொழிற் சாலைக்குத் தேவையான மூலப்பொருளை மத்தியப் பிரதேசத்திலிருந்துதான் பெற வேண்டியிருக்கிறது. ஏறத்தாழ ஆண்டு ஒன்றிற்கு ஒரு இலட்சம் டன் சோயா தேவைப்படுகின்றது என்றால்கூட அந்த ஒரு இலட்சம் டன்னில் இன்றைக்கு மத்தியப் பிரதேசத்திலிருந்து 40 ஆயிரம் டன் சோயா தருவிக்கப்படுவதாகவும், தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகளுக்கு அதில் அதிக அக்கறை ஏற்படாத காரணத்தாலும், அது ஆதாயம் தரக்கூடியது என்று அவர்கள் இன்னும் கருதாத காரணத்தாலும், பத்தாயிரம் டன் மாத்திரம் தான் இங்கே கிடைக்கிறது என்றும், ஆகவே நம்முடைய தேவையில் 1 இலட்சம் டன்னில் 50 ஆயிரம் டன்னை வைத்துக் கொண்டு தான், இன்றைக்கு இந்தத் தொழிற்சாலை நடை பெற இருக்கிறது என்பதையும் நான் புரிந்து கொண்டு இருக்கிறேன். இதற்குத் தனியாக நெற் கழனிகளைப் போலவே அல்லது கரும்புத் தோட்டங் களைப் போலவே கூட தனியாக நிலப்பகுதிகள் தேவை என்று கூட இல்லாமல், நெல், கரும்பு, பருத்தி இவைகளைப் பயிரிடுகின்ற அந்த நிலங்களில் கூட, ஊடு பயிராக இந்த சோயாவைப் பயிரிடுவதன் மூலம் அதன் நிலங்களுக்குத் தேவையான உரமும் கூட கிடைக்கின்றது.

இன்றைக்குப் பயன்படுத்தப்படுகின்ற உரங்களால், எருச் சத்துக்களால் நிலத்தின் தன்மை, நிலத்தின் வலிவு குறைகிறது என்கின்ற ஒரு குறைபாடு கூட சொல்லப்படுகிறது.

சோயாவை ஊடுபயிராகப் பயிரிடுகின்ற காரணத்தால் எந்தக்குறைபாடும் இல்லாத அளவிற்கு நிலங்கள் செழிப்பாக இருக்கவும், வேறு பயிர்கள் சோயாவைத் தவிர, அதனை ஊடுபயிராகப் பயன் படுத்துகிற நிலங்களில் வேறு பயிரை விளை வித்தால் அவைகள் நல்ல முதலீட்டைத் தரவும், இந்த சோயா இன்றைக்கு உபயோகமாகிறது என்கின்ற உண்மையும் கண்டு பிடிக்கப்பட்டிருக் கின்றது. இவைகளை ஆர்வத்தோடு அக்கறையோடு நம்முடைய விவசாயிகள் பயன்படுத்த வேண்டும். ஒரு சமுதாய அடிப்படையில் கூட இதனை நோக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் ராமன் இங்கே கேட்டுக் கொண்டார்.

இந்த சோயாவில் கொழுப்புச் சத்து அதிகம் இல்லாததும், புரதச் சத்து அதிகம் இருப்பதும் கூட உடல் ஆரோக்கியத்திற்கு மிகமிக தேவையான ஒன்றாக இருக்கிறது என்பதை நான் குறிப்பிட

**அட்டை சொல்லும் செய்தி**

## தேசிய ஒருமைப்பாடு உறுதிமொழி

**ம**றைந்த பிரதமர் திருமதி. இந்திராகாந்தி அவர் களின் பிறந்தநாள் விழா, தேசிய ஒருமைப்பாட்டு நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்தவகையில் 19.11.90 அன்று, காலை, சென்னையில், தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில், மாண்புமிகு அமைச்சர்கள், அரசு தலைமைச் செயலாளர் மற்றும் அரசு அலுவலர்கள் தேசிய ஒருமைப் பாடு உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேசிய ஒருமைப்பாடு உறுதிமொழியைப் படித்தார். அங்கு கூடியிருந்தோர் அனைவரும் அதைத் திரும்பச் சொல்லி, உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். உறுதிமொழி வாசகம் வருமாறு:-

''நாட்டின் சுதந்திரம், ஒருமைப்பாடு ஆகியவற்றைக் காக்கவும், வலுப்படுத்தவும், என்னை அர்ப்பணித்துச் செயல்படுவேன் என்று மனதார உறுதி கூறுகிறேன்.

''நான் ஒருபோதும் வன்முறையில் ஈடுபட மாட்டேன் என்றும், மதம், மொழி, வட்டார மற்றும் அரசியல் அல்லது பொருளாதார பேதங்களுக்கு அமைதியான முறையிலும், அரசியல் சட்டத்திற்குட்பட்டும், தீர்வு காணத் தொடர்ந்து பாடுபடுவேன் என்றும் நான் மேலும் உறுதி கூறுகிறேன்''.



## வேளாண் மகளிர் பயன் பெற...

தமிழ்நாட்டில் உள்ள 6 உழவர் பயிற்சி நிலையங்களில் 'டான்வா' என்ற 'வேளாண்மையில் தமிழகப் பெண்கள்' திட்டம், டென்மார்க் அரசின் முழு நிதி உதவியுடன் 1980ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. திருநெல்வேலி உழவர் பயிற்சி நிலையமும், இந்த ஆறு உழவர் பயிற்சி நிலையங்களில் ஒன்றாகும்.

வேளாண்மைத்துறை மூலம் இத்திட்டத்திற்காக 1986ஆம் ஆண்டு ரூ.3,21,45,000/- ஏழு ஆண்டுகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் வேளாண் மகளிருக்கு வேளாண்மை நுட்பங்களைச் செயல்முறை விளக்கம் மூலம் செய்து, காட்டுவதால், எழுதப்படிக்கத் தெரியாத பெண்களும் எளிதில் புரிந்து கொண்டு, அவரவர் களங்களில் திறமையுடன் புதிய தொழில் நுட்பங்களைக் கையாள முடிகிறது.

இத்திட்டம் தமிழகத்தில் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், செங்கை அண்ணா, தென்னார்க்காடு, தஞ்சாவூர், இராமநாதபுரம், புதுக்கோட்டை ஆகிய 6 மாவட்டங்களில் உழவர் பயிற்சி மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

வேளாண்மையில் ஈடுபடும் மகளிருக்கும் புதிய தொழில் நுட்பங்களைக் கற்றுக் கொடுத்து நிர்வாகத் திறமை அதிகரித்து, உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு இத்திட்டம் பெரும் உதவியாக இருக்கிறது. இத்திட்டத்தினைச் செயலாற்றும் வசதியாக டென்மார்க் அரசின் முழு நிதியுதவியில் ரூ.26 இலட்சம் செலவில் உழவர் பயிற்சி நிலைய அலுவலகக் கட்டடமும், உழவர் பயிற்சி நிலையத்தில் பணியாற்றுகின்ற பல்வேறு அலுவலர்களுக்கு 14 குடியிருப்புகளும் தற்போது திருநெல்வேலி இணை வேளாண்மை இயக்குனர் அலுவலக வளாகத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. —துரை. ராஜ்குமார்

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்

திருநெல்வேலி கட்டமொம்மன் மாவட்டம்.

---

கடமைப்பட்டிருக்கின்றேன். அது மாத்திரம் அல்ல. எனக்குத் தரப்பட்ட தகவலில் ஒரு ஐந்து சதவிகிதம் சோயா மாவை நாம் பயன்படுத்துகின்ற உணவுப் பண்டத்தில் கலந்தால் - ஏற்கனவே நம்முடைய உணவு தானியங்களில் சத்து குறைவாக இருக்கிறது. அது பயிரிடுகிறமுறையால் அல்லது அது பெறுகின்ற உரங்களால் எரு சத்துக்களால் உணவு தானியங்களுடைய வலிவுச் சத்து குறைந்திருக்கின்றது. அது மேலும் சமையல் செய்யப்படுகின்ற காரணத்தால் வேக வைப்பதால் அல்லது சுடுவதால் அல்லது வறுப்பதால் மேலும் அதனுடைய சக்தி குறைகிறது. இந்த சத்து குறையாமல் பார்த்துக் கொள்ள அந்தப் பண்டங்களோடு ஓர் ஐந்து சதவிகிதம் சோயா மாவு கலக்கப்படுமேயானால் அந்த சத்துக் குறைவை ஈடு செய்கின்ற பயனையும் இந்த சோயா மாவு அளிக்கின்றது. இவ்வளவையும் சொன்னால்கூட விவசாயிகளுக்குத் திருப்தி ஏற்படாது. சரி ஆதாயம் என்ன? வருமானம் என்ன? என்று கேட்கத் தோன்றும். ஏனென்றால் ஆதாயம் இல்லாமல் யாரும் ஆற்றைக் கட்டி இறைக்க மாட்டார்கள் என்று பழமொழியேகூட உண்டு. எனவே நான் அவர்களுக்கும் சொல்ல விரும்புகிறேன். நெல்லோ அல்லது பருத்தியோ, கரும்போ பயிரிடுகின்ற அந்த நிலங்களில் இதனை ஊடுபயிராக விளைவிப்பதன் மூலம் ஒரு விவசாயி ஏக்கர் ஒன்றிற்கு இரண்டாயிரம் முதல் மூவாயிரம் ரூபாய் வரை அதிக வருமானம் பெற முடியும். நெல்லின் மூலம் பெறுகின்ற வருமானத்தைவிட, கரும்பின் மூலம் பெறுகின்ற வருமானத்தைவிட, பருத்தியின் மூலம் கிடைக்கின்ற வருமானத்தை விட, ஊடுபயிராக இவைகளைப் பயிரிட்டால், அதன்காரணமாக மேலும் 2 ஆயிரம், 3 ஆயிரம் ரூபாய் ஏக்கர் ஒன்றிற்கு அதிக வருமானம் கிடைக்கும் என்பதையும் நான் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன்.

எனவே இந்த சோயாவைப் பயிரிடுவதற்கு விவசாயிகளை எல்லாம் ஊக்கப்படுத்துகின்ற வகையில் இந்த நிறுவனத்தின் சார்பாக இப்போது நான் ஓர் அறிவிப்பைச் செய்ய விரும்புகிறேன்.

இன்றைக்கு விவசாயிகளிடமிருந்து தமிழ்நாட்டில் இன்று சோயா பயிர் முதலுக்கு டன் ஒன்றிற்கு 4 ஆயிரத்து 500 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. இன்று முதல் அது 5,000 ரூபாயாக உயர்த்தித் தரப்படும். விவசாயிகளை ஊக்கப்படுத்தவும். சோயா தமிழகத்தில் ஏராளமாக விளையவும், எண்ணெய்ப் பற்றாக்குறையின் காரணமாக ஏழை எளிய நடுத்தர மக்கள் இன்றைக்குப் படுகின்ற அவலங்களைத் தீர்க்கவும் இன்றைக்கு நாம் எடுக்கின்ற முயற்சிகள் ஒரு பத்தாண்டுக் காலத்தில் பெரும் பயனை நிச்சயமாக விளைவிக்கும்.

சமூக நலத்துறை அமைச்சர் என்னிடத்திலே சொன்னார். குழந்தைகளுக்கு வழங்கப்படுகிற சத்துமாவு உருண்டையில் பயன்படுத்த இப்போது சோயா மாவு அரசிற்கு மத்தியப் பிரதேசத்தில் இருந்துதான் வந்து கொண்டு இருக்கிறது. இனி மேல் மாதா மாதம் நூறு டன் மாவு சக்தி சோயா நிறுவனத்திடமிருந்து சமூக நலத்துறையின் மூலமாக அரசு வாங்கும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

*(30-10-90 அன்று பொள்ளாச்சி அருகே மார்சிநாயக்கன் பாளையம் என்ற ஊரில் நடைபெற்ற சக்தி சோயா தொழிற்சாலை தொடக்க விழாவில் ஆற்றிய உரையிலிருந்து)*

நான்காம் அட்டை சொல்லும் செய்தி

# மக்கள் தேவைகளை நிறைவு செய்வோம்

## முதல்வர் கலைஞர்

"ஆசியாவின் ஜோதி, ஜனநாயகக் காவலர் பண்டித ஜவஹர்லால் நேருவின் பெயரால் 75-ஆம் ஆண்டு 11-வது மாதம் 14-ந்தேதி இங்கே இந்த ஆலையைத் தொடங்கி வைத்த எனக்குக்கிடைத்த பரிசு நேருவின் மகள் அன்னை இந்திரா காந்தி அடுத்த இரண்டு மாதத்தில் என்னுடைய ஆட்சியைக் கலைத்ததுதான். அப்போது எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியெல்லாம், நல்லவேளை, நம் ' ஆட்சி கலைக்கப்படும் முன் ஒரு ஜனநாயகக் காவலருடைய பெயரை நாம் எண்ணியவாறு வைப்பதற்கு ஒரு அவகாசம் கிடைத்ததே என்ற அக மகிழ்வுதான் எனக்கு ஏற்பட்டது. ஆறுதல் கிடைத்தது.

இது தொடங்கபட்டு எவ்வளவு பெரிய முன்னேற்றத்தை அடைந்திருக்கிறது என்பதை தயாப் அவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்றவர்களும் எடுத்துச் சொன்னார்கள்.

தமிழ்நாட்டில் சர்க்கரை ஆலைகள் எண்ணிக்கை முப்பது. அவற்றில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் பதிமூன்றும், அரசுத் துறையில் மூன்றும், தனியார் துறையில் பதினான்கும் இயங்குகின்றன.

சர்க்கரை ஆலைகளெல்லாம் - கூட்டுறவுத் துறையிலும், பொதுத் துறையிலும் இயங்க வேண்டு மேயல்லாமல் இது தனியார் துறைக்கு உரிமங்களை அளிக்கக் கூடாது என்ற நிலையை முன்பு நாங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது முடிவெடுத்து, அந்த முடிவினை மிகத் தீவிரமாகப் பின்பற்றினோம். ஆனால் அதற்குப் பிறகு தனியாருக்குச் சர்க்கரை ஆலைக்கான உரிமைகள் வழங்குகின்ற நிலைமை ஏற்பட்டது என்றாலும்கூட, மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் முதலில் எடுத்த முடிவில் நாங்கள் உறுதியாக இருந்து பணியாற்றி வருகிறோம்.

ஆனால் ஏற்கனவே தனியாருக்குத் தரப்பட்ட அந்தச் சர்க்கரை ஆலைகள் விரிவடையவோ, இயங்கவோ எந்தத் தடையையும் நாங்கள் விதிக்க வில்லை. இன்றைக்கு அகில உலக அளவில் எடுத்துக் கொண்டால் சர்க்கரைத் தொழிலில் இந்தியா முதலிடம் வகிக்கிறது. இந்தியாவில் உற்பத்தியாகின்ற சர்க்கரையில் இந்திய அளவில் தமிழ்நாட்டில் எட்டு சதவிகிதம் சர்க்கரை உற்பத்தியாகிறது. இன்னொரு பாராட்டத்தக்க அம்சம் என்ன வென்றால், சென்ற ஆண்டுவரையில் இந்தியா

> **தமிழ்நாட்டில் சர்க்கரை ஆலைகள் எண்ணிக்கை முப்பது. அவற்றில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் பதின்மூன்றும், அரசுத்துறையில் மூன்றும், தனியார் துறையில் பதினான்கும் இயங்குகின்றன.**

சர்க்கரையை இறக்குமதி செய்து அதன் காரணமாக அன்னியச் செலாவணி இழப்பிற்கு உள்ளானது. ஆனால் இந்த ஆண்டு மத்தியில் இருந்த அரசு எடுத்த முடிவின் காரணமாக விவசாயிகள் ஊக்கப் படுத்தப்பட்டதன் காரணமாகவும், ஆலைகளின் நிர்வாகம் செம்மைப்படுத்தப்பட்டதன் காரண மாகவும் இந்த ஆண்டு 2 இலட்சம் முதல் மூன்று இலட்சம் டன்வரை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யக்கூடிய ஒரு சிறப்பை இந்திய நாடு பெற்றிருக் கிறது.இதன் காரணமாக அன்னியச் செலாவணியை இந்தியா பெறமுடியும் என்ற நம்பிக்கையை நாம் பெற்றிருக்கிறோம்.

இந்த ஆலையைப் பொறுத்தவரையில் 77-ஆம் ஆண்டுதான் இதன் முறையான பணிகள் தொடங்கப்

பட்டன என்றாலும் 1250 டன் கரும்பைப்பிழியக் கூடிய திறன் வாய்ந்ததாக இருக்க இந்த ஆலை இன்றைக்கு இந்த விரிவாக்கத்தின் காரணமாக 3 ஆயிரம் டன் கரும்பைப் பிழியக்கூடிய திறன் கொண்டதாக இன்றைக்கு மாறுகிறது. அதற்குத் தான் இந்த விழா ஏற்பாடு.

77-78 ஆம் ஆண்டில் சுமார் 3,300 ஏக்கர் நிலத்திலேதான் கரும்பு விவசாயம் செய்யப்பட்டது. அதற்கு மாறாக இப்போது விவசாயிகளுடைய ஊக்கம், உற்சாகம், ஆர்வம், அக்கறை ஆகியவை காரணமாக 22 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் இந்த 90-91 ஆம் ஆண்டில் கரும்பு சாகுபடி செய்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆரம்பத்தில் ஒன்றரை இலட்சம் டன் கரும்பு அரைவை என்கிற நிலைமை மாறி இப்போது 6 இலட்சம் டன் கரும்பு என்ற அளவிற்கு உயர்ந்து இருக்கிறது.

சாலை வசதிகளைப் பற்றி இங்கே வரகூர் சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார். இந்தக் கரும்பு ஆலையினால் கிடைக்கின்ற வரிகளின் மூலம் ஏறத்தாழ 70 இலட்சம் செலவில் 67 சாலைகளைப் பழுது பார்க்கலாம். அஃதன்னியில் அரசின் சார்பில் புதிய சாலைகளை அமைக்கவும் பெரும் முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்த ஆண்டில் 13.5.'90-இல் அரூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு அடிக்கல் நாட்டு விழா நடத்தினேன். அந்த ஆலையின் திட்ட மதிப்படு 30 கோடி ரூபாய். மறைந்த நண்பர், எங்கள் கழகச் சுடர் கந்தப்பன் பெயரால் ''கந்தப்பன் கூட்டுறவு ஆலை'' என்று அந்த ஆலை அழைக்கப்படும் என்று நான் அன்றைக்குப் பெயர் சூட்டினேன்.

அடுத்து 1.7.'90 அன்று வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் விரிவாக்கம் 1250 டன் னிலிருந்து, 2,500 டன்னாக உயரக்கூடிய அளவிற்குச் செய்யப்பட்டு 10 கோடி ரூபாய் செலவில் அந்த விரிவாக்கத் திட்டம் நடத்தப்பட்டிருக்கிறது.

தென்னார்க்காடு மாவட்டத்தில் சேத்தியா தோப்புப் பகுதியில் 2,500 டன் பிழிதிறன் கொண்ட ஆலை 30 கோடி ரூபாய் செலவில் தொடங்கி வைக்கப்பட்டது. அண்மையில் 9.8.'90 அன்று அந்த ஆலைக்கு, மறைந்த கழக மறவர் எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தியின் பெயரில் ''எம்.ஆர். சர்க்கரை ஆலை'' என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

கட்சி அளவில் மாத்திரம் அல்லாமல், நாட்டு அளவில் உலக அளவில் புகழ்பெற்ற பண்டித ஜவஹர்லால் நேருவின் பெயரால் அமைந்துள்ள இந்தச் சர்க்கரை ஆலை விழாவில் தலைமை உரை ஆற்றிய அமைச்சர் தம்பி நேரு, நலிந்த மக்களுக்காக இந்த அரசு நிறைவேற்றி வருகிற தற்காலிகப் பாது காப்புத் திட்டங்கள் குறித்துப் பேசினார்.

இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில் ஏழை-எளிய மக்களுக்கு, இயலாதவர்களுக்கு, நலிவுற்றோர் களுக்கு, உடனடி நிவாரணப் பணிகளைச் செய்வது மாத்திரம் அல்ல, தொடர்ந்து எதிர்காலத்தில் ஒரு மாநிலத்தின் நீண்ட கால நல்வாழ்விற்கு வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதிலும் நாங்கள் கண்ணும் கருத்துமாக இருக்கிறோம்.

**''இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில் ஏழை எளிய மக்களுக்கு, இயலாதவர்களுக்கு, நலிவுற்றவர்களுக்கு உடனடி நிவாரணப் பணிகளைச் செய்வது மாத்திரம் அல்ல, தொடர்ந்து எதிர்காலத்தில் ஒரு மாநிலத்தின் நீண்டகால நல்வாழ்விற்கு வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதிலும் நாங்கள் கண்ணும் கருத்துமாக இருக்கிறோம்!''**

**— முதல்வர் கலைஞர்**

எத்தனை சர்க்கரை ஆலைகள் தொடங்கப் பட்டன, அடிக்கல் நாட்டப்பட்டன என்பதை யெல்லாம் இங்கே விளக்கினேன்.

ஆனால் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் நான் ஏற்றுக்கொண்ட சபதம்-மாதம் ஒரு தொழிற் சாலை வீதம் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்ட வேண்டும் என்பதாகும்.

அந்த சபதம் வீணாகாமல் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

விவசாயத் துறையில் இலவச மின்சாரம் வழங்கப்பட்டது பற்றி இங்கே பலரும் பாராட்டிப் பேசினார்கள். ஆனால் என்னைப் பொறுத்த வரையில் சில பெரிய திட்டங்கள் அறிவிக்கிற காரணத்தால் - பெரும் இழப்பிற்கு இடையே ஒரு அரசு இது போன்ற திட்டங்களை அறிவித்து விடுகிற காரணத்தால் - நாட்டு மக்களுடைய தேவைகள் அனைத்தும் முற்றுப்பெற்றதாக நான் கருதவில்லை.

விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் அளித்து விட்டோம். எனவே விவசாயிகள் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்தாகி விட்டது என்று எண்ணுகிற மனப்பான்மை எனக்குக் கிடையாது. வைக்கப்பட்டிருப்பது முற்றுப்புள்ளி அல்ல. 'கமா' தான் என்பதை உணர்ந்திருக்கிறேன். ஏனென்றால் தேவைகளுக்கு முடிவே கிடையாது.

மக்கள் பெருகப் பெருக அந்தப் பெருக்கத் திற்கு ஏற்ப தேவைகள் வளர்ந்து கொண்டே இருக்கும். எனவே ஒரு அரசு என்றைக்கும் அந்தத் தேவைகளை எல்லாம் நிறைவு செய்யக்கூடிய ஒரு அரசாக இருந்திட வேண்டும். அதைத்தான் இன்றைக்கு நாம் செய்து கொண்டிருக்கிறோம்.''

**— திருச்சி மாவட்டம் பெரம்பலூரில், 11.11.90 அன்று ஜவகர்லால் நேரு சர்க்கரை ஆலை விரிவாக்கம் மற்றும் தொழிலாளர் குடியிருப்புத் திறப்பு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து.**



# நூலகத்துறையின் குறிக்கோள்களும் சாதனைகளும்

மாண்புமிகு கல்வி அமைச்சர்

பேராசிரியர் க. அன்பழகன்

"நாடு நலம் பெற வீட்டிற்கு ஒரு நூலகம் தேவை'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். ''புனிதமுற்று மக்கள் புது வாழ்வு வேண்டில், புத்தகச்சாலை வேண்டும் நாட்டில் யாண்டும்'' என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார் கூறியுள்ளார்கள்.

''குறைந்த செலவில் நிறைந்த மக்களுக்குச் சிறந்த படிப்பை வழங்குவது நூலாகும்'' என்று எமர்சன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். சமுதாய மறுமலர்ச்சிக்கு அடித்தளமாக விளங்கும் நூலகங்கள் தமிழகமெங்கும் வளரவேண்டும் என்பதையும், நூலக இயக்கம் தழைக்க வேண்டும் என்பதையும், கருத்தில் கொண்டு, நூலகத் துறையைப் பொறுப் பேற்றுக் கொண்ட இரண்டாண்டு காலத்தில், பல்வேறு திட்டங்களையும், குறிக்கோள்களையும் வகுத்துக் கொடுத்துள்ளோம்.

### குறிக்கோள்களும் சாதனைகளும்

1. தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு பொது நூலகத்திற்கும் இலவச நிலம் பெறுதல்,

2. பொது நூலகங்கள் செயல்படும் ஊர்களில் உள்ள படித்த ஒவ்வொருவரையும் நூலக உறுப் பின்ராகச் சேர்த்தல்,

3. தமிழகத்திலுள்ள ஒவ்வொரு பொது நூலகத் திற்கும் பொது மக்களிடமிருந்து நன்கொடையாக போதிய தளவாடங்களைப் பெறுதல்,

4. பொது நூலகம் ஒவ்வொன்றுக்கும் ஒரு வழங்குமுனை திறந்து செயல்படுத்துதல்,

5. பொதுமக்களிடமிருந்து நூலகங்களுக்கு நன் கொடையாக நூல்கள், நாளேடுகள் மற்றும் பருவ இதழ்கள் பெறுதல்,

6. நூலகங்கள்தோறும் புரவலர் சேர்த்து நூலக இயக்கத்தை வளர்த்தல்,

7. இருபதாம் நூற்றாண்டின் இறுதிக்குள் ஒவ்வொரு நூலகத்தையும் சொந்தக் கட்டடத்தில் செயல்படச் செய்தல்,

ஆகிய குறிக்கோள்கள் அடிப்படையில் நல்ல பல சாதனைகள் படைத்துள்ளோம்.

### இலவச நிலம் பெறுதல்

மாநில அளவில் உள்ள 1558 கிளை நூலகங் களில், 115 நூலகங்கள் மட்டும் 1989-க்கு முன்பு சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வந்தன. நூலகக் கட்டடங்கள் கட்ட காலி மனைகள் இல்லாத காரணத்தாலும், நிதி வசதியின்மையாலும், நூலகக் கட்டடங்கள் கட்டமுடியாத நிலை இருந்து வந்தது. இந்நிலையை மாற்றி இலவச நிலம் பெறுதல் என்ற குறிக்கோளின்படி சொந்தக் கட்டடங்கள் கட்டு வதற்காக இலவசக் காலிமனைகள் பெறப்பட்டன.

காலிமனைகள் குறைந்த அளவு 5 சென்டி லிருந்து அதிக அளவு ஒரு ஏக்கர் வரையும், மதிப்பு ரூ.10,000/- முதல் ரூ.5 இலட்சம் வரையும், 493 காலி மனைகள் தனியாரிடமிருந்து பத்திரப்

**நூலக உறுப்பினர்கள் 1989க்கு முன்பு 15.47 இலட்சம் மட்டுமே இருந்தனர். படித்த அனைவரையும் உறுப்பினராக்கும் குறிக்கோளின் கீழ், தீவிர நடவடிக்கை எடுக்கப் பட்டு, தற்போது 2.56 இலட்சம் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப் பட்டுள்ளனர்.**



பதிவு செய்யப்பட்டும்,683 காலிமனைகள் உள்ளாட்சி நிறுவனங்கள் மூலம் பெறப்பட்டும், மொத்தம் 1,176 காலி மனைகள் ஊரின் மையப் பகுதி களில் பெறப்பட்டுள்ளன. இவ்வாறு இலவசமாகப் பெற்ற காலிமனைகளின் மொத்த மதிப்பு சுமார் ரூ.338 இலட்சமாகும்.

### நூலக உறுப்பினர் சேர்க்கை

நூலகங்கள் முழுமையாகப் பயன்பட வேண்டு மானால், படித்த அனைவரும் நூலகத்தில் உறுப் பினராகச் சேரவேண்டும். 1989-க்கு முன்பு 15.47 இலட்சம் உறுப்பினர்கள் மட்டுமே இருந்தனர். இக்குறை போக்கவும், நூலகம் முழுமையாகப் பயன்படவும் படித்த அனைவரையும் உறுப்பினராக்கும் குறிக்கோளின் கீழ் தீவிர நடவடிக்கை எடுக்கப் பட்டு, 2.56 இலட்சம் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும் உறுப்பினர்கள் சேர்க்கைத் திட்டம் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதால், பள்ளி மாணவ, மாணவியர்களும், நிறுவன உறுப்பினர்களும், படித்த பொதுமக்களும் உறுப்பினர் களாகச் சேர்ந்த வண்ணம் உள்ளனர்.

**மாநில அளவில் 1,558 நூலகங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 1989-க்கு முன்பு 115 நூலகங்கள் மட்டுமே சொந்தக் கட்டடத்தில் இயங்கி வந்தன. கடந்த இரண்டாண்டுகளில் நூலகங்களுக்கென கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்கள் 116 ஆகும். 51 நூலகக் கட்டடங்கள் கட்டும்பணி நடைபெற்று வருகிறது. மேலும் 300 கிளை நூலகக் கட்டடங்கள் கட்டும்பணி இவ்வாண்டு துவங்கப்பட உள்ளது.**

### தளவாடங்கள் நன்கொடை

நூலகங்களுக்குத் தேவையான தளவாடங்களை, நூலக ஆணைக் குழுக்களில் நிதி வசதியில்லாததால் வாங்க முடியவில்லை. பொது மக்களிடமிருந்து நூலகங்களுக்குத் தேவையான தளவாடங்களை நன்கொடையாகப் பெறும் குறிக்கோளின்படி, நூலக வளர்ச்சி மாநாடுகள் இதுவரை 11 மாவட்டங் களில் நடத்தப்பட்டன, மாநாடுகளின் வாயிலாக பொதுமக்களிடமிருந்து சுமார் ரூ.82 இலட்சம் மதிப்புள்ள தளவாடப் பொருட்கள் நன்கொடை யாகப் பெறப்பட்டுள்ளன. மற்ற மாவட்டங் களிலும் தளவாடப் பொருட்கள் நன்கொடை யாகத் தொடர்ந்து பெறப்படுகின்றன. மேலும் பொதுமக்களிடமிருந்து தளவாடங்கள் வாங்கு வதற்கென நிதியாக சுமார் ஒரு இலட்சம் அன்பளிப்பாகப் பெறப்பட்டுள்ளது.

### வழங்குமுனைகள் திறத்தல்

பொது நூலகச் சட்டப்படி 5,000 மக்கள் தொகை உள்ள ஊரில் ஒரு நூலகம் அமைக்கலாம். அதற்குக் குறைவான மக்கள்தொகை உள்ள ஊரில் ஒரு வழங்குமுனை அமைக்கலாம். 1989-க்கு முன்பு 1,543 நூலகங்களே செயல்பட்டு வந்தன. எனவே 5,000 மக்கள் தொகைக்குக் குறைவாக உள்ள ஊர்களில் வழங்குமுனை ஏற்படுத்தும் திட்டம் துவக்கப்பட்டது. அதன்படி ஒரு வழங்கு முனை திறக்க நான்கு நிபந்தனைகள் நிர்ணயிக்கப் பட்டன.

1. 5 முதல் 10 சென்ட் காலிமனை பெறல்.
2. வழங்குமுனை இயங்க இலவசக் கட்டடம்;
3. குறைந்தபட்சம் 100 உறுப்பினர்கள் சேர்க்கை

4. தளவாடங்கள் மற்றும் நிதி ரூ.10,000/-.

மேற்காணும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்த வகையில் இதுவரை 497 கிராமங்களில் வழங்கு முனைகள் திறக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வழங்குமுனைகளுக்காகக் கட்டடம் கட்ட தனியார் பத்திரப் பதிவு மூலம் 146 காலிமனைகளும், உள்ளாட்சி நிறுவனம் மூலம் 221 காலிமனைகளும் பெறப்பட்டுள்ளன.

**நூல்கள், பருவ ஏடுகள், நாளேடுகள் பெறுதல்**

நூலக ஆணைக்குழுக்களில் உள்ள நிதி வசதியைக் கொண்டு, தற்போது வெளிவரும் அனைத்து நூல்கள், பருவ ஏடுகள் மற்றும் நாளேடுகள் எல்லா நூலகங்களுக்கும் வாங்கமுடியாது. இந் நிலையைப் போக்க ஐந்தாவது குறிக்கோளின்படி பொதுமக்களிடமிருந்து 11 மாவட்டங்களில் சுமார் 1.63 இலட்சம் மதிப்புள்ள நூல்கள், நாளேடுகள் மற்றும் பருவ இதழ்கள் நன்கொடையாகப் பெறப் பட்டுள்ளன. மற்ற மாவட்டங்களிலும் இதேபோன்று பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நன்கொடைகள் பெறப்பட்ட வண்ணமுள்ளன. உதாரணமாக செங்கை-அண்ணா மாவட்டம், திருவூர் கிளை நூலகர் திரு. பழனி என்பவர் மேற்படி நூலகத் திற்கு 73 பருவ ஏடுகள் கிராம மக்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று வருகிறார். இதன் மதிப்பு சுமார் ரூ.4,000/- ஆகும்.

**புரவலர்கள் சேர்க்கை**

நூலகங்கள் வளர்ந்திட நிதி மிக முக்கிய மானது. போதிய நிதி வசதியில்லாத காரணத்தால், நூலகங்களின் தேவையைப் பூர்த்தி செய்ய முடிய வில்லை. எனவே ''புரவலர் சேர்க்கை'' குறிக் கோளின்படி ஒவ்வொரு புரவலரிடமிருந்தும் ரூ.1,000/- பெற்று, அத்தொகையை நீண்ட கால முதலீட்டில் வைத்து, அதன் மூலம் பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து நூலகத்திற்குத் தேவையான நூல்கள், நாளேடுகள் மற்றும் பருவ இதழ்கள் வாங்கி, அந்த இதழ்களில் புரவலர்களின் பெயருடன் ''நன்கொடை'' என்று முத்திரையிட்டு, நூல்கத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. இதுவரை மாநில அளவில் 210 புரவலர்கள் சேர்ந்துள்ளார்கள். மேலும் ஆர்வத்துடன் புரவலர் கள் சேர்ந்தவண்ணம் உள்ளனர்.

**சொந்தக் கட்டடங்கள்**

மாநில அளவில் 1,558 நூலகங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 1989-க்கு முன்பு 115 நூலகங்கள் மட்டுமே சொந்தக் கட்டடத்தில் இயங்கி வந்தன. 1989-க்குப் பிறகு கடந்த இரண்டு ஆண்டுகளில் நூலகங்களுக்கென கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்கள் 116 ஆகும். மேலும் 51 நூலகக் கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

மேலும் இவ்வாண்டு 300 கிளை நூலகக் கட்டடங்கள், ஒரு நூலகக் கட்டடம் ரூ.1/- இலட்சம் மதிப்பீட்டில் கட்டும் சிறப்புத் திட்டம் தீட்டப் பட்டு, அரசாணை வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து கட்டடப் பணி துவங்க உள்ளது. இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் 467 கட்டடங் களைப் பெற்று நூலகத்துறை வேகமாக வளர்ந்து வருகிறது.



***மோரைக் கடைந்து வெண்ணெய் எடுப்பது போல அறிவை வளர்த்துக் கொண்டு பயன்பெற வேண்டும்.***

**நூல்கள் வாங்குதல்**

நூலகங்களுக்கு வாங்கப்படும் நூல்கள் தரம் வாய்ந்தவைகளாக அமையவேண்டும் என்ற நோக்கில் சில நிபந்தனைகளை வகுத்துத் தந்துள்ளேன். அதன்படி முதல் கட்டமாக வாங்கப்படும் நூல் களைப் படித்துப் பார்த்து, பரிந்துரை செய்ய ஒரு குழுவும் அடுத்த கட்டமாக வரையறுக்கபட்ட நிபந்தனையின்படி தரமான நூல்கள் தேர்வு செய்ய ஒரு குழுவும் அமைக்கப்பட்டது. இதனால் நூலக இயக்ககத்தில் தரமான நூல்கள் தேர்வு செய்யப்பட்டு, ஒரு நூலின் 300 படிகள் வாங்கு கின்ற நிலையை மாற்றி 500 படிகளாக உயர்த்தி வாங்கும் நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது பதிப்பாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் பெரிதும் உதவும்.

**பணியாளர்கள் - ஒரு அலகு முறை**

1.4.82 முதல் நூலக ஆணைக்குழுப் பணி யாளர்கள் அரசுப் பணியாளர்களாக ஆக்கப் பட்டனர். ஆனால் மாவட்ட அளவில் தனித்தனி அலகில் செயல்பட்டு வந்தனர். அனைத்து நூலகப் பணியாளர்களையும் ஓர் அலகின் கீழ் பணிபுரிய வழிவகை வகுத்து, நூலகப் பணியாளர்களது பதவி உயர்வு தேக்கநிலையை மாற்றி, மாநில அளவில் ஒரு அலகின் கீழ் கொண்டு வந்து, அதிகமான பதவி உயர்வுக்கான வழிமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**இரண்டாம் பகுதித் திட்டப் பணிகள்**

மாவட்ட நூலக ஆணைக்குழு அலுவலகம் அமைக்கப்படாத சிதம்பரனார் மாவட்டம் மற்றும் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கு நூலக ஆணைக்குழு அலுவலகம் அமைக்க அரசாணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. இதனால் பொது நூலகச் சட்டப்படி ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் நூலக ஆணைக்குழுக்கள் ஏற்படுத்தும் நிலை உண்டாக்கப் பட்டுள்ளது. மேலும் புதிதாக உருவாக்கப்பட்ட பதவிகளில் பதவி உயர்வு மூலம் பணியாளர்கள் பயன்பெற வழி செய்யப்பட்டுள்ளது.

1990-91-ஆம் நிதியாண்டில் மேலும் 15 கிளை நூலகங்கள் திறக்கவும், கன்னிமாரா நூலகத்திற்கு கம்ப்யூட்டர் வாங்கி அமைக்கவும், நலிந்த மாவட்ட நூலக ஆணைக்குழுக்களுக்கு ரூ.12/- இலட்சத்தில் புதிய நூல்கள் வாங்கவும் அரசு நிதி வழங்க இசைவு பெறப்பட்டுள்ளது.

# செய்தித் துளிகள்

## இலவசப் பட்டா வழங்கல்

**மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு. க.சுந்தரம் அவர்கள், பொன்னேரி-திருத்தணி ஆகிய சட்ட மன்றத் தொகுதிகளில் மக்கள் குறைகளைக் கேட்டதோடு, மீஞ்சூர் பகுதிகளில் பலத்த மழையால் ஏற்பட்ட சாலை அரிப்புகளைப் பார்வையிட்டு அவற்றைச் செப்பனிடுவதற்கான பணிகளை மேற்கொள்வதற்குத் தக்க நடவடிக்கை மேற்கொண்டார். அத்துடன், திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியத்தில் 107 பேருக்கு இலவசப் பட்டாக்களையும் வழங்கினார்.**

## மதுரை மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையின் பணிகள்:

மதுரை மாவட்டத்தில் ரூ.19.5 கோடி கூட்டுறவுக் கடன் தள்ளுபடி செய்யப் பட்டுள்ளதாகவும், கூட்டுறவு நகர வங்கிகள் மூலம் ரூ.1 இலட்சம் வரை வீடு கட்ட கடன் உதவி வழங்கப்பட்டு வருவதாகவும், மதுரை மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் செய்தியாளரிடம் பேசும்போது தெரிவித்தார்.

## கோவை மாவட்டத்தில் அரசின் பணிகள்:

கோவை மாவட்டத்தில், குறிப்பாக கோவை மாநகரில் மட்டும் நடப்பு நிதியாண்டில் 2,500 பேருக்குத் தொழில் துவங்குவதற்காகக் கடன் உதவி வழங்கப் பட இருக்கிறது என்றும், முதல் கட்டமாகத் தொழில் தொடங்குவதற்காக, ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ.10,000 கடனும், இதில் ரூ.5,000 மானியத்துடன் 171 பேருக்கு உடனடியாக வழங்கப்பட இருக்கிறதென்றும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித்திட்டத்தின் கீழ் 100 பெண்களுக்கு ரூ.5,000 வீதம் மொத்தம் ரூ.5 இலட்சம் இலவசமாக வழங்கப்பட்டிருக்கிறதென்றும், கோவை மாவட்டத்தில் 21 ஊராட்சி ஒன்றியங்களில் 95,750 பேருக்கு எழுத்தறிவுப் பயிற்சி அளிக்கப் பட்டு வருவதாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. நா.இராமன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## மதுரை மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்:

மதுரை மாவட்டத்தில் 300 ஆட்டோக்கள் வாங்குவதற்காக ரூ.106.5 இலட்சமும், 15 டாக்சிக்கள் வாங்குவதற்காக ரூ.26.25 இலட்சமும், 150 சைக்கிள் ரிக்ஷாக்கள் வாங்குவதற்காக ரூ.7.50 இலட்சமும், மேலும் சிறுதொழில்கள் போக்குவரத்துகள், ஜெனரேட்டர்கள், பதிவுபெற்ற மருந்துக் கடைகள் வைப்பதற்காக ரூ.230 இலட்சமும் சிறுதொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் கடன் வழங்கப்பட்டிருக்கிறது.

பெரியார் அணையில் 3 கட்டப் பணிகள் முடிவடைந்து விட்டன. இதனால் அதிக நீர் பெரியார் அணையில் சேமிப்பதற்கு வழிபிறக்கும்; ரூ.300 இலட்சம் செலவில் பெரியார்-வைகைத் திட்டத்தின் கீழ் 18.56 கிலோ மீட்டர் தூரத்திற்குக் கால்வாய்கள் அமைக்கும் பணிகள் முடிவடைந்து விட்டன. இதனால் 39 எக்டேர் நிலம் கூடுதலாகப் பாசன வசதி கிடைக்கும்.

வைகை அணைக்கும் பேரணைக்கும் இடையே இணைப்புக் கால்வாய் ரூ.25 கோடி செலவில் அமைக்கும் திட்டத்திற்கு அரசின் ஒப்புதல் கிடைத்து விட்டது. உலக வங்கி மற்றும் மத்திய நீர்க்குழுவின் ஒப்புதல் கிடைத்தவுடன் பணிகள் தொடங்கப் படும். மத்திய-மாநில அரசுகளின் உதவியுடன் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தித் திட்டத்திற்காக ரூ.34.89 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டிற்கு ரூ.261.4 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. நடப்பு நிதியாண்டில் இதுகாறும் 1,675 பெண்கள் உள்பட 4,160 பேருக்கு ரூ.130.57 இலட்சம் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இதில் 2,012 ஆதிதிராவிடர்களுக்கு ரூ.56.15 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டிருக்கிறது.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், நடப்பு நிதியாண்டில் ரூ.590.2 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக 3,600 வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இதில் ஆதி திராவிடர்களுக்கு 465 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. கிராமச்சாலைகள் திட்டத்தின் கீழ் சேடப்பட்டி, திருமங்கலம், மேலூர், கள்ளிக்குடி, உசிலம்பட்டி, வாடிப்பட்டி, கொட்டாம்பட்டி ஒன்றியங்களிலுள்ள 7 கிராமங்களில் சாலைகள் அமைப்பதற்காக ரூ.37.7 இலட்சம் தமிழக அரசால் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பேருந்துச் சாலைகளை மேம்படுத்துவதற்காக ரூ.60 இலட்சம் நடப்பு நிதியாண்டில் ஒதுக்கப் பட்டிருக்கிறது.

**இவ்வாறு, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மணிமாறன் இ.ஆ.ப. அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.**

## விவசாயிகளின் மேம்பாட்டிற்கு

காமராஜர், பசும்பொன், இராமநாதபுரம் மாவட்டங்களில் 1,67,000 விவசாயிகளுக்கு 41 கோடி ரூபாய் விவசாயக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதாகவும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தொடக்க கூட்டுறவு வங்கியின் மூலம் ரூ.13 கோடி 70 இலட்சம் பயிர்க்கடன் வழங்கப்பட இருப்பதாகவும், சிறு மற்றும் குறுநில நில விவசாயிகளுக்கு மத்திய காலக் கடனாக ரூ.3 கோடி மற்றும் 5 இலட்சம் ரூபாயும், நகைக் கடனாக ரூ.28 கோடியும், நலிந்த பிரிவினருக்கு ரூ.12.85 கோடியும், சிறுதொழில் மற்றும் குடிசைத் தொழில் செய்வதற்கு ரூ.25 இலட்சமும் கடனாக வழங்கப்பட இருப்பதாகவும், கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் திரு.சாகுல் அமீது அவர்கள் தெரிவித்துள்ளார்.

## திருச்சி-இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலை

திருச்சி-இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவதற்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. திருப்பத்தூரில் 110 கிலோவாட் கொண்ட மின்நிலையம் ரூ.1 கோடி செலவில் அமைக்கப்பட இருக்கிறது. அதேபோல, இளையான்குடி தொகுதியில் சாலைக் கிராமத்தில் 60 கிலோவாட் சக்தி கொண்ட துணைமின் நிலையம் அமைக்கப்பட இருக்கிறது. இத்தகவலை, மாண்புமிகு பொதுப்பணி மற்றும் மின்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் காரைக்குடியில் நடைபெற்ற ஒரு அரசு விழாவில் தெரிவித்தார்.

## மீன் வளர்ப்பினை மேம்படுத்த

தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டை, தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கடலூர், சிதம்பரனார் மாவட்டத்தில் தூத்துக்குடி ஆகிய இடங்களில் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை தனியாகத் துவக்குவதற்கு அரசு ஆணை பிறப்பித்திருக்கிறதென்றும், மீனவர்களுக்குக் கடந்த ஆண்டு 30,000 வீடுகளும், நடப்பு நிதியாண்டில் 3,000 வீடுகளும் கட்டப்பட்டிருப்பதாகவும், தமிழ்நாட்டில் இறால் மீன் வளர்ப்பை ஊக்குவிக்கும் வகையில் 3 உவர் நீர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை புதிதாகத் துவக்குவதற்கு அரசு ரூ.45.78 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதாகவும் மாண்புமிகு கால்நடைப்பராமரிப்புத் துறை அமைச்சர் திரு.சந்திரசேகரன் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாக்களில் கலந்து கொண்டபோது தெரிவித்தார்.




### அரசினர் பொது மருத்துவமனை

# நரம்பியல் நிலையத்திற்கு ரூ.1 கோடி வழங்கப்படும்

### - முதல்வர் கலைஞர்

பொதுவாகப் பொன் விழா, வைர விழா, நூற்றாண்டு விழா, வெள்ளி விழா இவைகள்தான் கொண்டாடப்படுவது வழக்கம். ஆனால் சென்னைப் பொதுமருத்துவமனை நரம்பியல் துறைக்கு நாற்பதாம் ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்படுவது புதுமையானது. ஒருவேளை அடுக்குச் சொல்லில் வரவேண்டும் என்பதற்காக ''நரம்பியல் துறையின் நாற்பதாம் ஆண்டு விழா'' என்று தலைப்புத் தந்திருக்கிறார்களோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. இருந்தபோதிலும்கூட ஏதாவது ஒரு விழாவின் பெயரால் என்னை அழைத்து கோரிக்கைகளை வைக்க வேண்டும் என்று தந்திரமாகக்கூட இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டிருக்கலாம்.

இந்தத் துறையின் தோற்றத்திற்கு - குறிப்பாகத் தமிழ்நாட்டில், இந்தியாவிலேயே முதல் தடவையாகத் தோற்றுவிப்பதற்குக் காரணகர்த்தாவாக இருந்தவர் டாக்டர் ராமமூர்த்தியாவார். அவரை இங்கே அறிமுகப்படுத்தியபோது 68 வயது இளைஞர் என்று சொன்னார்கள். 68 வயதுக்கே அவர் இளைஞர் என்றால் 67 வயதுடைய நான் அவரைவிட இளைஞன் என்று மகிழ்ச்சியடைகிறேன். அவருக்கும் எனக்கும் உள்ள நட்பு ஆழமானது. சூழ்நிலையைப் பொறுத்து ஏற்பட்ட நட்பு அல்ல இது. 1967 ஆம் ஆண்டுக்கு முன்பே அவரை நான் நன்கு அறிவேன். 67 ஆம் ஆண்டு என்னுடைய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள், தமிழக முதல்வராக ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, இந்த மருத்துவமனையிலே அவருடைய துறையைச் சார்ந்த சில வசதிகளைச் செய்யவேண்டும் என்று பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த என்னை அவர்கள் அணுகிய நேரத்தில், 67 ஆம் ஆண்டிலேயே தலையில் ஏற்படும் காயங்களுக்கான சிகிச்சைப் பிரிவு ஒன்று உருவாக்குவதற்கு அவருக்கு அரசின் சார்பில் எல்லா வகையான ஒத்துழைப்பும் தந்தேன்.

அதற்குப் பிறகு நரம்பியல் துறைக்கான ஒரு தனி மனைக் கட்டடம் எழுப்பப்பட வேண்டும் என்கின்ற ஆவலை அவர் தெரிவித்தார். அதற்கான கோப்பு முதலமைச்சராக இருந்த அண்ணா அவர்களுக்குச் செல்லவேண்டும் என்றாலும்கூட, பொதுவாகவே அரசுத் துறையில் கோப்பு என்பது சற்று மெதுவாகத்தான் நகரும். கேட்டால் அவசர முடிவுகள் எடுக்கக்கூடாது. நிதானமாக முடிவுகளை எடுக்க வேண்டும் என்று கூறுவார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் அவசர முடிவுகள் எடுப்பதில்லை. ஆனால் விரைவான முடிவு எடுப்பவன். அவசரத்திற்கும், விரைவிற்கும் வேறுபாடு உண்டு. அவசர முடிவு என்பது Hasty decision , விரைவான முடிவு என்பது Quick decision, அப்படி விரைவான முடிவு எடுக்க வேண்டும் என்பதில் என்றைக்குமே நான் ஆர்வம் - படைத்தவன் என்ற காரணத்தால், இது எவ்வளவு விரைவிலே இந்த மருத்துவமனை இங்கு அமைகிறதோ அவ்வளவு மக்களுக்கு நல்லது என்ற எண்ணத்தோடு, கோப்பினை வழக்கமாக சம்பிரதாய ரீதியில் முதலமைச்சர் அண்ணா அவர்களுக்குப் போய்ச் சேரட்டும் என்று விட்டு விடாமல், என்னுடைய துறை பொதுப்பணித்துறை மருத்துவத்துறை அல்ல என்றாலும்கூட, அந்தக் கோப்பினை நானே அறிஞர் அண்ணா அவர்களிடத்திலே எடுத்துச்சென்று அவரிடத்திலே

அதற்கான ஒப்புதல் கையெழுத்தினைப் பெற்று, அந்த மருத்துவமனையின் அடிக்கல் நாட்டு விழா, எனது தலைமையில், அறிஞர் அண்ணா அவர்களால் நடத்தி வைக்கப்பட்டது.

சில ஆண்டுகளுக்குப் பிறகு அண்ணா அவர்கள் மறைந்த பின்னர் அந்தக் கட்டடம் என்னுடைய தலைமையில், இந்தியக் குடியரசுத் தலைவர் கிரி அவர்களால் திறந்து வைக்கப்பட்ட ஒரு மாபெரும் நிகழ்ச்சி நடைபெற்றது.

கட்டடங்கள் பெரிதாக ஆடம்பரமாக இருப்பது மாத்திரம் அல்ல. அதிலே பணியாற்றுகின்ற மருத்துவர்கள் திறமையானவர்களாக இருக்க வேண்டும் என்பதும், ஆர்வம் படைத்தவர்களாக இருக்கவேண்டும் என்பதும், அக்கறை உள்ளவர்களாக இருக்கவேண்டும் என்பதும், மக்கள் பணியைத் தலையாய பணியாகக் கொண்டு இருக்கவேண்டும் என்பதும் மிக முக்கியமாகும்.

அத்தகைய பணியினை டாக்டர் ராமமூர்த்தி ஆற்றினார்; தொடர்ந்து அந்தப் பணியினை நண்பர் டாக்டர் கல்யாணராமன் ஆற்றி வருகிறார். கல்யாணராமன் ஆர்வம் படைத்தவர், அக்கறை கொண்டவர் மாத்திரம் அல்ல. மாணவனாக இருக்கும்போதே அவர் எம்.பி.பி.எஸ். வகுப்பில் முதல் தரமாகத் தேறிய மாணவர் என்கின்ற புகழுக்கும் உரியவர். அப்படிப்பட்ட கல்யாணராமன் தலைமையில் இன்றைக்கு இந்த நரம்பியல் துறை இயங்கிக் கொண்டிருக்கிறது.

**கட்டடங்கள் பெரிதாக ஆடம்பரமாக இருப்பது மாத்திரமல்ல, அதிலே பணியாற்றுகிற மருத்துவர்கள் திறமையானவர்களாக இருக்க வேண்டும் என்பதும், ஆர்வம் படைத்தவர்களாக இருக்க வேண்டும் என்பதும், அக்கறை உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதும், மக்கள் பணியைத் தலையாய பணியாகக் கொண்டு இருக்க வேண்டும் என்பதும் மிக முக்கியமாகும்.**

டாக்டர் ராமமூர்த்தி என்னை நண்பர் என்று அழைத்தார். தமிழினத் தலைவர் என்றார். முதலமைச்சர் என்றார். கடைசியாக நண்பர் என்றார். இந்த மூன்றிலே எனக்கு மிகவும் பிடித்தமான சொல், 'நண்பர்' என்பதுதான். தமிழினத் தலைவர் என்பது ஒரு இயக்கத்தை -ஒரு சமுதாயத்தைக் குறிப்பிடுவதாக ஆகிவிடும். முதலமைச்சர் என்பது வரும் போகும்; நிலையானதல்ல. நண்பர் என்பதுதான் என்றைக்கும் நிலையாக இருக்கக் கூடியது. எல்லா நண்பரும் நண்பர் அல்ல. வள்ளுவர் குறிப்பிட்டதைப் போல, கேடு வருகிற நேரத்திலே எவன் ஓடாமல் இருக்கிறானோ, அவன்தான் நண்பன். இது வள்ளுவர் வாக்கு. அப்படிப்பட்ட நண்பராக டாக்டர் ராமமூர்த்தி திகழக் கூடியவர்.

இவைகள் எல்லாம் அவர் என்மீது கொண்டுள்ள ஆழ்ந்த பற்றுக்கு மாத்திரம் அல்ல. அவருக்கென்று ஒரு உறுதியான கொள்கை உண்டு. அதிலிருந்து அவரை யாரும் அசைக்க முடியாது. அப்படிப்பட்ட உறுதியான கொள்கை மனப்பான்மை உள்ளவர்களால்தான் இந்த நரம்பியல் துறையிலும் சிறந்து விளங்க முடியும்.

நரம்பியல் துறைதான் ஒரு மனிதனுடைய உறுதிக்கும் உறுதியற்ற தன்மைக்கும் காரணமாக விளங்குகிறது. நாடி நரம்பெல்லாம் நடுங்குகிறது அவனுக்கு என்று சொன்னால், அவனைக் கோழை என்று குறிப்பிடுகிறோம். நாடி நரம்பு முறுக்கேறியிருந்தால், அவன் உறுதி வாய்ந்தவன் என்று குறிப்பிடுகின்றோம். எனவேதான், உறுதி வாய்ந்தவர்களின் நாடி நரம்புகள் முறுக்கேறியிருக்கும். அப்படி முறுக்கேறியிருக்கின்ற காரணத்தால்தான் ராமமூர்த்தி போன்றவர்களால் நரம்பியல் துறையிலே சிறந்து விளங்க முடிகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

டாக்டர் கல்யாணராமன் ஒரு கோரிக்கையை எடுத்து வைத்தார். இங்கே இருக்கிற இந்த ஸ்கேன் பல்லாண்டுக்காலம் உழைத்துவிட்டது. 20 ஆயிரம் படங்களை எடுக்கவேண்டிய இந்த ஸ்கேனில், நாற்பதாயிரம் படங்களை எடுத்துவிட்டு வந்திருக்கிறார். அந்த ஸ்கேன் என்னைப்போல என்று கருதுகிறேன். அப்படி உழைத்திருக்கிறது. பாவம் அதற்கு மாற்றாக இன்னொரு ஸ்கேன் வேண்டும் என்று குறிப்பிட்டார்கள்.

கடந்த ஆண்டு இந்த அரசுப் பொது மருத்துவமனையின் இருதய அறுவைச் சிகிச்சைப் பிரிவிற்கு என்று எல்லா வசதிகளோடு அதை ஏற்படுத்திச் செயல்படுத்த முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் வழங்கப்பட்டது.

அந்தப் பிரிவில் 20 அல்லது 25-க்கு மேற்பட்டவர்கள் அந்த அறுவைச் சிகிச்சையினைச் செய்துகொண்டு நல்லமுறையில் நலமுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், ஒன்றைச்சொல்ல நான் விரும்புகின்றேன். நாள்தோறும் எனக்கு நான்கு அல்லது ஐந்து கோரிக்கைக் கடிதங்கள் வந்து, அவைகள் கோப்புகளாக மாறி எனக்கு வருகின்றன. கோவை, பெரியார், நீலகிரி, தஞ்சை, திருச்சி போன்ற மாவட்டங்களில் இத்தகைய இருதய அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதற்காக ஒரு குறிப்பிட்ட மருத்துவமனையை அவர்கள் தேர்ந்தெடுத்து அந்த மருத்துவமனையின் சான்றிதழ்களை வாங்கி அனுப்புகிறார்கள். பலரிடத்திலே நன்கொடை வசூலிக்கிறார்கள். நான் தவறாமல் முதல்வர் நிதியிலிருந்து அந்தச் சிகிச்சைக்காக ஐந்தாயிரம் ரூபாயைத் தொடர்ந்து அனுப்பி வருகிறேன். நாள்தோறும் 5 ஆயிரம் ரூபாய் என்ற அளவிற்குக் கூட கணக்குச் சொல்லலாம், அப்படி அனுப்பிக் கொண்டிருக்கிறேன்.

ஆனால், அவர்களுக்கெல்லாம் இங்கு இலவசமாக அந்தச் சிகிச்சை செய்யப்படுகிறது என்பதை நாம் மேலும் தெரிவித்து; அந்தச் சிகிச்சை பலனளிக்கிறது, நலமுடன் அவர்கள் வீடு திரும்ப முடிகிறது என்ற உறுதியையும் அவர்களுக்கு அளித்தால் இலவசமாக அளிக்கப்படுகிற இந்தச் சிகிச்சையை அவர்கள் பெற்றுப் பயன்பெறமுடியும் என்று நான் நம்புகிறேன். இந்த அமைச்சர், தம்பி பொன்முடி கவனத்தில் வைத்துக் கொள்வதோடு, இங்கிருக்கின்ற மருத்துவத் துறை நண்பர்களும், அதனுடைய அதிகாரிகளும் கவனத்தில் வைத்துக் கொண்டு நல்லமுறையில் மக்களுக்குத் தெரிவிக்கின்ற அந்தப் பணியிலே ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இந்த மருத்துவமனையில் சிறுநீரக அறுவைச் சிகிச்சைப் பிரிவை நவீனப்படுத்தும் நோக்கத்தில் சிறுநீரகத்தில் உள்ள கற்களை உடைக்கும் ஒரு கருவியை நிறுவுவதற்காக நடப்பாண்டில் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து மேலும் ஒரு இரண்டு கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கின்றது.

16.10.'90 தேதியிட்ட கடிதத்தில் டாக்டர் ராமமூர்த்தி தெரிவித்திருப்பதாவது:

''பேரன்புக்குரிய டாக்டர் கலைஞர் அவர்களுக்கு, தலையடி பட்டோர் மருத்துவம் பற்றி ஒரு வேண்டுகோள்.''

''தாங்கள்தான் 1967 ஆம் ஆண்டு சென்னை ஜி.எச்.சில் முதன் முதலாக இந்தியாவிலேயே தலையடிபட்டோருக்குத் தனி மருத்துவப் பிரிவைத் தொடங்கி வைத்தீர்கள். இப்போது இந்த மருத்துவம் நரம்பியல் நிலையத்தில் வசதியில்லாத காரணத்தால் மிகவும் பின்தங்கியிருக்கிறது. மூளைக் காயம்பட்ட எளியோருக்கு நவீன மருத்துவம் கிடைக்காமல் இறந்து விடுகிறார்கள். அல்லது தீராத ஊனமடைகிறார்கள். இதைத் தவிர்க்க இந்த நாற்பதாம் ஆண்டு விழாவில் நரம்பியல் நிலையத்திற்குப் பெரிய நன்கொடை கொடுத்து, மூளை அடிபட்டோர் மருத்துவத்தை மறுபடியும் நவீனம் ஆக்கச் செய்ய வேண்டிக்கொள்கிறேன்''.

''புதுக் கருவிகளும், சாதனங்களும் வாங்க நாற்பது இலட்சம் ரூபாய் குறைந்த பட்சம் ஆகும். தயவுசெய்து இதை நவம்பர் 15-ந்தேதி மேடையில் அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.''

நான் அவருக்கும் உங்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஸ்கேன் வாங்குவதற்கும் மற்றும் நவீனப்படுத்துவதற்கும் உடனடியாக முதலமைச்சர் நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உரை ஆற்றினார்கள்.

**15.11.90 அன்று சென்னைப் பொது மருத்துவமனை நரம்பியல் துறையின் நாற்பதாவது ஆண்டு நிறைவு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து.**

## நூல் நயம்

### நாடி சாஸ்திரம்

**ஆசிரியர்: துர்காதாஸ் எஸ்.கே. சுவாமி,**
**வெளியிட்டோர்:**

பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை-600 004.

பக்கம்: 484 விலை:ரூ. 50

**சி**த்த வைத்தியத்திலுள்ள எண்வகைத் தேர்வுகளில் நாடித் தேர்வு எனபது மிக முக்கியமானதாகும். மனிதனுக்கு ஏற்படுகின்ற நோய்கள் 4,448 என்றும், அதனைக் கண்டறிவதற்கு மணிகட்டுப் பகுதியில் உள்ள ஒரு சிறிய இடத்தைத் தேர்ந்தெடுத்து, நாடியின் இயக்கத்தை அறிந்து, நோயின் தன்மை, நிலை, இவற்றைத் தெளிந்து, அதற்குரிய வகையில் சிகிச்சை அளிப்பது என்பது ஒரு மாபெரும் அறிவியல் அருங்கலை ஆகும்.

பதினென் சித்தர்களில் அகத்திய மாமுனிவர் நாடி நிதானம் என்ற முதல் பகுதியை 32 செய்யுள்களில் இயற்றி வைத்திருக்கிறார். இவற்றையெல்லாம் ஆய்ந்து தெளிந்த இந்நூலாசிரியர், இந்நூலில் மிகப் பெரும் பழமை மிக்கதும், அனைவரும் போற்றி ஏற்கக் கூடியதுமாகிய மருத்துவச் சிறப்பை விளக்கியுள்ளது பாராட்டுக்குரியதாகும்.

— பொன். சுப்பையா

### நிறைமதி

**ஆசிரியர்: கவிஞர் முரளிதரன்**
**வெளியிட்டோர்:**

வி.சி.ஸ்ரீராம்,
3, தெற்கு மாடவீதி,
மயிலாப்பூர், சென்னை 600 004.

பக்கம்:120 விலை:ரூ.12

**எ**ந்த ஒரு பெண்மணியாவது தன்னுடைய கணவனைப் பற்றித் தனிநூல் எழுதி, அது நம் பார்வையில் பட்டதில்லை. இந்த நூல், தனது அன்பு மனையாளின் குணநலன்களைப் புகழ்ந்து பாராட்டி ஒரு கணவன் எழுதியுள்ள கரும்புநிகர் கவிதை நூல்.

'மானம் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்' என்றான் மகாகவி பாரதி; நூற்றாண்டு விழாக்காணும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனோ, தமது 'குடும்ப விளக்கில் 'இடும்பை தீர்ப்பவள் என் மனை; அவள் என் குடும்ப விளக்கு' என்றார். அவர்களெல்லாம், பல்வேறு கவிதைகளிலே பெண்மையைப் போற்றிப் பாடியிருக்கிறார்கள். இவரோ தனது இரண்டாவது நூலான இந்நூல் முழுமையையும் தூசுபடிந்த தனது நெஞ்சின் மாசு துடைக்கத் துணை நிற்கும் தன் மனைவியைப் பற்றியே இயற்றியிருக்கிறார்; அது மட்டுமல்ல; அவருக்கே இந்த நூலைக் காணிக்கையும் ஆக்கியிருக்கிறார். 'தாயும், மகளும், தாரமும்' ஆகிய பெண்மை நலன்களும் ஆங்காங்கே தெளிக்கப் பட்டுள்ளன.

மூவசைச் சீர் நான்கும், ஈரசை சீர் இரண்டும் கொண்டும் எழுதப்பட்டுள்ள அறுசீர் விருத்தங்களின் கடைசி அடிகளில் தன் மனைவியின் அன்பிற்கீடாக ''எதைக் கொடுப்பேன்?'' எனத் தொடர்ந்து எழுதிவந்து- கடைசி விருத்தத்தின் கடைசி அடியை 'எனைக் கொடுத்தேன்!'' என்று முடித்திருப்பது அருமையாக இருக்கிறது. நிறைமதி என்பது ஒருவேளை நூலாசிரியர் மனைவியின் பெயராகவே இருக்கக்கூடும் போலிருக்கிறது. அட்டையில் தன் அன்பு மனையாளின் படத்தைப் போட்டிருந்தாலும் தவறாகியிருக்காது!

நமக்குள்ள ஒரே திருப்தி- இது ஒரு மரபுக்கவிதை நூல்!

—'ராஜு'


வளமான வாழ்வுக்கு
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்
அளிக்கும்
விஜய்
உரங்கள்
VIJAY
COMPLEX
N P K
19-19-19
VIJAY
COMPLEX
N P K
17-17-17
VIJAY
UREA-N46%
மதராஸ்
பெர்ட்டிலைசர்ஸ்
லிமிடெட்
VIJAY
HTA 7343

# பாராளுமன்றக் குழுக்களின் பங்கு

மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர்

**திரு. வீ.பெ. துரைசாமி**



அரசு நடவடிக்கையை ஆய்வு செய்தல், விசாரித்து அரசுக்குத் தேவையான பரிந்துரைகளைச் செய்தல், அரசு அலுவலர், அதிகாரக் குழு ஆகியோரின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தல் ஆகியவற்றில் பாராளுமன்றக் குழுக்களின் பங்கு, குடியரசு அமைப்பிற்கு மிகவும் இன்றியமையாததாகும். இங்கிலாந்தில் பாராளுமன்ற முறையில் சீர்திருத்தங்கள் கொண்டு வர வேண்டுமென்று வாதாடும் பெர்னார்ட் கிரிக் ''நிர்வாக ஆட்சி முறையில் அரசுத் துறைகளின் வளர்ச்சிக்கும் திறனுக்கும் ஈடுகொடுக்கும் வகையில், பாராளுமன்றம் அதன் கட்டுப்பாடு, ஆய்வு விமர்சனம், ஆலோசனை ஆகிய வழிமுறைகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்'' என்று கூறுகிறார். பாராளுமன்ற நடைமுறை பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி வருகின்ற இன்றைய நாளில் அதன் செயல் திறனிலும் மாற்றம் இருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

சட்டமன்றத்தின் அதிகாரமின்றி, அரசு நிர்வாகி பணம் திரட்டவோ அல்லது செலவிடவோ கூடாது என்பது பாராளுமன்ற அரசு நிர்வாகத்தில் தொன்றுதொட்டு நிலவி வரும் மரபாகவும் உள்ளது. நீதி, நிர்வாகம் ஆகிய துறைகள் தொடர்பாகச் சட்டமியற்றல், திட்டமிடல், நிதிக் கட்டுப்பாடு செய்தல் ஆகியன சட்டமன்றத்தின் நடவடிக்கைகளாகும். ஆனால் சட்டமன்றம் அல்லது நாடாளுமன்றக் குழுக்கள் செயல் முறையில் அரசு அலுவலர் அதிகாரக் குழு ஆகியோர் மீது கட்டுப்பாடு செலுத்துவதில் மிக முக்கியமான பங்கு வகிக்கின்றன.

ஒரு பொருளின் விவரங்களை அல்லது தொழில்நுட்பம் சார்ந்த பிரச்சினைகளைச் சட்டமன்றம் அல்லது பாராளுமன்றம் விளக்கமாகவும் நுணுக்கமாகவும் விவாதிக்க முடியாத சூழல்களில் சட்டமன்றம் அல்லது பாராளுமன்றக் குழுக்கள் துல்லியமாக ஆராய்வதற்காக அமைக்கப்படுகின்றன. இவ்வாறு குழு அமைக்கப்படுவதால் விரிவாகச் செய்ய முடிவதோடு அவையின் நேரமும் மீதமாகிறது. குழுக்கள் அவையின் அமைப்பைப் பிரதிபலிப்பவைகளாக இருக்கின்றன. அதே சமயம் சட்டமன்றம் அல்லது பாராளுமன்றத்தில் கட்சிக் கண்ணோட்டம் காரணமாக ஏற்பட வாய்ப்புள்ள சூடான வாக்குவாதங்கள், கொந்தளிப்பு ஆகியவை தவிர்க்கப்பட்டு அவை சுமூகமாக நெகிழ்வுத் தன்மையுடன் நடைபெற வழி வகுக்கின்றன.

இதன் காரணமாகத் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பிரச்சினைகளைக் குழு விருப்பு வெறுப்பின்றி, முழுமையாக, நியாயமான முறையில் பரிசீலித்துச் சட்ட சம்மதமானதாக ஆக்குகிறது. அரசியல் அனுபவத்திலிருந்து, பல நாட்கள் விவாதித்த பின்னரே அவ்விவாதம் நல்லதொரு விவாதமாக அமைகிறது என்பதும், அரசு பெரும்பான்மை பலத்தில் இருப்பதால். சட்டமன்றத்தில் வைக்கப்படுபவை நிறைவேற்றப்படுகின்றன என்பதும் அரசியல் அனுபவத்தில் பெறப்படும் உண்மைகளாகும். பாராளுமன்ற அரசு முறையை ஏற்றுக் கொண்ட பல நாடுகள் குழு அமைப்பு முறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்டுள்ளன.

இந்தியாவில், பாராளுமன்றம், சட்டமன்றம் சிறப்பாக வகுக்கப்பெற்ற குழு அமைப்பு முறையைக் கொண்டுள்ளது. நிதிக் குழுக்களிடையே பொதுக் கணக்குக் குழு, மதிப்பீட்டுக் குழு, பொது நிறுவனங்கள் குழு ஆகியவை தனித்தன்மை வாய்ந்த குழுக்களாகும். இவை அரசுத் தொகை செலவிடுவதையும் செயல்படுவதையும் இடைவிடாது கண்காணிக்கின்றன. நாடாளுமன்றமோ, சட்டமன்றமோ இறையாண்மைமிக்க அமைப்பாக ஏட்டளவில் இருந்தபோதிலும் நடைமுறையில் தற்கால அரசியல் செயல்பாட்டில் அது பிரதிபலிக்கவில்லை. எனவே, நாடாளுமன்றத்தின் அல்லது சட்டமன்றத்தின் அதிகாரமும் செல்வாக்கும் மெல்ல மெல்லக் குறைந்துவரும் அதே நேரத்தில், நிர்வாகப் பிரிவின் அதிகாரம் (அதிகாரிகளின்) கணிசமாக அதிகரித்து வருகிறது என்பதே தற்போது பரவலாக உள்ள ஒரு கருத்தாகும். இது சற்று மிகையாக இருக்கலாம். ஆனால், இதில் சிறிது உண்மை இருக்கிறது என்பதையும் மறுக்க இயலாது.

கடந்த முப்பது அல்லது நாற்பது ஆண்டுகளாக அரசின் பணிகள் கணிசமாக அதிகரித்துள்ளன. எனவே, நிர்வாகம் நல்லமுறையில் நடைபெறுகிறது என உறுதி செய்து கொள்வதற்காக அரசியல் சட்டப்படிக்கானதும், தார்மீக உரிமை உடையதுமான பணியைச் செய்வதில் சட்டமன்றம், நாடாளுமன்றங்களுக்கு மேலும் மேலும் இடர்ப்பாடு மிகுந்து வருகிறது. நாடாளுமன்றம்

> ★ **போற்ற வேண்டியவை உண்மை-உழைப்பு-உயர்வு; பின்பற்ற வேண்டியவை கனிவு-பணிவு-துணிவு; பேணப்பட வேண்டியவை கடமை-கண்ணியம்-கட்டுப்பாடு!**
>
> **—அறிஞர் அண்ணா**

அல்லது சட்டமன்றம் அலுவலர் அதிகார வர்க்கத்தினர் ஆகியோர் ஆற்றும் அரசியல் நிர்வாகச் செயல்பாடுகளைக் கூர்ந்தாய்வதைப் பொறுத்தே அதன் வலிமை புலப்படும்.

மைக்கேல் ருஷ் என்பவர், ''நாடாளுமன்றமும் பொது மக்களும்'' என்ற நூலில் ''நாடாளுமன்றத்தின் அடிப்படை அரசியல் பணி, அரசின் கொள்கைகளையும், செயல் முறைகளையும் துருவி ஆராய்ந்து, விவாதிப்பதே! என்று கூறியுள்ளார்.

'நாடாளுமன்றக் கட்டுப்பாடு என்பது செல்வாக்கே, நேரடி அதிகாரமல்ல; ஆலோசனை கூறுவதே, ஆணையிடுவதன்று; விமர்சனம் செய்வதே, தடங்கல்கள் செய்வதன்று; மேற்பார்வையிட்டு ஆய்வு செய்வதே அன்றித் தாமே செயலைத் தொடங்குவதல்ல; பலர் அறிய எடுத்துரைப்பதே அன்றி இரகசியங் காப்பது அல்ல எனப் பொருள்படும்' என்று ஹௌஸ் ஆப் காமன்ஸ் நடைமுறை பற்றிய தேர்வுக்குழு சுட்டிக்காட்டி உள்ளது.

நிர்வாகச் செலவினங்களுக்குக் கணக்குக் காட்டல், நடவடிக்கைகளுக்குப் பொறுப்பேற்றல் ஆகியவற்றை உறுதி செய்வதற்கான மிகவும் பயனுள்ள கருவிகளில் ஒன்றாக நாடாளுமன்ற, சட்டமன்ற வினாக்கள் அமைகின்றன. இத்தகைய வினாக்கள்தான் அரசுக்கு அதிகமான தொல்லைகள் கொடுக்கின்றன என்பதைச் சொல்லத் தேவையில்லை. அளிக்கப்படுகின்ற பதில்கள், தட்டிக் கழிப்பதாகவும் தெளிவற்றதாகவும் இருந்தால் அது நாம் விரும்பும் நோக்கத்தை எய்த உதவாது. ஆனால்- வினாக்கள், விவாதங்கள், தீர்மானங்கள் போன்ற ஏற்றுக் கொண்ட நடைமுறைகளின் மூலம், நிர்வாகச் செலவினங்களுக்குக் கணக்குக் காட்டல், நடவடிக்கைகளுக்குப் பொறுப்பேற்றல் ஆகிய வாலாயமான நடைமுறைகளுடன் அரசின் நடைமுறைகளைப் பற்றி உன்னிப்பான விரிவான ஆய்வு ஒன்று நாடாளுமன்ற, சட்டமன்றக் குழுக்களின் மூலமாக மேற்கொள்ளப்படுகிறது.

அரசு அலுவலர் மற்றும் அதிகார வர்க்கம் மீது திறமையான முறையில் நாடாளுமன்ற, சட்டமன்றக் கட்டுப்பாடு செலுத்துவதற்கு தற்போதுள்ள முறைகளையும் நடைமுறைகளையும் சீரமைத்து மேம்படுத்துவதற்கான அவசியம் பற்றிப் பல நாடுகளில் சிறிது காலமாகவே ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. அரசுத் துறைகள் எந்தப் பொருள் பற்றிக் கவனிக்கின்றனவோ அதை அடிப்படையாகக் கொண்டு, வெவ்வேறு பொருள்களைக் கவனிக்கும் குழுக்களை ஏற்படுத்துவதற்கான ஒரு முறையைக் கொண்டு வந்ததன் மூலம், கேரள அரசு 1980-ஆம் ஆண்டில் சட்டமன்ற நடைமுறையில் ஒரு சீர்திருத்தத்தைச் சோதனை ஏற்பாடாகக் கொண்டு வந்தது. அக்குழுக்களில் எல்லா உறுப்பினர்களும் இடம் பெற்றுள்ளனர். இக்குழுக்கள் அமைச்சர்களைத் தலைவர்களாகக் கொண்டுள்ளன.

''மானியக் கோரிக்கைகளைக் கூர்ந்தாய்வு செய்தல், சட்டத்தை ஆய்வு செய்தல், அரசால் அல்லது பிற அதிகார மன்றங்களால் வகுக்கப்படும் வரைவு விதிகளைப் பரிசீலித்தல் ஆகியவற்றிற்கு இக்குழுக்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டு உள்ளது.

சட்டமன்றத்தின் நிதி குறித்த விவாதத்திற்காகக் கிடைக்கின்ற கால அளவு வரையறுக்கப்பட்டதேயாகும். அது பயனுள்ள கட்டுப்பாட்டை இயன்ற அளவு குறைக்கிறது. இந்த அடிப்படையில் நாம் ஆய்வு செய்ய வேண்டும்.

பொதுக் கணக்குக் குழுவின் ஆய்வுகள், முன்னரே செய்த செலவு தொடர்பானதால், சாதாரணமாக அது கடந்த கால நிகழ்வுகளையே ஆய்வு செய்கிறது. பொதுக் கணக்குக் குழு மாநிலக் கணக்குத் துறைத் தலைவரின் தணிக்கை அறிக்கையைச் சார்ந்து, ஆய்வு செய்கிறது. செலவு செய்த நீண்ட காலத்திற்குப் பிறகே அந்த அறிக்கை அவையில் சமர்ப்பிக்கப்படுகிறது. இது பொறுப்பை வரையறுக்கும் பணியை இடர்ப்பாடானதாக ஆக்குகிறது. அறிக்கையில் குறித்த இனங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் இந்த நீண்ட கால தாமதத்திற்குப் பொறுப்பானவர் மீது நடவடிக்கை எடுக்க உதவி செய்யாது.

மதிப்பீட்டுக் குழுவும், பொது நிறுவனங்கள் குழுவும் தெரிந்தெடுக்கப்பட்ட துறைகளில் மட்டுமே செயல்படுகின்றன. எனவே, அவற்றின் நடவடிக்கைகள் வரையறுக்கப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. மதிப்பீட்டுக் குழு மதிப்பீடுகளை முன்னரே ஆய்வு செய்யவேண்டும் என்ற போதிலும், மானியக் கோரிக்கைகள் வடிவில் மதிப்பீடுகளை அவை அனுமதித்த பின்னரே உண்மையில் மதிப்பீட்டுக்குழு ஆய்வு செய்கிறது. அதுவும் கூட மிகவும் இன்றியமையாததாக அல்லது முக்கியமானதாகக் கருதப்படும் சில துறைகளின் மதிப்பீடுகளை மட்டுமே ஆய்வு செய்கிறது.

பொது நிறுவனங்களின் செயற்பாட்டினை ஆராய்வதுடன், அவற்றின் தணிக்கை அறிக்கைகளையும் பொது நிறுவனங்கள் குழு ஆராய்கிறது. துறை அதிகாரிகளிடமிருந்து தகவல்களைப் பெறுவதற்குரிய இக்குழுக்களின் பரந்துபட்ட அதிகாரம், சட்டமன்றத்தின் கண்களாகவும் காதுகளாகவும் அவற்றைச் செயல்படச் செய்கின்றது. மேலும் அதிகார வர்க்கத்தை விழிப்புடன் பணிபுரியச் செய்கின்றது. இக்குழு 1964-இல் மத்திய அரசால் அமைக்கப்பட்டது. பின்னர், மாநில அரசின் கட்டுப்பாட்டிலும் நிர்வாகத்திலும் பல்வேறு தொழில் நிறுவனங்கள் விரைந்து வளர்ந்ததாலும், அவற்றுக்கு மாநிலத் தொகு நிதியிலிருந்து நிதி வழங்கப்பட்டதாலும் அக்குழுவை மாநிலங்களிலும் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

1972 ஜூன் 23-ஆம் நாள் நடைபெற்ற நாடாளுமன்ற நிதி விவகாரக் குழுக்கள் மூன்றின் தொடக்கக் கூட்டத்தில் உரையாற்றுகையில், அப்போதைய நாடாளுமன்ற மக்களவைத் தலைவர், அரசுத் துறை நிறுவனங்களின் எண்ணிக்கை 1951-இல் 5-ஆக இருந்தது 1970-இல் 90-ஆக அதிகரித்துள்ளது என்றும், இந்த நிறுவனங்களில் செய்யப்பட்ட மொத்த முதலீடு 1951-இல் 29 கோடியாக இருந்தது,1970-இல் 4,500 கோடியாக அதிகரித்துள்ளது என்றும் தெரிவித்தார்.

இதே போன்று மாநில அளவிலும் இந்த நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது; இதனால் அதிகாரிகள் இவற்றில் முக்கியமாக இடம் வகிக்கின்றனர்.

இந்திய அதிகார வர்க்கம், இந்தியாவில் ஆங்கில மரபு வழி வந்த ''ஆங்கில ஆட்சி'' விட்டுச் சென்ற நிர்வாக முறையாகும். வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவதில் அதிகாரிகளின் திறமை, அவர்களுக்கும் பொது மக்களுக்கும் இடையே நிலவும் நல்லுறவின் தன்மைகளைப் பொறுத்தே பெரிதும் அமைகிறது.

நமது அதிகார வர்க்க அமைப்பின் விளைவாக, அதிகார ஆதிக்க உணர்வும் முரட்டுப் பிடிவாதமும் நிலவுகின்றன. எனவே, இந்த அதிகார வர்க்கத்தின் தன்மையைக் குறைக்க, அல்லது மாற்றப் பயிற்சிகள் மூலமும், வேறு பல நடவடிக்கைகள் மூலமும் அரசு மேற்

கொண்ட முயற்சிகள் ஓரளவே வெற்றி பெற்றுள்ளன.

கீழ்நிலையிலிருந்து தொடங்கி வளர்ச்சியை ஏற்படுத்தவும், இவ்வாறு வளர்ச்சியை ஏற்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு அதிகார வர்க்கத்தை மிகுந்த ஒத்துழைப்பு அளிக்கச் செய்யவும், வளர்ச்சியையே நோக்கமாகக் கொண்டதாக ஆக்குவதற்கும் எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்கான எடுத்துக்காட்டுகள் தான் சமுதாய வளர்ச்சித் திட்டமும் ஊராட்சி முறையும் ஆகும்.

இருப்பினும், நடைமுறையில் நாடாளுமன்றத்தில் அல்லது மாநிலச் சட்டமன்றத்தின் பல்வேறு குழுக்கள் கண்டிப்பான கட்டுப்பாட்டைப் பராமரிக்கும் நோக்கில் தங்கள் முன் விளக்கமளிக்க வருமாறு அல்லது விசாரணைக்கு வருமாறு உயரதிகாரிகளை அழைக்க அதிகாரம் பெற்றுள்ளன.

இந்தியாவில், அதிகார வர்க்கத்தில் மேல் நிலையில் உள்ளவர்கள் முக்கியமான சமூக, பண்பாட்டுத் துறைகள் அனைத்திலும் அதிகாரம் செலுத்துகின்றனர். இந்த அதிகார வர்க்கத்தினர் சிறப்பாக உருவாக்கப்பட்ட தேர்வின் மூலம் நியமிக்கப்படுகின்றனர். இதனால், அவர்கள் ஒத்த பண்பாட்டுப் பின்னணியும் வாழ்க்கை நாகரிகப் பாங்கும், விசுவாசமும் உடையவர்களாகத் திகழ்வர். இவ்வர்க்கத்தினர், ஆளும் உயரதிகாரிகள், அமைப்பு ரீதியிலான சக்திகள் முதலியோர் இந்தியாவின் அரசியல் குறித்த முடிவெடுக்கும் உயர்நிலையில் ஒத்த உணர்வுகளையும் ஒருங்கிணைந்து செயல்படும் தன்மையையும் கொண்டு இயங்குகின்றனர். எனவே, நமது அதிகார வர்க்கத்தில் இவர்கள் முக்கியமான பங்கு வகிக்கின்றனர்.

பல்வேறு வழிகளில் நிர்வாகிகள் மீது கட்டுப்பாடு செலுத்தும் அதிகாரம், நாடாளுமன்றத்திற்கு அல்லது மாநிலச் சட்டமன்றத்திற்கு உண்டு. இது, பல்வேறு குழுக்களை உருவாக்கி அவற்றின் மூலம் பல்வேறு துறைகளையும் அதிகார வர்க்கத்தினரையும் கட்டுப்படுத்துகிறது. குழுக்கள் அரசிடமிருந்து வரப்பெறும் பதில்களை ஆய்வு செய்வதன் மூலமும் பகுப்பாய்வு செய்வதன் மூலமும் தமது பரிந்துரைகள் செயல்படுத்தப்படுவதை உன்னிப்பாகக் கண்காணிக்கின்றன. இந்தப் பதில்கள் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய அறிக்கைகள் அவையில் தாக்கல் செய்யப்படுகின்றன. இவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட பிறகு குழுக்கள் தொடர் நடவடிக்கை எதுவும் எடுப்பதில்லை. இது குறித்து நடவடிக்கை எடுப்பது அவசியமாயின், அது அவையிடம் விட்டுவிடப்படுகிறது.

குழுக்கள் தெரிவிக்கும் பரிந்துரைகளைத் தயக்கமின்றி ஏற்றுக் கொண்டு பிறகு, வெகு சீக்கிரத்திலே அவற்றை மறந்துவிடும் போக்கு நிர்வாகத்திடம் காணப்படுகிறது. குழுக்கள் செய்த பரிந்துரைகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று அரசைக் கட்டாயப் படுத்துவதற்கான அதிகாரம், தற்போதைய விதிகளின்படி குழுக்களுக்கு இல்லை; அவ்வாறிருக்க இந்தப் பரிந்துரைகளின்பால் அரசு அக்கறை காட்டாவிட்டாலோ அல்லது அவை குறித்துக் காலந்தாழ்த்தி நடவடிக்கை எடுத்தாலோ, குழுக்களின் செயல்திறன் மற்றும் உழைப்பு ஆகியவை வீணாகும் அல்லது குறைந்துவிடும்.

இந்தக் குழு அமைப்பு முறையானது, செவ்வனே செயல்பட்டு வந்தாலும் அம்முறை இன்னும் செம்மை பெறவில்லை. அது, பரிந்துரைக்கும் அமைப்பாகவே இருந்து வருகிறது. இந்திய சமூக-பொருளாதார அமைப்பிற்கு ஏற்ற பொருத்தமான முறைகள் பற்றிப் பரிந்துரைக்கவும், அதன் வாயிலாக, நமது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள தடைகள் மற்றும் சமன்பாடுகளுக்குப் பாதகமின்றிப் போதிய கட்டுப்பாடு செலுத்தவும் ஆழமான ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

**—19.9.1990 அன்று ஹராரேயில் நடைபெற்ற காமன்வெல்த் பாராளுமன்ற மாநாட்டில் ஆற்றிய உரை.**

# பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில்..

**வா**ழும் வகையற்று வறுமையில் சிக்குண்டு, நாளும் நல்லவற்றை எதிர்நோக்கி, அல்லல் அகற்றிட ஆதரவு கிடைக்காதா என ஏங்கித்தவிக்கின்ற ஏழை எளியவர்கள், பிற்படுத்தப்பட்டோர், வாழ்க்கைச் சுமைதனைத்தாங்கும் வலிமையின்றி, மெலிந்தோர், நலிந்தோர், இவர்களுக்காக, பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களைப் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் தனிக்கவனம் எடுத்து, தகுதியுடையோர்க்கு நல்வாழ்வுத் திட்டங்களின் பயன்கள் போய்ச் சேருவதில் கவனத்துடன் செயல்பட்டு வருகிறது.

## ஒருங்கிணைந்த ஊரகவளர்ச்சித் திட்டம்

வாழ்க்கை சுமைதனை தாங்கும் வலிமையற்றோர்களுக்குக் கடன் வழங்கி, அவர்களின் வாழ்வை மேம்படுத்த அரசு ஒருங்கிணைந்த ஊரகவளர்ச்சித் திட்டத்தின் கீழ் 5597 நபர்களுக்குக் கடன் வழங்க நிர்ணயம் செய்தது. அரசு நிர்ணயம் செய்த இலக்கினை அடைந்து 5597 நபர்களுக்குச் சுயதொழில் செய்யக்கடன் வழங்கப்பட்டது. ரூ239இலட்சம் கடனாகவும் ரூ.119.50 இலட்சம் மானியமாகவும் இவர்களுக்கு வழங்கப்பட்டது.

## ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம்

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 21,67,100 மனித வேலை நாட்கள் உருவாக்கி ஏழை, எளியவர்கள் நலம் பெறச்செய்ய அரசு குறியீடு நிர்ணயம் செய்தது. பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம், மக்களின் நலனே தன் நலம் எனக் கருதி அரசு நிர்ணயம் செய்த இலக்கினை மிஞ்சி 31,10,000 மனித வேலை நாட்கள் உருவாக்கி செயல்படுத்தி, மாநிலத்திலேயே வறுமை ஒழிப்புத் திட்டத்தில் முதலிடத்தை பெற்றது.

## வேளாண்மை உற்பத்தி பெருக்குத் திட்டம்

வேளாண்மை உற்பத்தி பெருக்குத் திட்டத்தின்மூலம் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குப் புதிதாகக் கிணறு வெட்டவும், பழைய கிணறுகளை ஆழப்படுத்தவும் பழுதடைந்த கிணற்றைப் புதுப்பிக்கவும் மோட்டார் அறைக் கட்டடம் மற்றும் நடைபாதை கட்டவும், பைப்லைன் ஆயில் இஞ்சின் மற்றும் மின்மோட்டார் வழங்கவும் கடன் உதவி அளித்து நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்கவும் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும், மேடு, பள்ளம் உள்ள சீர்திருத்தமற்ற நிலங்களைச் சீர்திருத்தம் செய்து நன்முறையில் விவசாயம் செய்ய நிலச் சீர்திருத்தத்தின் மூலம் கடன்கள் வழங்கி விவசாயிகளுக்கு உணவு உற்பத்தியைப் பெருக்க ஊக்கமளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் சிறப்பாக ஜீவன்தாரா திட்டத்தின் மூலம் இலவசமாகக் கட்டப்படும் கிணறுகளுக்கு ஆயில் இஞ்சின் மற்றும் மின்மோட்டார், மோட்டார் அறைக்கட்டவும், தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கடன் உதவியும் அளிக்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**ந. பாலையா**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**பசும்பொன் தேவர்**
**திருமகன் மாவட்டம் சிவகங்கை.**

# வெண்மைப் புரட்சியில் வியத்தகு சாதனை!

நிர்மல்சிங் இ.ஆ.ப.,
ஆணையர்,
பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத்துறை,
சென்னை..

**பா**ல் உற்பத்தி, பால் விநியோகம் மற்றும் அது தொடர்பான செயற்கை முறைக் கருவூட்டல், மருத்துவ வசதி முதலான இன்றியமையாப் பணிகளில் பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத்துறை செவ்வனே செயலாற்றி வருகின்றது.

பொதுமக்களுக்குத் தேவையான அளவில் காலையிலும், மாலையிலும் பால் விநியோகிக்க, 24 மணி நேர சுழற்சியில், திட்டமிட்ட வகையில் இத்துறை இயங்கி வருகிறது.

மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம், இத்துறைப்பணிகள் சீராகவும், விரைவாகவும் நடைபெற உறுதுணையாக இருக்கின்றது.

வெண்மைப் புரட்சியில் வியத்தகு சாதனைகள் படைத்துவரும் பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறையின் அங்கங்களாக விளங்கும் மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் சிறப்பான பணிகளைச் சித்திரிக்கிறது இக் கட்டுரை.

## வட ஆர்க்காடு மாவட்டம்

**வட** ஆர்க்காடு மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம், பால் உற்பத்தியைச் சீராகவும், தொடர்ந்து அதிகரிக்கச் செய்யவும் தேவையான பல்வேறு அடிப்படை இனவிருத்தி மருத்துவ வசதிகளை ஒருங்கிணைத்து வெற்றிகரமாகவும், இலாபகரமாகவும் செயல்பட்டு வருகிறது.

மாவட்டத்தில் பால் வள மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டுள்ள இவ்வொன்றியம் தேசிய பால் வள வாரியத்தின் நிதி உதவியுடன் முதல், இரண்டாம் பால் பெருக்குத் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தி முடித்திருப்பதுடன், மூன்றாம் பால் பெருக்குத் திட்டத்தையும் இங்கு துவக்கிச்செயல்படுத்தி வருகிறது.

உற்பத்தி செய்யும் பாலுக்கு உரிய விற்பனை வசதி இருந்தால் தான், உற்பத்தியாளர்கள் கறவைத் தொழிலை மேற்கொள்வர். எனவே, கிராமம்தோறும் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் ஒன்றியத்தின் மூலம் துவக்கப்படுகின்றன. தேவையான அனைத்துச் சாதனங்களையும் ஒன்றியம் சங்கத்திற்கு இலவசமாக வழங்குகிறது. அங்கத்தினர்களிடமிருந்து தரமான பால் சரியான அளவுகளில் பெறப்பட்டு, பாலின் தரத்திற்கேற்ப விலையும் நிர்ணயிக்கப்படுகிறது. பால் பணம் வாரத்திற்கொருமுறை பட்டுவாடா செய்யப்படுகிறது.

தமிழகத்திலேயே அதிக அளவாக, 1000-க்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களைப் பெற்றுள்ளது இவ்வொன்றியம். ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளும், விவசாயத்தொழிலாளர்களும் பால் உற்பத்தியாளர்களாக இச்சங்கங்களில் பங்கேற்று பலன்மிக கண்டு வருகின்றனர். பால் பணமாக மட்டும் நாளொன்றுக்கு ஒன்பது இலட்ச ரூபாயைச் சங்கங்களின் மூலம் ஒன்றியம் வழங்கி வருகின்றது.

கிராமங்களில் பால் சங்கங்களைத் துவக்கி, தொடர்ந்து மேற்பார்வை செய்யும் பணியை ஆர்க்காடு, ஆம்பூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களில் உள்ள பால் சேகரிப்புக் குழுக்கள் மேற்கொண்டுள்ளன.

பால் சங்கங்களிலிருந்து தினமும் இரு வேளைகளில் சேகரிக்கப்படும் பாலை, ஆம்பூர், திருவண்ணாமலை, அனக்காவூர் ஆகிய இடங்களில் குளிரூட்டவும், வேலூரில் பதப்படுத்தவும் வசதிகள் உள்ளன. அவ்வசதிகள் முழுமையாகவும் சொல்லப்போனால் அதற்கு மேலும் பயன்படுத்தப்படுகின்றன. நாளொன்றுக்கு 1,70,000 லிட்டர் பாலைப்பதப்படுத்தும் வசதியே இங்கு இருந்தபோதிலும் 2,60,000 லிட்டர் வரை பால் சேகரித்துக்கையாளப்பட்டிருப்பது சாதனையாகும்.

இவ்வொன்றியத்தில் செயல்பாட்டிலுள்ள நகரங்களில், தரமான பதப்படுத்தப்பட்ட பால், 250 மி.லிட். மற்றும் 500 மி.லிட். அளவுகளில் பாலித்தீன் பைகளில் கிடைக்க பால் நுகர்வோருக்கு வசதி செய்யப்பட்டுள்ளது. தற்போது நாளொன்றுக்கு விற்பனையாகும் பாலின் அளவை 23,000 லிட். அளவிலிருந்து 35,000 லிட்டருக்கு உயர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ நம்மை நாமே உயர்த்திக் கொள்ள வேண்டும்; நாம் சுயமாக வாழ்வது எப்படி என்று கற்றுக் கொள்ள வேண்டும்; தன்மானம் உடையவர்களாக வாழ்தல் வேண்டும்; நாமாக முயற்சித்து நமது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்; இவ்வாறு செய்தால் நாம் உயர்வது உறுதி.

—டாக்டர் அம்பேத்கர்

ஒருபுறம் கிராமங்களின் மறுமலர்ச்சியையும், மற்றொருபுறம் மக்களின் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாத பாலின் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ள 'வட ஆர்க்காடு மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம், வெண்மைப்புரட்சியின் வேராக இருந்து, பால் வளம் தழைக்க, தொடர்ந்து, தொய்வில்லாது வெற்றிகரமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

## மதுரை மாவட்டம்

மதுரை மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தால் இயங்கி வரும், மதுரை ஆவின் பால்பண்ணை 'உலக ஐக்கிய நாடுகள் குழந்தைகள் கல்வி நிதி' உதவியுடன் 1967-ஆம் ஆண்டு தமிழக அரசால் ஆரம்பிக்கப் பட்டது.

மதுரை பால் பதனிடும் தொழிற் சாலை, நாளொன்றுக்கு 15,00,000 லிட்டர் பாலை பதப்படுத்தும் திறன் கொண்டது.

கலப்பின கிடாரிக்கன்றுகள் வளர்ப்புத் திட்டம் மதுரை மாவட்டத்தில் 1977-78-ஆம் ஆண்டு முதல் செயல் படுத்தப்பட்டு வருகிறது. கலப்பினக் கன்றுகளை நன்கு வளர்த்து பால் உற்பத்தியை அதிகரிக்க மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து சிறு விவசாயி, மிகச் சிறு விவசாயி, விவசாயக் கூலிகளுக்கு மானியத் தொகையுடன் கடன் உதவி அளித்து, மானியமும் கன்றும் தீவனமாக மாதந்தோறும் வழங்கப் பட்டு கடன் பகுதியை மாடு ஈன்ற உடன் பெறப்படும் பாலில் இருந்து திரும்பச் செலுத்த வழிவகை செய்துள்ளது.

கிராமங்களில் வாழும் ஆதிதிராவிடப் பழங்குடி மக்களுக்கு வங்கிகள் மூலம் கறவை மாடுகள் வழங்கப்பட்டு அதில் மூன்றில் ஒரு பகுதி மானியமாக அளிக்கப் படுகிறது. 1989-ஆம் ஆண்டு 4,596 கறவை மாடுகள் வழங்கப்பட்டு ரூ.45.67 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது.

மதுரை மற்றும் இதர மாவட்டப் பால் உற்பத்தியாளர் சங்கங்களில் படித்த ஊழியர்களுக்குப் பயிற்சி மையங்கள் மூலம் கால்நடைப் பராமரிப்பு, செயற்கை இனவிருத்தி, முதலுதவிச் சிகிச்சை மற்றும் பால் பரிசோதனைகள் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மதுரை மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் தற்போதைய சராசரி பால் உற்பத்தியின் அளவு நாளொன்றுக்கு 95,000 லிட்டர் ஆகும். தற்சமயம் 536 பதிவு செய்யப்பட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்தும் பால் பெறப்பட்டு வருகிறது. தற்போது இவ்வொன்றியம் மதுரை மாவட்டத்தில் 20 பால் வழித்தடங்கள் மூலம் பால் சேகரம் செய்து வருகிறது.

தற்போது பாலின் தரத்தை அடிப் படையாகக் கொண்டு பால் கொள்முதல் செய்யப்படுகிறது. பால் உற்பத்தியாளர் களின் பசும்பாலுக்கு 1 கிலோ கொழுப்பு மற்றும் இதர சத்துக்களுக்கு ரூ.28 வீதமும், எருமைப்பாலுக்கு 1 கிலோ கொழுப்பு சத்துக்கு ரூ.58வீதமும்வழங்கப்படுகின்றது.

மதுரை மாவட்டத்தில் உள்ள பால் உற்பத்தியாளர்களுக்குக் கால்நடைக் கலப்புத் தீவனம் தடையின்றிக் கிடைக்க, இப்பால்வள ஒன்றியம் மதுரைக்கு அருகாமையில் உள்ள கப்பலூரில் மாட்டுத் தீவன உற்பத்தி ஆலை ஒன்றினை நிறுவி வருகின்றது.

மதுரை பால் பண்ணையில் உற்பத்தி யாகும் பதப்படுத்தப்பட்ட 4.5 சதவிகிதம் கொழுப்புச் சத்தும், 8.5 சதவிகிதம் இதரச் சத்துக்களும் அடங்கிய நிலைப் படுத்திய பால் நாளொன்றுக்கு 78,000 லிட்டர் 220 பால் விற்பனை நிலையங்களை மூலமாகவும், பால் உப பொருட் களான வெண்ணெய், நெய், நறுமணப் பால், பால்பவுடர் 25 பாலகங்கள் மூலமாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மதுரை மாநகரில் தானியங் கிப் பால் விநியோகம் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## காமராஜர் மாவட்டம்

ஒருங்கிணைந்த இராமநாதபுரம் மாவட் டத்திலிருந்து காமராஜர் மாவட்டம் உருவானதை ஒட்டி காமராஜர் மாவட்ட கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் 26.12.'85 அன்று பதிவு செய்யப்பட்டு 24.3.'86 அன்று பணி துவக்கப்பட்டது. மத்திய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு பால்வளத் திட் டங்கள் இவ்வொன்றியத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இவ்வொன்றியத்தில் 31.3.90-ஆம் நாளன்று 203 பிரதம பால் உற்பத்தி யாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின்உறுப் பினர்களாக உள்ளனர். ஒன்றியத்தின் மொத்த பங்கு மூலதனம் ரூ.5,95,300 ஆகும். இதில் பிரதம பால் உற்பத்தி யாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களிட மிருந்து பங்குத் தொகையாக ரூ.2,45,300 தமிழ்நாடு அரசு பங்குத்தொகையாக ரூ.3,50,000 பெறப்பட்டுள்ளன.

இம்மாவட்ட ஒன்றியம் பிரதம சங்கங்களிடமிருந்து, ஆறு பால் வழித் தடங்கள் மூலம் பால் சேகரம் செய்து திருவில்லிபுத்தூர், விருதுநகர் ஆகிய இரு பால் குளிர்விக்கும் நிலையங்களில் குளிர வைத்து இம்மாவட்டத்திற்குத் தேவையான பாலை விற்பனை செய்துவிட்டு உபரிப் பால் முழுவதையும் மதுரை மாவட்டப் பால் ஒன்றியத்திற்கு அனுப்பி வருகிறது.

வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம் பாட்டுத் திட்டத்தின் கீழ் காரியாபட்டி, நதிக்குடி, சிவகாசி, சாத்தூர், வெம்பக் கோட்டை ஆகிய 5 ஊராட்சி ஒன்றியங் களில் உள்ள 24 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு உயரின பசும்பால் வளர்ப்பதற்காக 10 செண்ட் நிலத்திற்கு ரூ.100 வீதம் ரூ.50,000 மானியம் வழங்கப்பட்டு உள்ளது.

இம்மாவட்டத்தில் இயங்கிவரும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங் களின் உறுப்பினர்களுடைய கால்நடை களுக்குத் தேவையான மருத்துவ வசதிகள், இவ்வொன்றியம் மற்றும் பால்வளத் துறையால் நான்கு நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் மூலம் வழங்கப் பட்டு வருகின்றனதற்போது 85 சங்கங் களுக்கு இவ்வசதிகள் வழங்கப்பட்டு மாதந் தோறும் சுமார் 800 கால்நடைகளுக்கு இலவசமாக சிகிச்சை அளிக்கப்பட்டு வரு கிறது.

காமராஜர் மாவட்டத்தில் உள்ள நுகர்வோர்களுக்குத் தரமான பதப்படுத் தப்பட்ட பாலைச் சுகாதார முறைப்படி, பிளாஸ்டிக் பைகளில் விநியோகம் செய்ய, தற்பொழுது இயங்கி வரும் திரு வில்லிபுத்தூர் பால் குளிர்விக்கும் நிலையம் மேம்படுத்தப்பட்டு, சிறு பால் பதனிடும் ஆலையாக மாற்றத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

1987-88-ஆம் ஆண்டு ஒருங் கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடான ரூ.16 இலட்சத்தில் ரூ.5.65 இலட்சம்

மானியமாக தமிழக அரசு வழங்கி உள்ளது. இத்திட்டத்தின் கட்டுமானப் பணி முடிவுற்று இயந்திரங்கள் நிறுவும் வேலை நடைபெற உள்ளது. இத்திட்டம் டிசம்பர் 1990-இல் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

காமராஜர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கால்நடைகளுக்கும் கோமாரி நோய் தடுப்புத் திட்டம் பெரிய அளவில் செயல்படுத்த தேசிய பால்வள வாரியத்தால் மூன்றாம் பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் சுமார் ரூ.85 இலட்சம் ஒதுக்கப்பட்டு இம்மாவட்ட ஒன்றியத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## தருமபுரி மாவட்டம்

தருமபுரி மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், இரண்டு பால் குளிரூட்டும் நிலையங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. ஒரு நாளைக்கு 40,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பாலினைக் குளிரவைக்க வசதி கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் ஒன்று தருமபுரியிலும், ஒரு நாளைக்கு 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பாலினைக் குளிரவைக்க வசதி கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் ஒன்று தேன்கனிக்கோட்டையிலும் அமைந்துள்ளது. மற்றும் ஒரு நாளைக்கு 1,00,000 லிட்டர் கொள்ளவு கொண்ட பாலினைப் பதப்படுத்தும் நிலையம் ஒன்று கிருட்டிணகிரியில் அமைந்துள்ளது.

அத்தோடு, ரூ.3.50 கோடி செலவில் வறட்சிக்கு இலக்காகும் பகுதி நிவாரணத் திட்டத்தின் கீழ் அரசு மானியத்தால் கட்டப்பட்டுள்ள பால் சமப்படுத்தும் பண்ணையானது கிருட்டிணகிரியில் அமைக்கப்பட்டுள்ளது.

நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.34.24 இலட்சங்களில் சுமார் 120 சங்கங்களுக்கு சொந்தமாக கட்டடங்கள் கட்டிக்கொள்ள வேண்டி ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

பயிரிடப்படாத தரிசு நிலங்களில் மரம் மற்றும் தீவனப் பயிர்களைப் பயிரிட்டு அதன் மூலம் கிடைக்கும் பசுந் தீவனங்களைக்கறவை இனங்கட்கு அளித்து பால் உற்பத்தியைப் பெருக்க இத்திட்டத்தின் கீழ் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தைச் சிறந்த முறையில் மாவட்டப் பால்வள ஒன்றியங்கள் மூலம் தேசிய பால்வள நிறுவனம் நிறைவேற்றி வருகிறது. இதற்கான நிதியினை மைய அரசின் மூலம் பெற்று கொடுக்கப்பட்டுள்ளது.

### 1991-ஆம் ஆண்டு அரசு விடுமுறை நாட்கள்

1991-ஆம் ஆண்டு அரசு விடுமுறை நாட்களாகக் கீழ்க் காணும் நாட்களைத் தமிழக அரசு அறிவித்துள்ளது. சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை ஆகிய விடுமுறை நாட்களுடன், கீழ்க்காணும் நாட்களும் பொது விடுமுறை நாட்களாகும்.

1991-ஆம் ஆண்டின் அரசு விடுமுறை நாட்கள்

| | | | |
|---|---|---|---|
| சனவரி | 1 | செவ்வாய் | ஆங்கிலப் புத்தாண்டு நாள் |
| சனவரி | 14 | திங்கள் | பொங்கல் திருநாள் |
| சனவரி | 15 | செவ்வாய் | திருவள்ளுவர் திருநாள் |
| சனவரி | 16 | புதன் | உழவர் திருநாள் |
| சனவரி | 26 | சனி | குடியரசு நாள் |
| மார்ச் | 17 | ஞாயிறு | தெலுங்குப் புத்தாண்டு நாள் |
| மார்ச் | 29 | வெள்ளி | நல்ல வெள்ளி |
| ஏப்ரல் | 1 | திங்கள் | வங்கிக் கணக்குகள் ஆண்டு முடிப்பு |
| ஏப்ரல் | 14 | ஞாயிறு | தமிழ்ப் புத்தாண்டு நாள் |
| ஏப்ரல் | 17 | புதன் | ரம்சான் |
| மே | 1 | புதன் | மே தினம் |
| ஜூன் | 23 | ஞாயிறு | பக்ரித் |
| ஜூலை | 23 | செவ்வாய் | மொகரம் |
| ஆகஸ்டு | 15 | வியாழன் | விடுதலை நாள் |
| செப்டம்பர் | 12 | வியாழன் | விநாயக சதுர்த்தி |
| செப்டம்பர் | 21 | சனி | மீலாடி நபி |
| செப்டம்பர் | 30 | திங்கள் | வங்கிக் கணக்குகள் அரையாண்டு முடிப்பு |
| அக்டோபர் | 2 | புதன் | காந்தி ஜெயந்தி |
| அக்டோபர் | 17 | வியாழன் | ஆயுத பூஜை |
| அக்டோபர் | 18 | வெள்ளி | ஆயுத பூஜை |
| நவம்பர் | 5 | செவ்வாய் | தீபாவளி |
| டிசம்பர் | 25 | புதன் | கிருஸ்துமஸ் |

ஏப்ரல் 1 திங்கட்கிழமை, செப்டம்பர் 30 திங்கட்கிழமை ஆகிய விடுமுறை நாட்கள் அரசு அலுவலகங்களுக்குப் பொருந்தா.

கீழ்க்காணும் நாளும் அரசு விடுமுறை நாளாகும்.

மார்ச் 28 வியாழக்கிழமை மகாவீரர் ஜெயந்தி.



# உதகையில் பட்டுவளர்ச்சி

'**ம**லைகளின் அரசி' என அழைக்கப்படும் நீலகிரி மாவட்டத்தில் இயற்கைச் சூழலில் அமையப்பெற்ற கிராமம் தெங்குமரஹாடா. இப் பகுதியானது மலையும் சோலையும் நதியும் சூழ்ந்த இயற்கை வனப்புக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் நிலப் பகுதியாகும்.

மாவட்டத்தின் அடிவாரத்தில் அமையப்பெற்ற இப்பகுதியில் நெல், கடலை, வாழை, பாக்கு, மல்பரி செடிகள் போன்றவை பயிராகின்றன. நீர்வளமும், நிலவளமும் உள்ள இப் பகுதியில் பட்டுத் தொழில் மிகவும் சிறப்புடன் நடைபெற்று வருகின்றன.

இங்கு 1980-81 ஆம் ஆண்டில் முதன் முதலாக 13.00 ஏக்கரில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மல்பெரி நடவு செய்யப்பட்டது. தற்சமயம் இந்த ஒரே ஒரு கிராமத்தில் மட்டும் 116 ஏக்கரில் 116 விவசாயிகள் முசுக்கொட்டை நடவு செய்து நன்முறையில் புழு வளர்ப்பு செய்து வருகிறார்கள்.

இங்கு ஒரு இளம்புழு வளர்ப்பு மையம் அமைத்து, அதன் பணிகளைச் செய்யவும், விரிவாக்கப் பணிகளைச் செய்யவும், ஒரு உதவி ஆய்வாளர் பணியிடமும், நான்கு இளநிலை ஆய்வாளர்கள் பணியிடமும் அனுமதிக்கப்பட்டுள்ளன.

இங்கு 82-83 ஆம் ஆண்டு முதல் தெங்குமரஹாடா கூட்டுறவுப் பண்ணைச் சங்கத்தின் நிலம் 4.00 ஏக்கர் குத்தகைக்கு எடுத்து முசுக்கொட்டை நடவு செய்யப்பட்டு நவீன தொழில் நுட்பங்களுடன் இளம்புழு வளர்ப்பு செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இளம்புழு வளர்ப்புப் பணிக்கெனக் கட்டிடம் கட்ட ரூ.2.0 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் 1.94 இலட்சம் ரூபாய் செலவில் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

1989-90 ஆம் ஆண்டில் ரூ.12 இலட்சம் மதிப்புள்ள பட்டுக்கூடுகள் இந்தக் கிராம விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இக்கிராமத்தில் நாள்தோறும் பட்டு வளர்ப்புத் தொழிலால் சராசரி 150 நபர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கின்றது. தொடர்ந்து 90-91 ஆம் ஆண்டில் 190 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும் ரூ.16 இலட்சம் மதிப்புள்ள பட்டுக் கூடுகளை உற்பத்தி செய்யவும் பட்டுவளர்ச்சித்துறை முனைந்து செயல்படுகின்றது.

இவ்விவசாயிகள் பட்டுக் கூடுகளுக்கு அதிக விலை கிடைக்கக் கூடிய தரமான கூடுகளை உற்பத்தி செய்யும் வகையிலும், பட்டு **உற்பத்தியைப்** பெருக்கவும் விஞ்ஞான முறையில் இளம்புழு வளர்ப்பு நிலையம் மலைப்பகுதிமேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் 2 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு, ஆண்டிற்கு 16,000 முட்டைகள் வளர்க்கப்பட்டவை, இன்று ஆண்டிற்கு 70,000 முட்டைத் தொகுதிகள் வரை வளர்க்கப்பட்டு இளம்புழுக்களாக விநியோகம் செய்யப்படுகின்றன. இதனால் இக்கிராமத்தில் உள்ள 116 விவசாயிகளும் பயனடைவர்.

பட்டு வளர்ச்சித் தொழிலில் நீலகிரி மாவட்டத்திற்கு மைல்கல்லாக உள்ள பகுதி தெங்குமரஹாடாப் பகுதியாகும். இங்கு பட்டு வளர்ப்பு சீரும் சிறப்புமாக நடைபெறுவதற்கு இதன் சீதோஷ்ண நிலையே முழு முதல் காரணம் ஆகும். இத்தொழிலில் நீலகிரி மாவட்டம் முன்னேற்றம் கண்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**— செய்தி மக்கள் தொடர்பு**

**அலுவலர்**

**நீலகிரி மாவட்டம்**

# ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல!

ஆதி திராவிடர்களுக்காக இந்த ஆண்டு 47,000 இலவச காங்க்ரீட் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.







வேலையில்லாத பட்டதாரிகளுக்குப் பத்திரப் பதிவு எழுத்தர் வேலை கொடுக்கப்பட உள்ளது என்றும், இதனால் ஏற்கெனவே இத் தொழிலைச் செய்கிறவர்கள் பாதிக்கப்படமாட்டார்கள் என்றும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு நாஞ்சில் மனோகரன் அவர்கள் கன்னியாகுமரியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பணிக்காலத்தில் உயிரிழக்கும் அரசு ஊழியர் குடும்பத்திற்கு ரூ.40 ஆயிரம் வழங்கும் குடும்பநலத் திட்டம், சத்துணவுத் திட்டத்திலும் தொகுப்பு ஊதியம் பெறும் இதர துறைகளிலும் உள்ள 2.34 இலட்சம் ஊழியர்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.






சென்னை மாநகரின் சீரமைப்புப் பணிகளுக்கு, வருகிற ஆண்டில் ரூ. 41 கோடி செலவில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று சென்னை மாநகராட்சி அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் ஏற்கெனவே 1 இலட்சம் சிறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப் பட்டுவருகிறது. இப்பொழுது மேலும் 11.5 இலட்சம் சிறிய பெரிய விவசாயிகள் அனைவருக்கும் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் பம்ப்செட்டுகளுக்கான மின்சாரத்தைத் தமிழக அரசு இலவசமாக வழங்கும் என்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.







அனாதை இல்லங்களில் சேர்க்கப்படும் குழந்தைகள், கல்வி, வேலைவாய்ப்பைப் பொறுத்தவரையில் பொதுத் தொகுப்பினராகக் கருதப்பட்டு வந்தனர். அந்த நிலையை மாற்றி கல்வி, வேலை வாய்ப்புகளில் உரிய சலுகைகளைப் பெற்றிடும் வகையில் அவர்களைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கும்படி மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.



# பல்லக்கும் காட்டுநாய்க்கன்களும்

வடார்க்காடு-அம்பேத்கர், திருவண்ணாமலை-சம்புவராயர், தென் ஆர்க்காடு மாவட்டங்களில் அரக்கோணம், சேண்பாக்கம், தொரப்பாடி, வேலூர், கலசபாக்கம், மேல்சிறுபாக்கம், மேல்செட்டிப் பாக்கம், பவுத்திரம், பனியூர், வள்ளுவாகை, குங்கிலிய நத்தம், காட்டு சித்தாமூர், காட்டு மலையனூர், வயலூர், வேலையாம்பாக்கம், ஆனைமங்கலம், துரிஞ்சிப்பட்டு, பட்டா குறிச்சி, கண்டாச்சிபுரம், பொறவடை, சித்தமலை, கடலூர், சோமஸ்பாடி, பாக்கம், வடபொன்பரப்பி, புதூர், சந்தப்பேட்டை, குச்சிக்காடு, வீரமூர் போன்ற இடங்களில் காட்டு நாய்க்கன் எனப்படும் ஒரு குறிப்பிட்ட இன மக்கள் சிறு சிறு கூட்டமாக வாழ்ந்து வருகின்றனர். குறைந்த பட்சம் மூன்று குடும்பங்கள் முதல் அதிக பட்சம் 50 குடும்பங்கள் வரை கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங் களிலும் தனியாகவே வாழ்ந்து வரு கின்றனர். முற்காலத்தில் ஒதுக்குப் புறத்தில் காட்டுப்புல்லால் வேய்ந்த குடிசைகளில் வாழ்ந்தனர். இன்று கிராமங்கள் வளர்ச்சி அடைவதால் இவர்களது இருப்பிடம் கிராமங்களோடு இணைந்துள்ளது.

### வந்தோடிகள்

இவர்கள் காடுகளில் நாய்களுடன் வேட்டையாடி வந்துள்ளனர். இவர் களின் முன்னோர் பெல்லாரி துங்கபத்திரா நதிக்கரையிலுள்ள கம்பலி என்ற ஊரிலிருந்து தமிழ் நாட்டிற்குக் குடியேறினர் என்று கூறப்படுகிறது. காட்டு நாய்க்கன்- களை அவர்கள் வாழும் கிராமத்தைச் சார்ந்த மற்ற மக்கள் ''வந்தோடிகள்'' என்று கூறுகின்றனர். இவர்கள் தங்கள் சூழ்நிலைகளுக்கேற்ப தங்கள் தொழிலையும் மாற்றி வாழ்கின்றனர்.

பொதுவாக கூடை பின்னும் தொழிலில் இருபாலரும் ஈடு பட்டுள்ளனர். கூடை என்று சொல்லாமல் ''புட்டு'' என்று கூறு கின்றனர். ஈச்சங் கசங்குகளை மலைப் பகுதிகளிலிருந்தும், காடுகளிலிருந்தும் வெட்டிக் கொண்டு வருகின்றனர். அதனை வெட்ட வளைந்த கத்தியை நீண்ட மூங்கில் குச்சிகளில் பொருத்திப் பயன்படுத்துகின்றனர். கசங்குகளைக் கிழிக்க தனி கத்திகளை மரப்பிடி போட்டுப் பயன்படுத்துகின்றனர். ஈச்சமரக் கசங்குகளால் தானியக்கூடை, கோழிக்கூண்டு, போன் கூடை, போஜனக்கூடை, பாம்புக்கூடு போன்றவை செய்கின்றனர்.

இவர்கள் வேட்டையாடுவதிலும் ஈடுபட்டுள்ளனர். காட்டுப்பகுதி

**காட்டில் நாய்கள் மூலம் வேட்டையாடியதால், காட்டு நாய் நாய்க்கன் என்றும், காட்டில் வேட்டைத் தொழில் செய்து வந்ததால், காட்டு நாய்க்கன் என்றும் அழைக்கப்பட்டனர்.**

**வே. ஜெயராஜ்,**
**காப்பாட்சியர்,**
**அரசு அருங்காட்சியகம்,**
**வேலூர்.**

களில் ஆமை, அணில் போன்ற வற்றை வலைகொண்டு பிடிக்கிறார் கள். குளம், குட்டைகளில் மூங்கில் கொம்புகளைக்கொண்டு தலையில் குத்திக் கொண்டே செல்கின்றனர். ஆமையிருந்தால் ஆமை ஒட்டில் படும். உடனே வலைகளைக்கொண்டு இரண்டு பேர் முதல் பலர் சேர்ந்து ஆமையைப் பிடிக்கின்றனர். அணில் வாழும் பகுதிகளில் அணில் பிடிக்கும் வலை களைக்கட்டி பலர் அணில்கள் வாழும் பகுதியிலிருந்து அவற்றைக் கலைத்து வலைக்கு நேராக ஓட வைக்கின்றனர். வலையில் சிக்கிக் கொண்டதும் தடியால் அடிக்கின்றனர். இவைகளின் மாம்சத்தை இவர்கள் உண்கின்றனர். காலையில் புளித்த கம்புக் கூழை நீரில் கரைத்துச் சாப்பிடுகின்றனர்.

இம்மக்கள் விவசாயத்திலும் ஈடு பட்டுள்ளனர். சிலர் தங்களது வருமானத்தால் நிலங்கள் வாங்கி அதில் கம்பு பயிரிடுகின்றனர். மழையையே நம்பியுள்ள பகுதியில் விளையும் கம்பைத் தங்களது உணவுக்குப் பயன்படுத்துகின்றனர். தனியாக கிணறுவெட்டி, மாடுகள் வைத்து விவசாயம் செய்யும் அளவுக்கு வசதியில்லை.

**நாட்டு வைத்தியத்தில் சிறந்தவர்கள்**

இவர்கள் நாட்டு வைத்தியத்திலும் சிறந்தவர்களாயுள்ளனர். குறிப்பாக கிராமப்புறங்களில் சிலர் பாம்பு பிடித்தும், பாம்புக்கடி விஷம் இறக்கும் வைத்தியம் செய்தும், பாம்புகளைத் தோளில் போட்டுக்கொண்டு பிச்சை எடுத்தும் வாழ்கின்றனர். குறிப்பாக போளூர் வட்டம் கலசபாக்கத்தைச் சார்ந்த திரு. ஈ. வெங்கடாசலம் என்பவர் பரம்பரை பரம்பரையாக பாம்பு விஷக்கடிக்கு பத்துவித காட்டு மூலிகைகளைக் கொண்டு வைத்தியம் செய்து வருவதாகவும், இவரிடம் பாம்பு கடித்து விஷத்துடன் வந்தவர் அனைவருமே சுகமாகிச் சென்றுள்ளனர் என்றும் கூறப்படுகிறது. இவர் பாம்பு விஷக்கடி மருந்தைக் கூடு போல் தயாரிக்கப்பட்ட தேங்காய் ஓட்டுக்குள் வைத்துப் பாதுகாக்கிறார். பாம்பு கடித்து வருபவர்களின் வயதுக்கேற்ப முடியால் செய்யப் பட்ட கயிறுகளால் கட்டி விஷத்தைக் கால்பாதத்தில் கொண்டு வந்து கண்ணாடித்துண்டினால் காலைக் கீறி விஷத்தை இறக்குகின்றார்.



பாம்பு விஷக்கடி வைத்தியர் மிராஸ் வெங்கடாசலம் நபிரி என்ற இசைக் கருவி வாசிக்கிறார்.

பாம்பு கடித்தவர்களின் பற்கள் இறுக்கிக் கொள்வதால், திடமான மூங்கில் குச்சிகளைக் கொண்டு வாயை விரித்து மருந்து கொடுப்ப தாகவும் கூறினார்.

மேலும் இவர்களில் சிலர் கோயில் திருவிழா காலங்களில் கோயிலில் வெடிபோட்டும், 'நபரி' என்ற இசைக்கருவி வாசித்தும் இன்றும் ''மிராஸ்'' பெறுவதாகத் தெரிகிறது. இத்தொழிலின் மூலம் போதிய வருமானம் இல்லாததால் தகரங்களைக் கொண்டு 'டிங்கரிங்' வேலையும் செய்கிறார்கள்.

மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள காட்டு நாய்க்கன்களில் பலர் பாத்திரங்கள், கிழங்கு, காய்கறிகள் விற்றல், கூலிவேலை செய்தல் போன்ற தொழில்களில் ஈடு பட்டுள்ளனர்.

பல்லக்கு தூக்கும் பணியில் இவர் களின் முன்னோர்கள் அதிக அளவில் ஈடுபட்டிருந்ததாகத் தெரிகிறது. திருமண வைபவமாகிய மணமக்கள் ஊர்வலத்தின்போது மணமக்களைப் பல்லக்கில் வைத்து நான்குபேர் தூக்கிச் செல்வர். இப்பணிக்கு நான்கு மரக்கால் அரிசி, 1 மூடி தேங்காய், ஒரு துண்டு, வேட்டி கூலியாகப்பெறுவர். மேலும் காஞ்சிபுரம் மடம், திருவண்ணாமலை மடம், பூண்டி மடம் ஆகிய இடங்களில் இவர்களின் முன்னோர் பல்லக்கு தூக்கியதாகவும், இன்றும் காஞ்சிபுரம் சங்கரர் மடத்தில் காட்டு நாய்க்கன்கள் இப்படிப்பட்ட பணி செய்து வருவ தாகவும் கூறுகின்றனர்.

சுமார் 100 ஆண்டுகளுக்கு முந்தைய பல்லக்கு ஒன்று திருக் கோயிலூரை அடுத்த கரையான் பாளையம் கிராமத்திலிருந்து திரு. மாரிமுத்து காட்டு நாய்க்கனிடமிருந்து வெகுமதியாகப் பெறப்பட்டு, வேலூர் அரசு அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. இந்த பல்லக்கு மரத்தினால் ஆனது. இரண்டுபேர் வசதியாக உட்கார, கயிற்றால் பின்னப் பட்ட தொட்டிலும் இதில் இணைக்கப் பட்டுள்ளது. பல்லக்கில் அழகான வேலைப்பாடுகளுள்ள தொங்கட்டான் களைத் தயாரித்துத் தொங்க விடு வதிலிருந்து இவர்கள் கலையுணர்வு உள்ளவர்கள் என்பது புலனாகிறது. இது 19-ஆம் நூற்றாண்டைச் சார்நத தாக உள்ளது என்று தெரியவருகிறது.

காட்டு நாய்க்கன்கள் பலர் இன்று உடுக்கை அடித்து பிச்சை வாங்கி பிழைக்கின்றனர். பலர் மாறுவேடம் (பகல் வேஷம்) பூண்டு தெருக்கூத்து ஆடி பிச்சை பெறுகின்றனர். சிலர் இசைக்கருவிகள் வாசித்து கூலி பெறுகின்றனர். விழாக்காலங்களில் 'நபிரி' என்னும் இசைக்கருவி வாசித்து கூலி பெறுகின்றனர். சிலர் கிராமங்களில் உள்ள மாடுகளை மேய்த்தும், வீடுகள் தோறும் சென்று உணவைச் சேகரித்தும் வருகின்றனர்.

கிராமப்புறங்களில் வாழும் காட்டு நாய்க்கன்கள் கல்வி அறிவு அற்றவர் களாகவே உள்ளனர். கள்ளக்குறிச்சி வட்டம் கரையான் பாளையம் என்ற கிராமத்தில் ஒருவர் ஒன்பதாம் வகுப்புவரை படித்து விட்டு கூடை



கலசப்பாக்கம் வெ. மண்ணுக் காட்டு நாய்க்கன் என்பவர், வெடி போடும் குழாய்களுடனும், நபிரி என்ற இசைக்கருவியுடனும் இருக்கிறார்.

பின்னுகிறார். ஒரு சில சிறுவர்கள் பள்ளியில் பயில்கின்றனர். படிக்க விருப்பம் கொண்டுள்ளனர். நகர்ப் புறங்களில் வாழும் சிலர் தங்களது பிள்ளைகளைப் படிக்க வைத்துள்ளனர். ஒரு சிலர் ரயில்வே துறை, காவல் துறை, தபால்துறை ஆகியவற்றில் பணி புரிகின்றனர்.

### இசை

உடுக்கை, பம்பை, சலங்கை, நபிரி போன்ற இசைக்கருவிகளை அவ்வப்போது பயன்படுத்துகின்றனர். நபிரி என்ற இசைக்கருவியைக் கோயில் விழாக்காலங்களில் ஊர்வலத்தின் போது இசைக்கின்றனர். கூலியும் பெறுகின்றனர்.

தமிழ்நாடு கிராமியக்கலையாகிய தெருக்கூத்து நாடகத்தில் அதிக ஈடுபாடு இவர்களிடம் உண்டு. மாறு வேடம் பூண்டு இராமாயணம், மகாபாரதம் போன்றவற்றை இரவு 10 மணிமுதல் மறுநாள் காலை 5 மணிவரை தெருக்கூத்தாக நடத்து கின்றனர்.

### திருமணம்

இவர்களின் திருமணம் எளிமையாக நடைபெறுகிறது. ஒரு பெண்ணை திருமணத்திற்கு நிச்சயம் செய்து கருமணித்தாலி கட்டி விடுகின்றனர். நிச்சயம் ஆன பின் திருமணம் நடக்குமுன்னே குடும்ப வாழ்க்கை நடத்துகின்றனர். திருமணத்தில் 'பொட்டுத்தாலி' அணிந்து கொள் கின்றனர். இது அரைத்தேங்காய்மூடி போன்று வெள்ளியில் இருக்கும். பிழைக்கச் சென்ற இடத்தில் 'ஜாதிப் பணம்' என்று பெரியவர்களுக்குப் பணம் கொடுத்தும், குடிவகைகளை வாங்கிக் கொடுத்தும் திருமணம் செய்து கொள்கிறார்கள்.

மணமகன் பெண்ணுக்கு 'பரியம்' கொடுத்தே திருமணம் செய்து கொள்கிறான். எரமுட்டையில் (வரட்டி) காலணா வைத்து, ஏழு வராகன் (1 வராகன் = 3½ ரூபாய்) பரியம் கொடுப்பார்கள். இதனை ''முலைப்பால் காசு'' என்றும் கூறு கின்றனர். இதனைப் பெண்ணின் தாய்க்குத் கொடுக்கின்றனர். பொது வாக தங்கள் இனத்தவர்களுக்கிடையே தான் திருமணம் நடக்கிறது.

மனைவிக்கும், கணவனுக்கும் இடையில் வெறுப்பு வந்து ஒருவரை ஒருவர் விரும்பவில்லை எனில், எரமுட்டையில் காலணா வைத்து ''கள்'' ஊற்றுவார்கள். அப்போது அவர்களது உறவு அற்றுப்போகும். மறுமணம் செய்து கொள்ளலாம். திருமணம் ஆனதும் பெண்ணுக்கோ, ஆணுக்கோ ஒருவரை ஒருவருக்குப் பிடிக்கவில்லை எனில், திருமணச் செலவுத் தொகையைக் கொடுத்துத் தீர்க்க வேண்டும். தங்களது இனத்தவர் உயர்ந்த இனத்தவரிடம் பெண் எடுத்தால் சேர்த்துக்கொள்கிறார்கள். விதவை மறுமணமும் உண்டு.

இவர்கள் தெய்வ வழிபாட்டில் ஆர்வம் கொண்டவர்கள். முனீஸ்வரன் இவர்களது குலதெய்வமாகும். நான்கு கற்களை, மூன்று ஒரு பக்கமும், மற்றொன்று ஒரு பக்கமும் வைத்து வணங்குகின்றனர். காது ஓலை, கருகமணி, கருவாடு, சாராயம், சுருட்டு, கள் போன்றவற்றைத் தங்கள் தெய்வத்திற்குப் படைக் கின்றனர். மேலும் கோயில்களில் கோழி, பலி செலுத்துகின்றனர். 'பெரியாயி' என்ற கிராம தேவதையை யும் வணங்குகின்றனர். இவர்கள் மற்ற இனமக்களுடன் கிராமக் கோயில்களில் வணங்குவது கிடையாது. இவர்கள் இந்து சமயத்தைச் சார்ந்த வர்கள்.

இறந்தவர்களைப் பாடை கட்டித் தூக்கிச் செல்கின்றனர். இறந்த தலைப்பிள்ளையை எரித்து விடு கின்றனர். மற்றவர்களைப் புதைக் கின்றனர். கருமாதியும் உண்டு.

இவர்கள் பொதுவாக தமிழ் மொழி பேசுகின்றனர். சிலர் தமிழும் தெலுங்கும் கலந்து பேசுகின்றனர். அந்நியர் இருக்கும் போது 'பைல்' என்ற எழுத்தற்ற மொழிபேசு கின்றனர்.

இவர்கள் தங்களுக்குள் சில சமூக மேம்பாட்டுச் சங்கங்களை அமைத்து முன்னேற்றப் பாதையில் நடை போடுகின்றனர். இவர்களில் பலர் அரசின் சலுகை பெற்று வீடுகளில் சாண எரிவாயுக் கலன்கள் போன்றவை அமைத்தும் விவசாயம் செய்தும் முன்னேறியுள்ளனர். இவர்கள் வாழும் தெருக்களில் தெருவிளக்குகள், குடிநீர்க் குழாய்கள் அமைக்கப் பட்டுள்ளன.

# பெரியார் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்



பெரியார் மாவட்டத்தில், ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் நடப்பாண்டிற்கு ரூ.614.86 இலட்சம் ஒதுக்கீடாகியுள்ளது. 2823 வேலைகள் எடுத்து செய்யப்பட்டு வருகின்றன.

ஆதிதிராவிடர்களுக்கு இலவசத் தொகுப்பு வீடுகள் நடப்பாண்டில் 1900 வீடுகள் ரூ.193.80 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. இதில் பேரூராட்சிப் பகுதிகளில் 285 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இதுவரை 591 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

சொந்தக் கட்டடமில்லாத 80 ஊராட்சி, பேரூராட்சி மன்றங்களுக்குச் சொந்தக் கட்டடம் ரூ.54.80 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு, வருகின்றன. இதுவரை 40 கட்டடங்கள் முடிக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் பள்ளிக் கட்டடமே இல்லாத 21 இடங்களில் புதிய பள்ளிக் கட்டடங்கள் ரூ.26.25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. இதுவரை 7 பள்ளிக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

கப்பிச் சாலைகள் 155.8 கி.மீ. தொலைவு ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டிலும், தார்ச் சாலை 122.7 கி.மீ. தொலைவு ரூ.180.00 இலட்சம் மதிப்பீட்டிலும் போடப்பட்டு வருகின்றன. இதுவரை 53 சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ஊராட்சி, பேரூராட்சிகள் 552 பணிகள் ரூ.94.115 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்து செய்யப்பட்டு வருகின்றன. இதில் 212 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதுவரை இத்திட்டத்தில் ரூ.337.632 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 11.635 இலட்ச மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் இருதய அறுவைச் சிகிச்சை மற்றும் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்வதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து இதுவரை 24 நபர்களுக்கு ரூ.1.17 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. செப்டம்பர் '90 திங்களில் 10 நபர்களுக்கு தலா ரூ.5 ஆயிரம் வீதம் இருதய அறுவைச் சிகிச்சை செய்வதற்காக ரூ.50 ஆயிரமும், சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்வதற்காக ஒரு நபருக்கு ரூ.5 ஆயிரமும் ஆக மொத்தம் ரூ.55 ஆயிரம் வழங்கப்பட்டது. 31.9.90 முடிய 35 நபர்களுக்கு ரூ.1.2 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

பெரியார் மாவட்டத்தில், 1990-91-ஆம் ஆண்டில் பழுதுபட்ட பள்ளிக் கட்டடங்களில் 1768 பள்ளிக் கட்டடங்கள் பழுதுபார்க்க எடுத்துக் கொள்ளப்பட்டு, இதுவரை 1078 பள்ளிக் கட்டடங்கள் பழுது பார்க்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு ரூ.29.00 இலட்சம் அரசு மானியமாகப் பெறப்பட்டு, ரூ.25.82 இலட்சம் மான்யமும், ஊராட்சி ஒன்றியப் பங்குத் தொகையாக ரூ.16.32 இலட்சமும், ஆக ரூ.42.14 இலட்சம் இதுவரையில் செலவிடப்பட்டுள்ளது.

பெரியார் மாவட்டத்தில் செயல்படும் 6 கூட்டுறவு நகர வங்கிகள் 1990-91-ஆம் நிதியாண்டுக்கு, செப்டம்பர் '90 திங்கள் முடிய ரூ.69.71 இலட்சமும், பெரியார் மத்தியக் கூட்டுறவு வங்கி ரூ.12.30 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.82.01 இலட்சம் சிறுதொழிற்கடன் வழங்கி உள்ளன.

இம்மாவட்டத்தில், மொடக்குறிச்சி மற்றும் 10 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்ட அனைத்து வேலைகளும் முடிவுற்று, பயன்பாட்டில் இத்திட்டம் இருந்து வருகிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தற்போது பராமரிக்கப்பட்டு வருகிறது. புரவி பாளையம் மற்றும் 31 குடியிருப்பு

களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் முடிக்கப் பெற்று, சோதனை நீர் ஏற்றும் பணி நடைபெற்று வருகிறது. பொன்னிவாடி மற்றும் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடி நீர்த் திட்டத்தின்கீழ், மேல்நிலைத் தொட்டிகள் கட்டுதல், பகிர்மானக் குழாய்கள் பதித்தல், அரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுதல் ஆகிய பணிகள் முடிவுற்றுள்ளன. குழாய் பதிக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டுள்ளன. சேர்வைக் காரன்பாளையம் மற்றும் 5 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், தலைமையிடப் பணிகள், நீரேற்றுக் குழாய் பதிக்கும் வேலைகள், மேல்நிலைத் தொட்டிகள் கட்டும் பணிகள் ஆகியவை முடிவுற்றுள்ளன. மற்றும் குழாய் பதிக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டுள்ளன. அக்கரைப்பாளையம் மற்றும் 12 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் (மூலனூர் ஊராட்சி ஒன்றியம்) நீர் ஊற்றுக் கிணறு, மேல்நிலைத் தொட்டிகள் கட்டுமானப் பணிகள், பகிர்மானக் குழாய்கள் பதிக்கும் பணிகள், நீரேற்றுக் குழாய்கள் பதிக்கும் பணிகள் முடிக்கப்பட்டு, குழாய் இணைப்புப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. சுண்ணாம்புக்காடு மற்றும் 9 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், நீரேற்றுக் குழாய்கள் பதிக்கும் பணியும் பொதுக் குழாய்களில் குழாய் இணைப்புப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. தாமரைப்பாடி மற்றும் 9 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், குழாய் பதிக்கும் பணி நடைபெற்று வருகிறது. காட்டூர் மற்றும் 12 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், (அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியம்) நீர் சுத்திகரிப்பு நிலையப் பணிகள் தவிர மற்றும் திட்டத்தின் அனைத்துப் பணிகளும் முடிவுற்றுள்ளன. நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் கட்டுமானப் பணி நடைபெற்றுக் கொண்டுள்ளது. காசிபாளையம், மாக்கினாம்கோம்பை, அக்கரைக் கொடிவேரி ஆகியவற்றிற்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், மேல்நிலைத் தொட்டிகள், நீரேற்றுக் குழாய்கள் பம்புசெட் நிறுத்தும் பணிகள் ஆகியவை முன்னேற்ற நிலையில் உள்ளன. பகிர்மானக் குழாய்கள் பதிக்கும் வேலைகளுக்கான ஒப்பந்தம் முடிவு செய்யப்படவுள்ளது.

கோபி நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தில் சுத்திகரிக்கப்படாத நீரேற்று இயந்திரம் பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது. மற்றைய பணிகள் முடிவுற்றுள்ளன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ், நடப்பு ஆண்டில் இத்திட்டத்தின் கீழ்; இம்மாவட்டத்தில் வறுமைக் கோட்டிற்கும் கீழ் உள்ள 8309 குடும்பங்களுக்கு ரூ.261.406 இலட்சம் மான்யமும், மற்றும் கடனுதவிகளும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை ரூ.87.24 இலட்சம் மானியம் இத்திட்டத்தில் செலவிடப்பட்டு, இதன் மூலம் 2890 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

**இரா.பா.கார்மேகம்,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெரியார் மாவட்டம்**

---

# விஞ்ஞான விந்தை

தாயின் வயிற்றுக்குள் இருந்த 24 வாரக் குழந்தையை வெளியே எடுத்து, அதற்கு வெற்றிகரமாக அறுவைச் சிகிச்சை செய்து அமெரிக்க மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர். அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு அந்தக் குழந்தை, மீண்டும் தாயின் வயிற்றுக்கு உள்ளேயே வைக்கப்பட்டது. இதற்கு ஏழு வாரங்கள் கழித்து, அந்தக் குழந்தை நலமுடன் பிறந்தது. இப்போது கை கால்களை உதைத்துக் கொண்டு துள்ளி விளையாடிக் கொண்டிருக்கிறது.

கருப்பைக்குள் இருக்கும் குழந்தைகளுக்கு இதற்கு முன்பு கூட சிகிச்சைகள் செய்யப்பட்டதுண்டு. சோகை பிடித்துள்ள குழந்தைகளுக்குப் புதிய இரத்தம் அளித்தல், நுரையீரல் சரியாக வளர்ச்சி பெறாத குழந்தைகளுக்கு வீரிய மருந்துகளைக் கொடுத்தல் போன்ற சிகிச்சைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. தாயின் வயிற்றில் சிறு துளையிட்டு, ஊசிகள் மூலம் மருந்துப் பொருட்கள் வயிற்றுச் சிசுக்களுக்குச் செலுத்தப்பட்டதுண்டு. ஆனால், தாயின் வயிற்றிலிருந்து குழந்தை வெளியே அகற்றப்பட்டு, அதற்குப் பெரிய அளவிலான வெற்றிகரமான அறுவைச் சிகிச்சை நடத்தப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

இந்த அறுவைச் சிகிச்சை நடத்தப்பட்ட குழந்தையின் மார்புக்கூட்டையும், இரைப்பையையும் பிரிக்கும் தடுப்புச் சுவரில்(உதரவிதானத்தில்) பெரிய துளை இருந்தது. இதனால் அதன் குடல், மண்ணீரல் ஆகியவை இந்தத் துளை வழியாக மார்புக் கூட்டுக்குள் துருத்திக் கொண்டிருந்தன. இதனால் அதன் நுரையீரல்கள் வளர்ச்சியடைவதற்கு அதன் மார்புக்கூட்டில் இடம் போதவில்லை.

பல குழந்தைகளுக்கு இதுபோல உதரவிதானத்தில் துளை ஏற்படுவதுண்டு. ஆனால், கருவானது எட்டு வாரங்கள் வளர்ச்சியடைந்த நிலையில், இந்தத் துளையும் தானாகவே மூடிக்கொள்ளும். எனினும், சில குழந்தைகளுக்கு, ஏதோ கோளாறினால், இந்தத் துளையானது மூடிக்கொள்ளாமல் அப்படியே இருந்து விடுவதுண்டு. 2,500 பேரில் ஒருவருக்கு இதுபோல நேரிடுகின்றது. இந்தக் குழந்தைக்கும் அந்தக் கோளாறு ஏற்பட்டிருந்தது. 54 நிமிடங்களில் அறுவைச் சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்து முடித்தனர்.

இத்தகைய குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை செய்து, அவற்றின் மார்புக் கூட்டிற்குள் துருத்திக் கொண்டிருக்கும் குடல்களை இரைப்பைக்குள் தள்ளிவிட்டுச் சரியாகப் பொருத்தாமல் போனால், இக்குழந்தைகள் செத்துப் பிறக்கும் அபாயம் உண்டு. இத்தகைய குழந்தைகளில் 75 சதவீதம் செத்துத்தான் பிறக்கின்றன.

— அமெரிக்கத் தகவல் நிலையம்

# உழைக்க வேண்டும்

— பி.வி. கிரி

தெரு என்றால் சுத்தம் வேண்டும்
தீபம் என்றால் வெளிச்சம் வேண்டும்
குரு என்றால் அடக்கம் வேண்டும்
கோலம் என்றால் ஒழுங்கு வேண்டும்.

கொடி என்றால் படர வேண்டும்
கொலு என்றால் வரிசை வேண்டும்
செடி என்றால் வளர வேண்டும்
சேவை என்றால் தூய்மை வேண்டும்.

இடி என்றால் முழங்க வேண்டும்
இசை என்றால் கவர வேண்டும்
படி என்றால் உயர வேண்டும்
பசு என்றால் கறக்க வேண்டும்.

மலை என்றால் வளமை வேண்டும்
மதி என்றால் ஒளிர வேண்டும்
சிலை என்றால் அழகு வேண்டும்
சுளை என்றால் இனிக்க வேண்டும்.

மண் என்றால் விளைய வேண்டும்
மனம் என்றால் உண்மை வேண்டும்
கண் என்றால் கனிவு வேண்டும்
கை என்றால் உழைக்க வேண்டும்.



# வைட்டமின் வரலாறு

'வைட்டமின்' என்ற சொல் 'வைட்ட' என்னும் இலத்தீன் மொழிச் சொல்லின் அடியொற்றிப் பிறந்தது. 'வைட்ட' என்ற இலத்தீன் மொழிச் சொல்லுக்கு 'உயிர்' என்று பொருள். 'அமின்' என்ற சொல் அம்மோனியாவிலிருந்து தயாரிக்கப்பட்ட பொருள் என்பதை உணர்த்துகிறது. எனவே, வைட்டமின் (Vitamine) என்பது அம்மோனியாவிலிருந்து தயாரிக்கப்பட்ட உயிர் போன்ற முக்கியமான பொருளாகும். வைட்டமின் என்ற பெயரைச் சூட்டியவர், ஃபங்க் (Funk) என்னும் விஞ்ஞானியாவார். அவர் பெயர் சூட்டிய ஆண்டு 1912.

1912-ஆம் ஆண்டிற்குப்பின் புதுப் புது வைட்டமின்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அவற்றின் தன்மை, பண்புகள் ஆகியவை குறித்து அலசி ஆராயப்பட்டன. அம்மோனியாவிலிருந்து தயாரிக்கப்பட்ட உபபொருள்கள் எல்லா வைட்டமின்களிலும் இல்லை என்று அந்த ஆராய்ச்சிகளில் தெரியவந்தது. எனவே, அமின் (Amine) என்ற பிரிவில் உள்ள 'E' என்னும் எழுத்து கைவிடப்பட்டது. அதுமுதல் 'Vitamine' என்ற பெயர் Vitamin என்று குறுக்கப்பட்டது.

1912-ஆம் ஆண்டு வைட்டமின் என்ற பெயர் சூட்டப்பட்ட போதிலும், அதற்கு முன்னரே வைட்டமின்களைப் பற்றி விஞ்ஞானிகள் அறிந்திருந்தனர்.

ஊட்டச் சத்துக் குறைவினால் தவிட்டான் எனப்படும் பெரி-பெரி (Beriberi) நோய் உண்டாகிறது. ஊட்டக் குறைவினால் சொறி, கரப்பான், பல் ஈறு வீக்க நோய் ஏற்படுகிறது. உணவில் சில குறிப்பிட்ட பொருள்கள் இல்லாததால் இந்த நோய்கள் ஏற்படுகின்றன என்று விஞ்ஞானிகள் தெளிவாகத் தெரிவித்தனர்.

— திரு வி.என்.சாமி எழுதிய 'உயிர் காக்கும் வைட்டமின்கள்' என்னும் நூலிலிருந்து.

# பழமொழிகள்

அக்கரைக்கு இக்கரை பச்சை.
அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
அகம் குளிர முகம் குளிரும்.
அதிக ஆசை அதிக நஷ்டம்.
ஆசை ஒழிந்தால் அல்லல் தீரும்.
ஆபத்துக்கு உதவினவனே நண்பன்.
ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.
ஆனைக்கும் அடி சறுக்கும்.
இருக்கிறதை விட்டுப் பறக்கிறதைப் பிடிக்கலாமோ?.
இளமையில் கல்வி சிலையில் எழுத்து.
இறைக்கிற கிணறு சுரக்கும்.
ஈரம் இருக்கிற இடத்தில் ஈ மொய்க்கும்.
உப்பு இட்டவரை உள்ளளவும் நினை.
உபகாரம் செய்தவருக்கு அபகாரம் செய்யலாமா?.
ஊதுகிற சங்கை ஊதினால் விடிகிறபோது விடியட்டும்.
எட்டி பழுத்தால் என்ன? ஈயாதார் வாழ்ந்தால் என்ன?.
எரிகிற விளக்கு ஆனாலும் தூண்டுகோல் ஒன்று வேண்டும்.

TNPSC

விளம்பர எண் 41/90.

தமிழ்நாடு நீதிப் பணியில் (Tamil Nadu State Judicial Service) 83 மாவட்ட முன்சீப் மற்றும் - குற்றவியல் நீதிபதி பதவிகளுக்கு (District Munsif cum Judicial Magistrate) நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்யப்பட விண்ணப்பங்கள் 5.12.1990 அன்று மாலை 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

குறிப்பு: நேரடித் தேர்வின் மூலம் தெரிவு செய்யப்படும்போது பெண்களுக்கான 30 சதவிகித ஒதுக்கீடு பின்பற்றப்படும்.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2500-75-3100-100-4200.

**வயது:** 1.7.1990 அன்று 30 வயதிற்குக் குறைவாக (சலுகைகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது).

**Qualifications:-** 1. B.A., or B.Sc., or B.Com., or an Honours degree;

2. Must have been enrolled as an Advocate of a High Court or of any State Bar Council of the Indian Union;

And

3. Experience at the bar for a period of not less than three years.

**Note:** Destitute Widows who possess the prescribed qualifications and are found fit by getting the minimum marks for selection will be selected in preference to others who have secured even higher marks.

**Explanation:** "Destitute Widows" means a widow who has neither any means by herself to live nor any dependent to protect her from starvation.

ஆதி திராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கிற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் "பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்"/அறிவிக்கையில் தரப்பட்டுள்ளது. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.11.1990 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்துரூபாய்க்கான (ரூ.10/-) சென்னை அண்ணாசாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவதொரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.11.1990 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட சென்னை 600 006, ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியின் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூ.10/-) "கேட்புக் காசோலை" (Demand Draft)யுடன் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26×12 செ.மீ) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/2751/MS/90

# காண்பதெல்லாம்

# தொழிலாளி செய்தான்!



தொழிலாளர் வர்க்கத்தின் மேன்மை களையும், உழைப்பின் பெருமையையும், அன்றாட வாழ்வில் அவர்களின் அவல நிலைமைகளையும் தம் பாடல்கள் மூலம் படம் பிடித்துக் காட்டியவர் பாவேந்தர்.

செல்வத்தின் பிறப்பிடம் தொழில் தான். அதனால்,

''தொழிலே வாழிநீ!... தொழிலே வாழி நீ!

எழிலை உலகம் தழுவும் வண்ணம்
ஒழியா வளர்ச்சியில் உயரும் பல்வகைத்
தொழிலே வாழி நீ!''

என்று தொழிலைப் போற்றினார்.

புரட்சிக் கவிஞர் தொழிலாளியை உலகுக்கு அறிமுகப்படுத்தும் அழகே களிலெல்லாம், பொருள்களிலெல்லாம் தொழிலாளர்களின் கைவண்ணம் தன் தடயத்தைப் பதித்திருப்பதாகவே கண்டார்.

நாட்டுணர்வு மிக்க தொழிலாளர் களால்தான் நாடு முன்னேற முடியும். தொழிலாளர்களால்தான் உலகம் இயங்கு கிறது. அவன் இன்றி ஓர் அணுவும் அசையாது. அணுவைப் பிளந்து ஏழு கடலைப் புகட்டுகின்ற ஆற்றல் மிக்கவனும் தொழிலாளியே! சித்திரச் சோலைகள், நெல்விளையும் நன்னிலங்கள், தாமரை பூத்த தடாகங்கள், மாமிகு பாதைகள், ஆர்த்திடும் எந்திரக் கூட்டங்கள் அனைத்தும் ஊர்த்தொழிலாளர்கள் உழைத்த உழைப் பின் பயனே என்று கண்ட அவர்,

**பின்னலூர் மு. விவேகானந்தன்**

கவிஞன் மக்களின் தேவையை முன்னிட்டு தோன்றுகிறான். தனது கவிதைகள் மூலம் தன்னை உலகுக்கு அடையாளம் காட்டிக் கொள்கிறான். அடிமைத் தளையில் உழன்று கொண் டிருக்கும் மக்களின் அவலங்களை உணர்த்தி அவர்களுக்கு உணர்ச்சியூட்டி செயலுக்கு உந்துகிறான். உந்துவதோடு மட்டும் நில்லாமல் தானோ செயலிலும் இறங்கி விடுகின்றான். நாட்டின் இழிநிலை அவனைக் கவிஞனாகவும் கர்ம வீரனாக வும் ஆக்கிவிடுகிறது.

அயர்லாந்தில் போராடிய டிவேலரா, மாக்ஸ் வெய்னி, டக்ளஸ் ஹைட் போன்ற கவிஞர்களும், இத்தாலியில் போராடிய லியோ பார்டி, மாஜினி போன்று இப்படி பலரை நாம் உதாரணம் காட்ட லாம். அந்தவகையில்.

''நாட்டு மக்கள் நலமுற்று வாழவும்
நானி லத்தவர் மேனிலை எய்தவும்
பாட்டி லேதனி இன்பத்தை நாட்டவும்
பண்ணி லேகளி கூட்டவும் வேண்டி

கவிதைகளைப் பாடியவர் பாவேந்தர் பாரதிதாசனாவார்.

''தொழிற்புரட்சி யுகமாம்'' இவ் விருபதாம் நூற்றாண்டினைச் சமைத்த அலாதியானது, கம்பீரமானது. ''தொழி லாளி'' என்பவர் யார்? என்ற கேள்விக்குத் தம்பாடல் மூலம் பதில் தருகின்றார் பாவேந்தர்.

''சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கியநல் வாய்க்காலும் வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெலாம்
எவரின் தோள்கள்?...''

என்று இப்படி வினாக்களை அடுக்கியே தொழிலாளர்களின் மேன்மையை, பெருமைகளைப் பாருக்குப் பறைசாற்றினார்.

''அகிலும் தேக்கும் அழியாக் குன்றம்
அழகாய் முத்துக் குவியும் கடல்கள்
முகிலும் செந்நெலும் முழங்கு நன்செய்
முல்லைக் காடுமணக்கும் நாடு''

எனத்தாயகத்தைப் பாடிய பாவேந்தர் இந்நாட்டில், தான் காணும் காட்சி

''கீர்த்திகொள் போகப் பொருட்புவி யே! உன்
கீழிருக்கும் கடைக் கால் - எங்கள்
சீர்த்தொழி லாளர் உழைத்து உடம்பிற்
சிதைந்த நரம்புகள் தோல்''

என்று ஆவேசத்தோடும் பாடினார்.

இயற்கையின் ''அழகின் சிரிப்பில்'' இதயத்தைப் பறிகொடுத்த பாவலன் வானத்தையும், அழகு நிலவையும் பற்றிப் பாடும் போதுகூட உழைக்கும் மக்களின் நினைவை மறந்தாரில்லை.

''முழுமைநிலா அழகுநிலா,
முளைத்தது விண்மேலே-அது
பழமையிலே புது நினைவு
பாய்ந்தெழுந்தாற் போலே,''
என்று புதிய சிந்தனையைத் தெளித்து,

''மண்மீதில் உழைப்பா ரெல்லாம்
வறியராம்! உரிமை கேட்டால்
புண்மீதில் அம்பு பாய்ச்சும்
புலையர்செல் வராம் இதைத்தன்
கண்மீதில் பகலி லெல்லாம்
கண்டுகண் டந்திக் குப்பின்
விண்மீனாய் கொப்ப ளித்த
விரிவானம் பாராய் தம்பி!''
என்று ஆதங்கப்பட்டார்.

உழைக்கும் மக்களை இவ்வுலகம் வஞ்சிப்பதால் அவர்கள் நிரந்தர வறுமையில் கிடந்து உழல்கின்றனர். வறுமை தனி மனிதப் பிரச்சினை அல்ல; ஒரு நாட்டின் பிரச்சினை கூட அல்ல; உலகம் முழுவதும் பரவியுள்ள ஒரு சமூகப்பிரச்சினை. அதிலும் பாடுபட்டு, இந்தப் பாரை உயர்த்தும் பாட்டாளி, கால்வயிற்றுக் கூழுக்கும் அல்லற்படும் கொடுமையை, வறுமையின் கோரப்பிடியில் சிக்குண்டு நசியும் அவனது குடும்பநிலையை எண்ணி வேதனைப் பட்டார்.

''காண்பதெலாம் தொழிலாளி செய்தான்
அவன்
காணத்தகுந்தது வறுமையாம் - அவன்
பூணத் தகுந்ததும் பொறுமையாம்!'' என்று அனுதாபத்தோடு பாடினார்.

இந்த இழிநிலை மாறும் நாள் எந்நாளோ என்று வேதனைப் பட்டு, தானே ஒரு தொழிலாளியாக மாறி, ஏகாதிபத்தியத்தை எதிர்த்துக் குரல் கொடுக்கின்றார்.

காடுகளைந்து, நாடு செய்து, வீடு கண்டு பாடுபட்ட தோழர்கள் மலை பிளந்தோம், அலைகடல் மீது சென்றோம், ஆடைநெய்தோம், கூடை கலங்கள் முதல் கோபுரம் நற்சுதை வேலை செய்தவர்கள் நாங்கள், கந்தையணிந்தோம், இரு கைகளை விரித்து எங்கள் மெய்யினைப் போர்த்தினோம், சந்தையில் மாடாய் உழைத்து, தங்க இடம் இன்றித் தவித்தே சிந்தை, மெலிந்தோம்... எங்கள் உடலில் குருதி கொதிப்பேறுமுன் உங்கள் வசம் உள்ள சொத்தையும், நிலத்தையும், நிதியையும் எங்களுக்கு ஒப்படைத்து விடுங்கள். இல்லையேல்...?

''எலிகள் புசிக்க எலாம் கொடுத்தே சிங்க
ஏறுகள் ஏங்கிடுமோ? இனிப்
புலிகள் நரிக்குப் புசிப்பளித்தே பெரும்
புதரினில் தூங்கிடுமோ?
கிலியை விடுத்துக் கிளர்ந் தெழுவார் இனிக்
கெஞ்சும் உத் தேசமில்லை - சொந்த
வலிவுடையார் இன்ப வாழ்வுடையார் இந்த
வார்த்தைக்கு மோசமில்லை''

என்று ஆளும் வர்க்கத்தை எச்சரித்து, தொழிலாளர்களுக்கு நம்பிக்கையினையும் ஊட்டியுள்ளார்.

தொழிலாளர்கள்கடலையொத்தவர்கள், முதலாளிகளோ ஓடம் போன்றவர்கள். தொழிலாளி உரிமை கேட்டு வெகுண்டெழுந்தால், புரட்சி வெடித்தால்,சூறைக் காற்றினால் திசைதடுமாறி, மோதி முழ்கிப் போகும் தோணியைப் போல, முதலாளிகள் மூழ்கிப்போவார்கள் என்பதை, ''தளை அறு'' என்னும் பாடலில் பாவேந்தர் ஆணையிட்டுப் பாடுகிறார்.



சீரியநற் கொள்கையினை எடுத்துக் காட்டச்
சினிமாக்கள் நாடகங்கள் நடத்த வேண்டும்;
கோரிக்கை பணம் ஒன்றே என்று சொன்னால்
கொடுமைஇதை விடவேறே என்ன வேண்டும்!
— புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு புறம். வேலைப்பளு மறுபுறம். தொழிலாளர் போராட்டம், பொருளாதார நெருக்கடி, கதவடைப்பு இப்படி நில்லாது நடந்துகொண்டிருக்கின்ற இந்தப் போராட்டம் ஒவ்வொரு திக்கில், ஒவ்வொரு மாதிரி தோன்றி வளர்ந்து விஷம்போல் ஏறிக்கொண்டு போகிறது. இன்று நடப்பதென்ன? இனிவரப் போவதென்ன? என்று சராசரி மனிதனுடைய மூளையைக் கலக்கி ''பீதி'' வாழ்வையே வேரொடு அசைத்துப் பார்க்கிறது. இந்த பீதி'யைப் போக்கும் வழிமுறைகளைப் பாவேந்தர் எளியதம் பாடல் மூலம் கூறியுள்ளார்.

**கூடித்தொழில் செய்க:**

ஒற்றைக் கை தட்டினால் ஓசை பெருகிடுமா? தனிமரம் தோப்பாகுமா?... உணர்ந்து பாருங்கள் தோழர்களே! நாடிய ஓர் தொழில், நாட்டார் பலர் சேர்ந்தால், கேடில்லை நன்மை கிடைக்கும் என்று கூட்டுறவின் இன்றியமையாமையை வலியுறுத்தி,

''வாடித் தொழிலின்றி வறுமையாற்
சாவதெல்லாம் தோழர்களே!
கூடித் தொழில் செய்யாக் குற்றத்தால்
கூடித் தொழில் செய்யாக் குற்றத்தால்
இன்றுவரை தோழர்களே!
மூடிய தொழிற்சாலை முக்கோடி!
கூடைமுறம் கட்டுநரும் கூடித் தொழில்
செய்யின் தோழர்களே!
தேடிவரும் லாபம் சிறப்புவரும்!''

என்று ஆலைத் தொழிலாளர்களுக்கு மட்டுமின்றி, கிராமப்புறங்களிலே சிறு கைத் தொழில்கள் செய்து பிழைக்கும் கிராமத் தொழிலாளர்களுக்கும் நாட்டின் மேம்பாட்டைக் கூட்டுறவின் மூலமே உயர்த்த முடியும் என்று உறுதியாகக் கூறுகின்றார்.

**அயர்வினை எரிப்போம்:**

''எல்லோருக்கும் எல்லாம் என்றிருப்ப தான
இடம்நோக்கி நடக்கின்ற திந்த வையம்''

அதனால், ''தொல்லுலக மக்கள் எலாம் ஒன்றே'' என்ற புரட்சிக்கவி, உழைக்கும் தொழிலாளர்கள் நலம்பெற வேண்டுமானால், அதற்குப் புரட்சி ஒன்றே சரியான வழி என்று தேர்ந்து துணிந்து ''உலகப்பன்'' பாட்டின் மூலம்,

''ஓடப்பராயிருக்கும் ஏழை யப்பர்
உதையப்ப ராகி விட்டால் ஓர்நொ டிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப் பாநீ!''

என்று அறைகூவல் விடுத்தார்.

**உலகம் உழைப்பவர்க்கே:**

மறையக் கண்டேன் கதிர்தான்; போய் மாயக் கண்டேன் சோர்வே; நிறையக் கண்டேன் விண்மீன்; என் நினைவிற் கண்டேன் புதுமை; என்ற புதுவைக் கவிஞர், நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைக்கும் வர்க்கத்தின் ஒவ்வொரு துளி வியர்வையிலும் இவ்வுலகம் உழைப்பவர்க்கு உரியதாகக் காணுகின்றார்.

''உடலைக் கசக்கி உதிர்த்த வியர்வையின்
ஒவ்வொரு துளியிலும் கண்டேன்
இவ்வுல குழைப்பவர்க்குரிய தென்பதையே!''

உழைப்புத் தோள்களின் மேம்பாடு உடைய நாடே தொழிற்சாலைகள் மிகுந்த நாடாக மிளிரும் என்பது பாவேந்தரின் அசைக்க முடியாத கருத்தாகும்.

''தொழில் மலிந்த நாடு- உழைப்புத்
தோள்களின் மேம்பாடு'' என்கிறார்.

பாவேந்தரின் கனவுகள் நனவாகத் தொழில்துறையில் மேலும் முன்னேறி தன்னிறைவு எய்த, நமது தமிழக அரசு நாளும் பாடுபட்டு வருகிறது; அதன் முயற்சி வெற்றி பெறுவது உறுதி.



# தமிழகத்தில் தொழில் கூட்டுறவும் வேலைவாய்ப்பும்

**தொ**ழில் கூட்டுறவுச் சங்கங்கள், சமுதாயத்தில் நலிந்த பகுதியினரது பொருளாதார நிலையை உயர்த்தவும், கிராமியத் தொழிலாளர்கள், உழைப்பாளர்கள் ஆகியோரது பொருளாதார நிலையை உயர்த்தவும், தேயிலை, மரவள்ளிக் கிழங்கு பயிரிடுவோருக்கு உதவி செய்து அவர்கள் தரம் மிக்க பொருள்கள் மற்றும் மூலப் பொருள்கள் உற்பத்தி செய்யவும், சிறு தொழில் செய்வோருக்கு உதவி செய்யவும் ஏற்படுத்தப்பட்ட அமைப்புகளாகும்.

இயற்கையாகவே சிறு தொழிற் கூடங்கள் போதிய மூலதனம் இல்லாமல் உள்ளன. மூலப் பொருட்களைப் பெரிய அளவில் கொள்முதல் செய்ய இயலாமை, முடிவடைந்த பொருள்களை நியாய விலைக்கு விற்க இயலாமை, போதிய மூலதனம் பெற இயலாமை ஆகிய குறைபாடுகளை நீக்கத் தொழில் கூட்டுறவு சிறந்த வழியாகும்.

குறிப்பாகச் சொல்லப் போனால், தொழில் கூட்டுறவின் நோக்கங்கள் தொழிலாளர், கைவினைஞர் மற்றும் தொழில் நுன்னியர் ஆகியோருக்கு வேலை வாய்ப்பளித்தல், சிறிய உற்பத்தியாளர், தொழிலதிபர் விவசாயி ஆகியோருக்கு நிதி வசதி செய்தல், தொழில் நுட்பம், விற்பனை மற்றும் நிர்வாகத்தில் உதவி செய்தல்; நுகர்வோருக்குப் பயன்படும் வகையில் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுதல் ஆகியவையாகும்.

தொழில் கூட்டுறவினால் பயனடைந்த சில முக்கிய தொழில்களாவன:-

### தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள்

நீலகிரி மாவட்டத்தில் இதுவரை 15 தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு சிறு தேயிலை உற்பத்தியாளர்களுக்குச் சேவை செய்து வருகின்றன. இந்த 15 தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற் சங்கங்களுக்குச் சேவை செய்ய நீலகிரி மாவட்டச் சிறு தேயிலை வளர்ப்போர் சேவை தொழிற் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட் என்கிற தொழிற் கூட்டுறவு நிறுவனமும் அமைக்கப்பட்டுள்ளது.

### மரவள்ளிக்கிழங்கு மாவு

சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் மரவள்ளிக்கிழங்கு பெருமளவில் சாகுபடி செய்யப்படுகிறது. சிறு பதனிடும் தொழிற்சாலைகள் தங்கள் உற்பத்திப் பொருட்களுக்குச் சந்தையில் சரியான விலை பெறுவதில்லை. இந்த மரவள்ளிக் கிழங்குச் சாகுபடியாளர்களுக்கும். ஸ்டார்ச் உற்பத்தி செய்யும் சிறு தொழிற்சாலை அதிபர்களுக்கும் தங்கள் பொருட்கள் சந்தையில் சரியான விலை பெற உதவி செய்யும் நோக்குடன் இரண்டு சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் சேலத்திலும், தர்மபுரியிலும் முறையே 'சேகோசெர்வ்' மற்றும் 'ஸ்டார்ச்செர்வ்' என்கிற பெயரில் நிறுவப்பட்டு 1982 முதல் செயல்பட்டு வருகின்றன.

### தீப்பெட்டித் தொழில்

சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள், பெரிய தீப்பெட்டி உற்பத்தியாளர்களால் பெரிதும் சுரண்டப்பட்டார்கள். சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்களின் பண்டங்களுக்குச் சரியான விலை கொடுக்கப்படாமல் இருந்து வந்தது. இச்சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்களின் பண்டங்கள் மத்திய நாட்டுச் சந்தையில் சரியான விலைக்கு விற்றுத்தரத் தீப்பெட்டிச்சேவை தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் இச்சங்கங்கள் தங்கள் உறுப்பினர்களுக்குத் தரமான மூலப் பொருட்களை நியாயமான விலைக்குக் கொள்முதல் செய்து தருகின்றன. மூலப் பொருட்களைக் கொள்முதல் செய்வதுடன் பொட்டாசியம் குளோரேட், குச்சிகள், அட்டைகள் இவற்றையும் இச்சேவைச் சங்கங்கள் உற்பத்தி செய்ய ஆரம்பித்துள்ளன. லேபில்கள் அச்சிடுதல் மற்றும் அட்டை போர்டுகள் தயாரித்தல், அச்சிடுதல் ஆகியவற்றையும் இச்சேவை சங்கங்கள் மேற்கொண்டுள்ளன.

அனைத்து தீப்பெட்டிச் சங்கங்கள் நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்தவும் தேவைகளைச் சீரமைக்கவும் மாநில அளவில் செயல்படும் தமிழ்நாடு தீப்பெட்டி சிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் இணையம் என்கிற அமைப்பும் நிறுவப்பட்டுள்ளது.

### கயிறு

தென்னை நார் உற்பத்தியில் அகில இந்திய அளவில் கேரளம் முதலிடமும், தமிழ்நாடு இரண்டாவது இடத்தையும் வகிக்கின்றன. பழுப்பு நார் உற்பத்தியில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. தென்னை மட்டை சரியானபடி பயன்படுத்தாவிட்டால் வீணாகும். இப்பொருளைச் செல்வமாக்கவும், வேலையற்றோருக்கு வேலை வாய்ப்பளிக்கவும் தமிழ்நாடு அரசும், கயிறு வாரியமும் முயன்று வருகின்றன.

தற்பொழுது தமிழ்நாட்டில் 400 தனியார் நிறுவனங்களும் 74 கயிறு கூட்டுறவுச் சங்கங்களும், தென்னை நார்க் கயிறுத் தொழிலில் ஈடுபட்டுள்ளன. கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், தென்னை நார் எடுத்தல், கயிறு திரித்தல், சுருள் நார் உற்பத்தி, கயிற்றுப் பாய் மற்றும் மிதியடி செய்தல் மற்றும் ரப்பர் கலந்த கயிற்றுப் பொருட்கள் உற்பத்தி செய்தல் ஆகியவற்றில் சிறந்த கவனம் செலுத்தி வருகின்றன.

### கைவினைப் பொருட்கள்

தமிழ்நாடு கைவினைப் பொருட்களுக்குப் பெயர் பெற்றது. இக்கைவினைத்

திறன் தஞ்சை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் வசிக்கும் சில குடும்பங்களில் மட்டும் காணப்படுகிறது. இக்கைவினைத் திறனைப் பாதுகாக்கவும் இக்கைவினைஞர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தவும் கைவினைத் தொழிற் கூட்டுறவுச்சங்கங்கள் ஏற் படுத்தப்பட்டுள்ளன.

'கைவினை' என்ற பதம் இசைக் கருவிகள் உற்பத்தி, காகிதம் மற்றும் களிமண் பொம்மைகள் செய்தல், கற் சிலைகள் வடித்தல், பஞ்சலோகச் சிலைகள் செய்தல், வெண்கலம் மற்றும் உலோகங்களால் செய்யப்படும் பொருட்கள் மரச்சிற்பங்கள் செய்தல், அலங்காரத் தட்டுக்கள் செய்தல், மற்றும் செயற்கை வைரம் தீட்டுதல் ஆகியவை அடங்கும்.

### தையல் தொழில்

கிராமப்புறங்களில் வசிக்கும் பெண்டிர்க்கும், காவல்துறை அலுவலர்களின் பெண்டிர்க்கும் கூடுதல் வருமானம் தரும் வகையில் தையல் தொழில் கூட்டுறவுகள் அமைக்கப்பட்டுள்ளன. காவல்துறையின் காவலர் பணியாளர்களுக்குத் தேவைப்படும் சீருடைகள் தைப்பதற்கு இச்சங்கங்களுக்கு ஆர்டர்கள் ஆண்டு தோறும் கிடைக்கின்றன. மேலும் நகராட்சி, துறைமுகப் பணியாளர்கள் மற்றும் தீயணைப்புப் பிரிவினர்களுக்குச் சீருடை தைப்பதற்கான ஆர்டர்களும் இச் சங்கங்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப் படுகின்றன.

### பொறியியல் தொழில்

கிராமப்புறங்களில் வசிக்கும் திறன் மிக்க தொழிலாளர்கள், ஐ.டி.ஐ. கல்வித் தகுதி பெற்றோர், கருமான் ஆகியோருக்கு வேலை வாய்ப்பளிக்கும் நோக்குடன், பொறியியல் தொழிற் கூட்டுறவுகள் அமைக்கப்பட்டுள்ளன. அலுமினிய அண்டாக்கள் செய்தல், பூட்டுகள் செய் தல், நெசவுத்தொழிலுக்குத் தேவையான பாபின்கள் செய்தல், எஃகு மேஜை, நாற்காலிகள் பீரோக்கள் செய்தல் ஆகியவை இத் தொழிலில் அடங்கும்.

### தோல் பதனிடும் தொழில்

பதனிடப்பட்ட தோலுக்கு மேல் நாடுகளில் நல்ல கிராக்கி இருக்கிறது. தோல் பதனிடும் சிறு தொழில் நிறு வனங்களுக்கு உதவும் நோக்குடன் தோல் பதனிடும் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் வாணியம்பாடி, ராணிப்பேட்டை, பேரணம்பேட்டை மற்றும் திண்டுக்கல்லில் நிறுவப்பட்டுள்ளன.

### நிலக்கரி, கரி மற்றும் சிமெண்ட் விநியோகம்

இரயில் வாகனங்கள் தட்டுப் பாட்டினால் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வரக்கூடிய நிலக்கரியின் அளவு போது மான அளவாக இல்லை. ஆகவே சிறு தொழில் நிறுவனங்கள் வேறு பல வகைகளில் அதிக விலை கொடுத்து நிலக்கரியை வாங்குகின்றன. இச் சிறு தொழில் நிறுவனங்களுக்குத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் நியாயமான விலையில் நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்தே வாகனங்கள் மூலம் அனுப்பி வைக்கின்றன. இச்சங்கங்கள் நிலக்கரி யார்டுகள் மற்றும் எடை பாலம் ஆகிய வசதிகளைக் கொண்டவை.


**தமிழரசு**

**சந்தா விவரம்**

**தமிழ்**
ஓராண்டு = ரூ.24
அரையாண்டு = ரூ.12

**ஆங்கிலம்**
ஓராண்டு = ரூ. 12
(அரையாண்டு சந்தா கிடையாது)

**விவரங்களுக்கு**
உதவி இயக்குநர்
(விற்பனை மற்றும் விநியோகம்)
தமிழரசு, அரசினர் தோட்டம், சென்னை-600 002.


### கூட்டுறவு தொழிற்பேட்டைகள்

சிறு மற்றும் மிகச் சிறு தொழில் நிறுவனங்களும் உதவி செய்யும் நோக்குடன் கூட்டுறவுத் தொழிற்பேட்டைகள் நிறுவப் பட்டுள்ளன. தொழில் கூடங்கள் மற்றும் தொழில் மனைகள் ஒதுக்கீடு செய்தல் மின்விசை வழங்குதல், தண்ணீர் வழங்குதல், மற்றும் சிறு தொழில் கூடங்களுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுத்தல் ஆகியவை இத்தொழிற்பேட்டைகளின் நோக்கமாகும். இந்த ஒதுக்கீட்டிற்கான இத்தொழிற்பேட்டைகள் மிகவும் குறைவான வட்டி அதாவது 3% முதல் 6½% வரை வசூலிக்கின்றன. சென்னை, பொள்ளாச்சி, சிவகாசி, சேலம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் கூட்டுறவுத் தொழிற்பேட்டைகள் செயல்படுகின்றன.

### கூலி ஒப்பந்தச் சங்கங்கள்

தொழில்களில் ஒப்பந்தம் என்பது சட்டப்படி கடைப்பிடிக்க வேண்டிய ஒன்றாகும், தமிழ்நாட்டில் இது சீரிய முறையில் தொழிற் கூட்டுறவுச் சங்கங் களால் அமுல்படுத்தப்படுகின்றன. இச்சங்கங்கள் மூலம் தற்காலிகப் பாட்டாளி கள் நிரந்தரமாக வேலை பெறவும், முன் சம்பளம் பெறவும் ஏதுவாகிறது. இடைத் தரகர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களின் சுரண்டல் தவிர்க்கப்படுகிறது. இவ் வகையில் முதன் முதலில் பதிவு செய்யப் பட்ட சங்கம், -எம்.ஆர்.எஸ். கூலி ஒப்பந்த சங்கமாகும். இது 1983-இல் பதிவு செய்யப்பட்டது. நியாயமான கூலி, மொத்த இன்சியூரன்ஸ் பிராவிடெண்ட் நிதி, மருத்துவக்கட்டணம் வழங்குதல், குறைந்த விலையில் உணவுப் பண்டங்கள் வழங்குதல் இன்னும் பலவும் இச்சங்க செயல்பாடுகளில் அடங்கும்.

### தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி

தொழிற் கூட்டுறவுச்சங்கங்கள் 1956-இல் ஏற்படுத்தப்பட்ட பின்னர் இச்சங்கங்களுக்கு நிதியுதவி வழங்குதல் மிகக்கடினமாகியது. ஏற்கனவே செயல் பட்டுக்கொண்டிருந்த கூட்டுறவு வங்கிகள் விவசாயம் மற்றும் நுகர்வோர் கடன் ஆகியவற்றில் மட்டும் கவனம் செலுத்தி வந்தன. மத்திய அரசின் செயற்குழு ஒன்றின் பரிந்துரையின் பேரில் தொழிற் கூட்டுறவுகளுக்கென பிரத்தியேகக்கடனாக ஒரு கூட்டுறவு வங்கி ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமாயிற்று. ஆக்வே, 1961-ஆம் ஆண்டில் இவ்வங்கி சென்னையைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கத் தொடங்கியது. அநேகமாக எல்லாத் தொழிற் கூட்டுறவுச் சங்கமும் இதில் உறுப்பினர்களாகி இவ்வங்கிகளின் மூலம் நிதிவசதி பெற்று வருகின்றன.

தமிழ்நாட்டில் மொத்தம் 397 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் மொத்த உற்பத்தி ரூ.10,871.90 இலட்சமாகும். இச் சங்கங்களில் சுமார் 95,000 பேர் பணிபுரிகின்றனர். இச்சங்கங்களுக்குத் தமிழக அரசு பெருமளவில் கூட்டுறவு வங்கிகளின் மூலமும் மூலதனத்தில் பங்கு கொள்வது மூலமும் நிதியுதவி செய்து வருகிறது.

**தொழில் ஆணையர் மற்றும்**
**தொழில் வணிக இயக்குநர்**
**சென்னை.**




**த**மிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, திருச்சி மாவட்டம் திருவரங்கத்தில் (ஸ்ரீரங்கம்) அரிய பண்டைய ஓவியங்களைக் கண்டு பிடித்துள்ளது. இவ்வோவியங்கள் இன்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முற்பட்டவை ஆகும்.

திருவரங்கத்திலுள்ள திருவரங்க நாதரின் கோயில் ஏழு திருச்சுற்று களைக் கொண்டது. அத்தகைய திருச்சுற்று உத்தர வீதி என்று அழைக்கப்படுகிறது.

இவ்வீதியில் உத்தம நம்பி திரு மாளிகை புத்தங்கோட்டகம் சுவாமி திருமாளிகை, ஸ்ரீரங்க ஜீயர் மடம். அகோபில மடம், கோயில் கந்தாடை அண்ணன் சுவாமி திருமாளிகை, மணவாள மாமுனிகள் சன்னதி, வியாசராசர் மடம் ஆகியவை அமைந்துள்ளன. அவற்றில் வியாச ராசர் மடம் உத்தரவீதியின் கிழக்குப் பக்கம் உள்ளது. இம்மடத்தில் குழலூதும் கண்ணன் (வேணு கோபாலன்) கோயில் உள்ளது. அக்கோயிலுக்கு முன்பாக நாலு கால் மண்டபத்தின் விதானத்தில் நாயக்கர் கால ஓவியங்கள் காணப் படுகின்றன. இத்துறையைச் சார்ந்த திருச்சி பதிவு அலுவலர் திரு. சி. ஸ்ரீதரன் கண்டுபிடித்து, தொல் பொருள் ஆய்வுத்துறை இயக்குநர், நடன. காசிநாதன் அவர்களுக்குத் தெரிவித்தார். இவ்வோவியங்களைக் கண்டுபிடிப்பதற்கு, திருவரங்கத்தின் பண்டைய நகர அமைப்பு பற்றி ஆய்வு செய்யும் திரு.ஸ்ரீவத்சன் உதவியுள்ளார்.

வைணவ மதத்தில் சுயம்புத் தலங் களாக எட்டுத் தலங்கள் போற்றப் படுகின்றன. அவை 'சுவயம்வ்யக்த சேத்திரங்கள்' எனப்படும்.

அவையாவன:

*1) ஸ்ரீமுஷ்ணம், 2) ஸ்ரீரங்கம் 3) திருப்பதி 4) சாலிகிராமம் 5) னநமிசாரண்யம் 6) தோதாத்தி 7) புஷ்கரம் 8) பத்ரி (நரநாராயண ஆச்ரமம்)*

மேற்காணும் தலங்களில் எழுந் தருளியிருக்கும் இறைவனின் திருக் கோலங்கள் மேற்காணும் மண்டபத் தின் விதானத்தில் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு தலத்தின் பெயரும் அவ்வோவியத் தின் மேற்பகுதியில் தெலுங்கில் எழுதப்பட்டுள்ளது. 'ஸ்ரீமுஷ்ணம்' ஆதிவராக சந்நதி, ரங்கனாதசுவாமி, நரநாராயண ஆச்ரமம் என சில தலங்களின் பெயர்களைப் படிக்க முடிகிறது.

ஓவியத்தின் கீழ்ப்பகுதியில் இம் மடத்தில் எழுந்தருளியுள்ள கண்ணன் வலப்புறத்தில் மாத்வ பெரியார்களும், இடப்புறத்தில் நாயக்க மன்னரும் மற்றும் அமைச்சரும் கண்ணனை வழிபடும் நிலையில் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளனர். இவ்வோவியங்களுக்கு மேற்பக்கத் தில் திருமாலின் 24 வடிவங்களும் வரிசையாகக் காட்டப்பட்டுள்ளன. இவ்வோவியங்களின் மேற்பகுதியில் அவ்வுருவங்களின் பெயர்களும் முறையே அவிருத்த, புருஷோத்தம அதோக்ரஜ, நரசிம்ம, அச்சுத, ஜனார்த்தன, உபேந்திர, ஹரி, ஸ்ரீகிருஷ்ண என மூர்த்திகளின் பெயர்கள் எழுதப்பட்டுள்ளன. இம்மண்டபத்தின் விளிம்புகளில் மத்வர் வழியினரின் உருவங்களும் பெயர்களும் காணப்படுகின்றன.

இவ்வோவியங்கள் காணப்பெறும் வியாசராசர் மடம் ஸ்ரீவியாசராசர் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. இவர் கி.பி.15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இம்மடத்தைச் சேர்ந்த மூலபிருந்தாவனம் திருமஞ்சன காவேரி என்னும் ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. இங்கு ஸ்ரீலட்சுமிநாத தீர்த்தர் ஸ்ரீலட்சுமிபதி தீர்த்தர் ஆகியோர் அடக்கமாகி உள்ளனர். அவர்களது அடக்க இடங்கள் பொது மக்களால் இன்றும் வழிபட்டு வரு கின்றன. மேற்காணும் இருவரும் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள்.

ஸ்ரீரங்கம் திருவரங்கநாதர் கோயிலில் இதற்கு முன்பாகப் போசலர் கால ஓவியங்களும், நாயக்கர் கால ஓவியங்களும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. தற்பொழுது விசய ராசர் மடத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ள ஓவியம் புதிய கண்டு பிடிப்பு ஆகும்.





மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் 23-வது தேசிய நூலக வார விழாவினைத் தொடங்கி வைத்து புத்தகம் மற்றும் ஓவியக் கண்காட்சியைப் பார்வையிட்டார். (14.11.90)

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள், திருவல்லிக்கேணி தொகுதியில் உள்ள ஆதரவற்ற ஏழைத் தாய்மார்களுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார் (15.11.90)

சென்னை மாநகராட்சி, ரூ.180 இலட்சம் செலவில் துப்புரவுப் பணிக்காகப் புதிதாக வாங்கியுள்ள 42 வாகனங்களை மாண்புமிகு ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் இயக்கி வைத்தார். (10.11.90)






# படமும் செய்தியும்



சென்னையில் பெருமழையில் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு நிவாரண உதவியாக, குடிசை இழந்தவர்களுக்கு ரூ.500 வீதமும், மழை நீர் தேங்கியதால் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ.250 வீதமும் மொத்தம் இரண்டு கோடிக்கும் அதிகமாக உதவி அளிக்கும் திட்டத்தை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்ததன்படி, மயிலை-திருவல்லிக்கேணி வட்டாட்சியர் அலுவலகத்தில் மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் நிவாரண உதவிகளை வழங்கினார். *(18.11.90)*

எழுதுபொருள் அச்சுத்துறை தொழிலாளர்கள் கோரிக்கைகள் அடிப்படையிலான பரிந்துரைகள் அறிக்கையை மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு அவர்களிடம் திரு. கே. மலைச்சாமி, இ.ஆ.ப அவர்கள் சமர்ப்பித்தார். செய்தி மற்றும் சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி ஜெயந்தி, இ.ஆ.ப. அவர்கள் உடன் உள்ளார். *(14.11.90)*



திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில்

# வளர்ச்சிப்பணிகள்

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில், பல்வேறு துறைகள் பாங்காய் வளர்ந்து வருகின்றன. மருத்துவத்துறையைப்பொருத்தவரை, நாங்குனேரி அரசு மருத்துவமனையில் தொழுநோய் சிகிச்சைக்கு 20 படுக்கைகள் வசதி கொண்ட கட்டடம் ரூ.10.92 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.தொழு நோயாளிகளுக்கென தனியாக உள் நோயாளிகள் சிகிச்சைப் பிரிவு அமைக்கப் பட்டுள்ளது. இதேபோன்று இம் மாவட்டத்தில் சங்கரன்கோவில், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகிய இடங்களில் மட்டுமே உள்ளது. எனவே, இம் மாவட்டத்தின் தென்பகுதி வட்டாரங்கள் ஆகிய இராதாபுரம், நாங்குனேரி மற்றும் கடலோரப் பகுதி வாழ் மக்கள் தொழுநோயில் உள்நோய்ச் சிகிச்சை பெற்றிட, தற்போது புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் இப் புதிய கட்டடம் மிகுந்த அளவில் பொதுமக்களுக்குப் பயன்தரும்.

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுக் கட்டடம் ரூ.40 இலட்சம் செலவில் கட்ட அரசு அனுமதி அளித்துள்ளது. தற்போது நோயாளிகள் மதுரை, சென்னை போன்ற தொலை இடங்களுக்குச் சிகிச்சைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றார்கள். இதனைத் தவிர்த்து அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் பொருட்டு இப்பிரிவு அரசால் ஏற்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தினால் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், சிதம்பரனார் மற்றும் காமராஜர் போன்ற தென் மாவட்டங்களிலுள்ள நலிவுற்ற மக்கள் பெரிதும் பயன்பெற முடியும். ஆண்டுதோறும் சுமார் 3,000 நோயாளிகள் பயன் பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது

இம்மாவட்டத்தில் கோவிலூத்து, கூடங்குளம், தெற்குகள்ளிகுளம், அரியப்பபுரம், மருதமுத்தூர், தலைவன் கோட்டை, சங்கனபுரம், சுந்தர பாண்டியபுரம், கரிசல்பட்டி, மூலக்கரைப்பட்டி ஆகிய 11 கிராமங்களில் ஆரம்பச் சுகாதார நிலையம் மற்றும் மருத்துவர் குடியிருப்புகள் ரூ.74.25 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையம் மற்றும் மருத்துவர் குடியிருப்புகளுக்கு ரூ.6.74 இலட்சம் செலவிடப்படவுள்ளது. மேலும்திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 35 படுக்கைகள் கொண்ட கூடுதல் மகப்பேறு மருத்துவச்சிகிச்சைப் பிரிவுக் கட்டடம் ரூ.25 இலட்சம் செலவில் கட்டி முடிக்கபட்டதன் மூலம் இட நெருக்கடி தீர்ந்து தாய்மார்களுக்குச்சிறந்த சிகிச்சையினை அளிக்க இயலும்.

**★ திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், நாங்குனேரி அரசு மருத்துவமனையில் தொழுநோய்ச் சிகிச்சைக்கு 20 படுக்கைகள் வசதி கொண்ட கட்டடம் ரூ.10.92 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது.**

**★ வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், காவலர்களுக்கு 140 இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன.**

**★ சங்கரன்கோவிலில் மகளிருக்காக, அன்னை அஞ்சுகம் மகளிர் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ரூ.10 இலட்சம் முதலீட்டில் தொடங்கப்படவுள்ளது.**

தென்காசி மருத்துவமனையில் அறுவை அரங்கம் 6 படுக்கைகளுடன் கூடிய உள்நோயாளிகள் பிரிவுக் கட்டடம் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் மூலம் அனுமதி வழங்கப்பட்டு ரூ.8.80 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தாய்மார்களும் மகப்பேற்றிற்குப் பின் குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்வதற்காகத் தனியாகப் படுக்கை வசதி மற்றும் குளிரூட்டப்பட்ட அறுவை அரங்க வசதி ஏற்படுத்தப் பட்டுள்ளது. இதனால் பேறு காலத்திற்குப் பின் குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் தாய்மார்களின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

### காவலர் குடியிருப்பு

பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் திம்மராஜபுரம் கிராமத்தில், காவலர்களுக்கென வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 140 இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன. தகுதியுள்ள காவலர்களுக்கு அரசு மூலம் கடன் வழங்கப்பட்டு இந்த இல்லங்கள் ஒதுக்கப்படும். இந்தக் கடன் தொகை, காவலர்களின் ஊதியத்திலிருந்து

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப்பணிகள்

★ தமிழ்நாட்டில் அனல்மின் நிலையங்களுக்கு நிலக்கரி ஏற்றிவர அரசுக்குச் சொந்தமான பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் ரூ.100 கோடி செலவில் 2 கப்பல்கள் வாங்கத் திட்டமிட்டுள்ளது என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. (18.9.90)

★ செங்கை-அண்ணா மாவட்டம் திருமழிசை பேரூராட்சியில் ரூ.57 இலட்சம் செலவிலான புதிய குடிநீர்த் திட்டத்திற்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டினார். (18.9.90)

★ தமிழ்நாட்டில் பள்ளிகளில் 8-ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவியருக்கு இலவச பஸ் பாஸ் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது, நகரப் பேருந்துகள் இயங்காத இடங்களில் சிறப்பு அனுமதியின் பேரில் புறநகர்ப் பகுதிகளிலிருந்து வரும் மாணவ மாணவியர், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் தவிர மற்றெல்லாப் பேருந்துகளிலும் பயணம் செய்ய பயண அட்டைகள் வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. (20.9.90)

★ தஞ்சை மாவட்டத்தில் கிராமப்புறக் கடன் நிவாரணத் திட்டத்தின்கீழ் தமிழக அரசு சுமார் ரூ.48.33 கோடி கடன் தள்ளுபடி செய்துள்ளது. இதில் சுமார் ரூ.25 கோடி இம்மாவட்டத்திலுள்ள கூட்டுறவு வங்கிகள் மூலம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதனை ஈடுசெய்யும் வகையில் தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி ஆகிய இரு கூட்டுறவு வங்கிகளுக்கு முதல் தவணையாக ரூ.10 கோடி வழங்கப்பட்டுள்ளது என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. (25.9.90)

★ கோவை மதுக்கரை ஊராட்சி ஒன்றியம் நாச்சி பாளையத்தில் மரம் நடும் விழாவில் மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 2,200 மரக்கன்றுகள் நடுவதைத் தொடங்கி வைத்தார். (23.9.90)

★ தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்குத் தேர்வு நிலை—சிறப்பு நிலை ஊதியம் ரூ.8 கோடி செலவில் வழங்கிட முடிவு செய்யப்பட்டுள்ளதாக மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்தார். (29.9.90)

★ தமிழகத்தில் 9 மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் பயன்பெறும் வகையில் 8 ஆயிரம் குழாய்க் கிணறுகள் வெட்ட ரூ.4 கோடி செலவிடப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. (29.9.90)

★ செங்கை அண்ணா மாவட்டத்திலுள்ள எர்ணாவூரில் டாமின் கிரானைட் ஓடுகள் தயாரிக்கும் தொழிற்சாலைக்கும், டாமின் கிரானைட்ஸ் தொழிற்சாலையின் விரிவாக்கத்திற்கும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டினார். (1.10.90)

★ ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகச் சார்பில் சிறு தொழில்கள் தொடங்கவும் மோட்டார் வாகனங்கள் வாங்கவும் ரூ.25 கோடி கடன் உதவிகள் வழங்கப்படும் என்று மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. க. சுந்தரம் அவர்கள் அறிவித்தார். (8.10.90)

---

தவணை முறையில் பிடித்தம் செய்யப்படும். குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு ஒவ்வொரு இல்லமும் ரூ.75,500 வீதம் 126 இல்லங்களும், நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு ஒவ்வொரு இல்லமும் ரூ.1.18 இலட்சம் செலவில் 14 இல்லங்களும் கட்டப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக மொத்தம் ரூ.83.52 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

### சாலை மேம்பாடு

ஸ்ரீபுரம்-தச்சநல்லூர் சாலையினை (வழி சிவசக்தி திரையரங்கு) ரூ.20 இலட்சம் செலவில் மேம்பாடு செய்திட அரசு அனுமதி வழங்கியுள்ளது. திருநெல்வேலி சந்திப்பிற்கு இப்பகுதியிலிருந்து வரும் அனைத்து வகையான போக்குவரத்திற்கும் தச்சநல்லூர் ரயில் பாதையைக் கடந்து திருநெல்வேலி நகர்மைய பேருந்து நிலையத்தினைச் சுற்றிச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்பட்டால் பயணதூரம் 2 கி.மீ. குறைக்கப்படும். மேலும் எரிபொருள் சேமிப்பு மற்றும் பயண நேரமும் குறைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

### நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம்

சங்கரன்கோவிலில் மகளிருக்காக அன்னை அஞ்சுகம் மகளிர் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கம் ரூ.10 இலட்சம் முதலீட்டில் தொடங்கப்படவுள்ளது. சொந்தமாகத் தறியில்லாத குறைந்த வருமானம் உள்ள குடும்பத்தைச் சார்ந்த 100 பெண்களுக்காக இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

6 மாதக்கால ஊதியத்துடன் கூடிய பயிற்சிக்குப்பின் இதன் உறுப்பினர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ.500-க்கு குறையாமல் வருமானம் பெறத்தகுதி பெறுகின்றனர். சங்கரன் கோவில் நகராட்சிக்குத் சொந்தமான 50 சென்ட் நிலம் இதற்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. தமிழ் நாடு மகளிர் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் முதல் கட்டமாக மகளிர் உறுப்பினர்களின் பயிற்சிக்கு ரூ.7,500, நிலம் வாங்கிட ரூ.50,000 நிதி உதவி பெற உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**எஸ்.எம். பஷீர்**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்.**



# அனைத்திந்தியக் கூட்டுறவு வார நிறைவு விழா

தமிழ்நாடு முழுவதும் 37-வது இந்தியக் கூட்டுறவு வார விழா நவம்பர் 14-ஆம் தேதி முதல் 20-ஆம் தேதி வரை சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. 21.11.90 அன்று கூட்டுறவு வார விழாவின் நிறைவு நாள் நிகழ்ச்சி சென்னை வள்ளுவர் கோட்டத்தில் மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் தலைமையில் கொண் டாடப்பட்டது.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் விழாவில் பங்கேற்று, சிறந்த கூட்டுறவு நிறுவனங்களுக்குப் பாராட்டுக் கேடயங்கள், பரிசுகள் மற்றும் உடல் ஊனமுற்றோருக்கு உதவிப் பொருட்கள் வழங்கி, நிறைவு விழாப் பேருரையாற்றினார்.

விழாவில் மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. எஸ். துரைமுருகன், அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்.

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் தம் தலைமையுரையில்,

''மாண்புமிகு முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள், முன்பு தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த போதுதான் கூட்டுறவு சங்கத் தேர்தல் நடத்தப்பட்டது. அதன்பிறகு பதி னைந்தாண்டுக் காலம், இருந்த எந்த ஒரு அரசாலும் அத்தேர்தல் நடத்தப் பட முடியாத நிலையிருந்தது. இந்த முறை, தலைவர் கலைஞர் அவர்கள் மீண்டும் முதலமைச்சரான பிறகு தான் கூட்டுறவு அமைப்புகளுக்கெல் லாம் மக்கள் பிரதிநிதிகள் முறைப் படி தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்; இந்த மகத்தான ஜனநாயக அமைப் பினை உருவாக்கித் தந்த பெருமை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர் களையே சேரும்.'' என்று குறிப் பிட்டார்.

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசியதாவது:

''கூட்டுறவுத் துறை என்பது ஒரு உன்னதமான துறையாகும். இந்தத் துறை ஒரு காலத்தில் சில குட்டி ராஜாக்களின் கையிலேதான் இருந்தது. அத்தகைய ஜமீன் ஆதிக்கத்திலிருந்து, கூட்டுறவுத் துறைத் தலைவர் பதவிக் குச் சாமான்யர்களும் வரலாம் என் பதை நிரூபித்த சிறப்புக்குரியவர் நம்முடைய தலைவர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களே யாவார். கூட்டுறவுத் துறை வளர வும், வாழவும் பாடுபட வேண்டியது நமது கடமையாகும்!''

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தம் உரையில் குறிப்பிட்ட தாவது:

கூட்டுறவு வாரவிழா பண்டித ஜவகர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளையொட்டி இந்தியா முழுவதும் கொண்டாடப்படுகின்ற விழா. கூட்டுறவில் மிகுந்த நாட்டம் கொண்டவர் ஆசியாவின் ஜோதி பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் ஆவார்கள். கூட்டுறவில் அவருக்கு அக்கறையும் ஆர்வமும் இருந்த காரணத்தால்தான் இந்திய நாடு கூட்டுறவால் கட்டப்பட்டு இயங்க வேண்டுமென்று அவர் கருதினார்.

நேரு காலத்தில், அவரால் கூட்டுறவு போற்றப்பட்டது.

இன்றைக்குக் கூட்டுறவு ஏற்படுத்து கின்ற கயிறுகள் எங்கெல்லாம் இருக் கின்றனவோ, அவைகளை அறுத்து விடும் முயற்சிகள் நாட்டில் ஏராள மாக நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன. இதைத் தீர்க்கதரிசனமாக எதிர்பார்த்துத்தான்- இந்தியாவை வாழவைக்கக் கூடிய், வளப்படுத்தக் கூடிய, வலுப்படுத்தக்கூடிய அமைப் பாகக் கூட்டுறவு அமைப்பு இருக்க வேண்டும்- இருக்கும் என்கிற ஆசை யையும் நம்பிக்கையையும் வெளிப் படுத்தினார்.

எனவேதான், அவருடைய பிறந்த நாளான 14-ஆம் தேதிமுதல் ஒரு வார காலம் கூட்டுறவு வாரமாக நாம் கொண்டாடிக் கொண்டிருக் கிறோம்.

முதல்நாள் மனித வள மேம் பாட்டு நாளாகவும், இரண்டாம் நாள் கூட்டுறவு மூலம் ஜனநாயகம் மற்றும் சமூகநீதி பாதுகாக்கிற நாளா கவும் கொண்டாடுகிறோம். சமூக நீதியைப் பாதுகாக்கின்ற நாளாக இந்த நேரத்தில் கொண்டாட வேண் டியது எவ்வளவு முக்கியம் என்பது உங்களுக்கு நான் சொல்லித் தெரிய வேண்டியது அவசியமில்லை. 'மண்டல்' என்ற ஒரு வார்த்தையே உங்களுக்கு அதை மிக விளக்கமாக எடுத்துச் சொல்லும்.

அதற்கு அடுத்த நாள் கூட்டுறவு மூலம் சுற்றுப்புறச் சூழல்-பாதுகாப்பு-வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி நாள்.

அடுத்து, விற்பனை மற்றும் நுகர்வோர் நாள். அடுத்து கூட்டுறவு மூலம் வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நுட்ப நாள். அடுத்து மகளிர் மற்றும் நலிவுற்றோர் நாள். இறுதியாக கூட்டுறவு மூலம் வீட்டு வசதி நாள்.

இந்த நாட்களில் அடங்கியுள்ள தலைப்புக்களைக் காணும் பொழுதும், அந்தத் தலைப்புகள் பெற்றிருக்கின்ற தகவல்களை நோக்கும் பொழுதும், இவைகளுக்குள்ளேயே, ஒரு நாட்டி னுடைய வாழ்வு, சமுதாயத்தினு டைய முன்னேற்றம், அந்த சமூகத் திற்குக் கிடைக்க வேண்டிய நீதி, சமுதாயத்திலே வலுவாக இருப்ப வர்கள், வலுவற்று இருப்பவர்கள், பலமாக இருப்பவர்கள், பலவீன மாக இருப்பவர்கள் - இவர்களுக்கு இடையே நடைபெற வேண்டிய சமத்துவம், சமதர்மம், இவை அனைத் தும் இந்தத் தலைப்புகளுக்கிடையே அடங்கி இருக்கின்ற காட்சியை நாம் காண முடிந்தது.

அப்படி ஒரு வாரத்தைக் கொண் டாடி விட்டு, நிறைவு நாளையும் கொண்டாடி விட்டு நாம் கலைந்து செல்கிறோம் என்றால், ஏதோ ஆண்டுக்கு ஒரு வாரம் இதைக் கொண்டாடினோம்; அப்போது மாத்திரம் இதை நினைத்துக் கொண் டோம் என்றில்லாமல், தொடர்ந்து இந்தப் பணிகளில் நாம் நம்மை ஈடு படுத்திக் கொள்ள வேண்டும்.

இங்கே பல்வேறு இயக்கங் களைச் சேர்ந்தவர்களும் - கட்சி சார்பற்றவர்களும் இந்த விழாவுக்கு வந்திருக்கிறீர்கள். இங்கே - எல் லோரும் ஒரு கட்சி; கூட்டுறவுக் கட்சி என்பதிலே எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு.

''சீமான் எவ்வளவு தவறு செய் தாலும், அது வெளியே வராது. சீமான் போட்டிருக்கிற பட்டுச் சட்டை அதைப் பாதுகாத்துவிடும். ஏழை அவன் ஒரு இயக்கத்திற்கு வந்தால், அது கூட்டுறவு அமைப் பாக இருந்தாலும்சரி, சட்டமன்ற மாக இருந்தாலும்சரி- ஏழை தவறே செய்ய மாட்டான் என்று சொல்ல வில்லை- ஆனாலும் ஏழை செய் தால், அது உடனடியாக அம்பலத் திற்கு வரும். பணக்காரன் செய்தால், அதை மறைப்பதற்கு ஆயிரக்கணக் கான ஆதாரங்கள் அவனிடத்தில் உண்டு.

ஏனென்றால், கறுப்புத் துணி யில் ஒரு துளி மையை உதறினால், அது தெரியப் போவதில்லை. தூய் மையான வெள்ளைத் துணியில் ஒரு துளி மை படுமானால், அது பளிச் சென்று தெரியும்.

எனவே, கூட்டுறவுத் துறையில் அங்கம் வகிக்கும் உங்களையெல் லாம் நான் தூய்மையான வெள் ளைத் துணியாகவே கருதுகிறேன்; ஒரு துளி மையும் சிந்தாமல் பார்த்துக் கொள்ளுங்கள். அப்படிப் பார்த்துக் கொண்டால், இந்தச் சமுதாயத்தைச் சிந்தாமல் சிதறாமல் காப்பாற்றி னோம் என்ற பெருமை நமக்கெல் லாம் வாய்க்கும்! என்று கூறி உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்''

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் உரையாற்றினார்.

முன்னாள் அமைச்சர் திரு அன்பில் தர்மலிங்கம், திரு டி.ஆர் பாலு எம்.பி., மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களும், கூட்டுறவு இயக்கப் பிரமுகர்களும் விழாவில் கலந்து கொண்டனர்.

விழா நிகழ்ச்சிகள் முடிந்தபின், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத் தனி அலுவலர் திரு. ஏ.ஜே. சீனிவாஸ் நன்றி கூறினார்.

இந்த விழாவை முன்னிட்டு, சென்னையில் உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் பங்கேற்ற சிறியதோர் கண்காட்சியும் வள்ளுவர் கோட்டத் தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

விழா முடிவில் - மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் எழுதிய 'தென்பாண்டிச் சிங்கம்' வரலாற்று நாடகம், கலைமாமணி ஹெரான் ராமசாமி குழுவினரால் நடத்தப் பட்டது.

— நமது செய்தியாளர்

## அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

★ இளநிலை, இடைநிலைப்பள்ளி ஆசிரியர்கள் நியமனத்திற்கு வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள தகுதியுள்ளோரைப் பதிவு மூப்பு அடிப்படையில் தேர்ந்தெடுக்க முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்று தமிழக அரசு அறிவித்தது. இதன் காரணமாக ஏற்கனவே நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வுகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டுவிட்டதாகவும் அரசு அறிவித்துள்ளது. (3.10.90)

★ தமிழ்நாடு மின்சார வாரிய ஊழியர் 81 ஆயிரம் பேர்களுக்கு மொத்தம் 20 கோடி ரூபாய் போனஸாக வழங்கப்படுகிறது. ஒருமாத சம்பளம் (8.33 விழுக்காடு) போனஸாகவும், 4.92 விழுக்காடு கருணைத் தொகையாகவும் வழங்கப்படுகிறது என்று மின்சார வாரியம் அறிவித்துள்ளது. (6.10.90)

# நலிவுற்றோர்க்கு வாழ்வு தரும் நலத் திட்டங்கள்

## தென்னார்க்காடு மாவட்டம்

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் உள்ள மாவட்டந்தோறும் இருக்கின்ற ஏராள மான ஏழைப் பெண்கள் பயன் பெற்று வருகின்றனர்.

இந்த உதவித் திட்டத்தின்படி 1989-90-ஆம் ஆண்டிற்கு, தென்னார்க்காடு மாவட்டத்திற்கு 1072 நபர்கள் குறியீடாகக் கொண்டு, ரூ.53,60,000 நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டு, முழுமையாகச் செலவினம் மேற்கொள்ளப்பட்டது.

1990-91-ஆம் ஆண்டில் 1200 நபர்களுக்குத் திருமண நிதியுதவி வழங்க, ரூபாய் 60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தென்னார்க்காடு மாவட்டத்தில் இதுவரை 1140 ஏழைப் பெண் களுக்கு, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் ரூ.5,000 வீதம் 57 இலட்சம் ரூபாய் கொடுக்கப் பட்டுள்ளது.

அந்த வகையில், இத்திட்டத் தினால் பயனடைந்த, தென்னார்க்காடு மாவட்டம் பண்ருட்டி வட்டம் ஆவினியூர் கிராமத்தைச் சேர்ந்த திருமதி வரலட்சுமி கூறுகிறார்:

''நான் பிளஸ் டூ வரையில் படித்துள்ளேன். என்னுடைய தந்தையார் பெயர் இராமச்சந்திரன்; தற்போது அவர் இறந்துவிட்டார். எனக்கு மூன்று தங்கைகளும், இரண்டு தம்பிகளும் உள்ளனர். எனது தாயார் விவசாயக் கூலிவேலை செய்து எங்க ளுடைய குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார். எனது தாயார் நான்கு பெண்களையும் எப்படிக் கரை



திருமதி வரலட்சுமி

சேர்ப்பேன் என்று தினமும் மனம் சோர்ந்து புலம்பிக் கொண்டே இருப் பார். இந்தச் சூழ்நிலையில் அண்ணா கிராமப் பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் கிராம சேவிகாவாகப் பணியாற்றி வரும் திருமதி பூஷணத்தைச் சந்தித்து, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் திருமண உதவி பெறுவது பற்றி விசாரித்து, ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு மனுச் செய் தேன். மனுச் செய்த 15 நாட்களில் இந்த உதவித் தொகையைப் பெற்றேன். இத்தொகையைக் கொண்டு எனது கல்யாணத்திற்கு வாங்கிய கடன் களை அடைத்தோம். தமிழக முதல்வர் அவர்கள் இத்திட்டம் கொண்டு வந்ததனால், நான் மட்டும் பயன் பெற்றது மட்டுமின்றி, புதுப்பேட்டை ஆகிய கிராமங்களில் உள்ள 40 பேர் பயன் பெற்று உள்ளோம். எங்களுடைய வாழ்வில் ஒளியேற்றிய தீபமாகத் திகழ்கிறார் தமிழக முதல்வர் என்று ஆனந்தக் கண்ணீர் மல்கக் கூறினார்.

**— வை. புண்ணியமூர்த்தி,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**தென்னார்க்காடு மாவட்டம்.**

## கோயம்புத்தூர் மாவட்டம்

கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள பெரியநாய்க்கன்பளையம், சர்க்கார் சாமகுளம் ஊராட்சி ஒன்றி யங்களில் உள்ள கிராமங்களில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித்திட்டத்தின் மூலமும், டாக்டர் முத்து லட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித்திட்டத்தின் மூலமும் பலர் பயன் பெற்றிருக் கிறார்கள்.

பெரியநாயக்கன்பாளையம் ஒன்றி யத்தில் 4 வீரபாண்டிபுதூர் கிராமத் தைச் சார்ந்த கலாமணி-காளிச்சாமி தம்பதிகளைச் சந்தித்து திருமண உதவித் தொகை பெற்றதைப் பற்றிக் கேட்டபோது திருமதி கலாமணி (வயது 20) என்பவர் கூறியதாவது:

''சின்ன வயதிலேயே அப்பாவை இழந்து பாட்டியாருடன் தங்கி அரசு உதவியால் பிளஸ் 2 வரை படித்து முடித்தேன். வசதியில்லாததால் மேற் கொண்டு படிக்கவும் முடியாமல், தக்க வயதடைந்தும் கல்யாணம் செய்யவும் முடியாமல் வறுமையில் வாடினேன். பலமுறை கல்யாண ஏற்பாடு செய்தும் பொருளாதார நெருக்கடியால் தடைப்பட்டது. ஏற் கெனவே அரசாங்கத்தில் உதவி பெற்று கல்யாணம் செய்து கொண்ட உறவினர் ஒருவர் மூலம் இத்திட்டத்தைப் பற்றித் தெரிந்து கொண்டு, முக்கிய சேவிகா மூலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் விண்ணப்பம் கொடுத் தேன். பயன்பெற்றேன். கல்யாணம் முடிந்த ஒரு வாரத்தில் இந்த உதவித் தொகை ரூ.5,000 எனக்குக் கிடைத் தது. இது மட்டும் எனக்குக் கிடைத்திரா விட்டால் என் கல்யாணமே நடந் திருக்காது'' என்றார்.

திரு. வி. காளிச்சாமியிடம் இது



திருமதி கலாமணி

திரு காளிச்சாமி

பற்றிக் கேட்டபொழுது ''நானும் வசதி இல்லாத குடும்பத்தில் பிறந்து தினக் கூலியாகத் தனியார் ஒர்க் ஷாப்பில் வேலை செய்கிறேன். அரசின் இத்திட்டத்தால் கிடைத்த இவ்வுதவித் தொகையின் மூலம், துணிமணிகள் எடுத்து கோவிலில் சிக்கனமாக எங்கள் கல்யாணத்தைச் செய்து கொண்டோம்'' என்றார்.

கலாமணி தாய் பூவாத்தாள் ஓர் விதவை. அவர் கூறும்பொழுது, ''கல்யாண வயதில் உள்ள பெண்ணை வீட்டில் வைத்துக் கொண்டு மனச்சுமையோடு வாழ்ந்தேன். நல்ல நேரத்திற்குத் தமிழக முதல்வர் இந்தத் திட்டத்தை அறிவித்தார். பிறகு நான் மாப்பிள்ளை வீடு பார்த்து 6.6.90-இல் திருமண உதவி கேட்டு மனுச் செய்தேன். 15.6.90-இல் ரூ.5,000 கொடுத்தார்கள். திருமணத்தை முடித்தேன். எனது பொறுப்பைத் தமிழக அரசே ஏற்றுக் கொண்டு முடித்து வைத்தது.'' என்று பெருமகிழ்ச்சியோடு தெரிவித்தார்.

கலாமணியின் பாட்டி தங்கம்மாளும்(70) இதுபற்றிப் பூரிப்போடு கூறி அரசுக்கு நன்றி தெரிவித்தார்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின் கீழ் பயன்பெற்றுத் திருமணமாகி ஆண் குழந்தை ஈன்றெடுத்தவர் நாயக்கனுரைச் சேர்ந்த திருமதி சத்தியவாணி. முன்பு அவர் திருமணம் நிச்சயிக்கப்படுவதற்கு முன்பு - மூன்று ஆண்டுகள் ஆகியும் வசதியில்லாததால் நின்றுவிட்டது. அப்பெண்ணின் தந்தை கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் முறையிட்டு மனுக் கொடுத்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.மா.இராமன், இ.ஆ.ப. அவர்களின் உடனடி நடவடிக்கையால், திருமண உதவித் தொகை வழங்கப்பட்டு, இத்திருமணம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் கடந்த ஆண்டு நவம்பரில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலேயே நடத்தி வைக்கப்பட்டது.

ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த அப்பெண்ணின் தாயார் திருமதி பானுவிடம் கேட்டபொழுது, ''எங்க வீட்டுக்காரர் காலணி தைக்கும் தொழிலாளி, எங்களுடைய பெண் திருமணத்திற்கு உதவி கிடைத்து, கலெக்டர் உதவியுடன் திருமணமும் நடந்தது. ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த இந்தக் குடியிருப்பில், படிக்காமல் நின்றுவிட்ட பெண்கள் கூட, இப்பொழுது பள்ளிக்கூடத்திற்குச் சென்று படிக்கிறார்கள். 8-வது படிச்சிட்டா அரசாங்கத்தில் 5,000 ரூபாய் கல்யாணத்திற்குத் தருவதால் படிக்க ஆரம்பித்துள்ளனர். அரசாங்கம் பணம் கொடுக்கிற இந்தத் திட்டம் ரொம்பவும் நல்ல திட்டம்'' என்று கூறினார்.

வீரபாண்டிபுதூரில் 2 ஆண்டுகளுக்கு முன்பு திருமணமாகி தற்பொழுது டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் மூலம் உதவி பெற்ற சின்னதுரை மனைவி திருமதி லட்சுமியைச் சந்தித்து - இத்திட்டத்தின் பயனைப் பற்றிக் கேட்டபொழுது அவர் சொன்னார்—

''எனக்கு முதல் பெண் குழந்தை பிறந்துள்ளது. கூலி வேலை செய்து பிழைப்பு நடத்திவரும் நான், அரசாங்கத்துல கர்ப்பிணிப் பெண்களுக்கு 200 ரூபாய் உதவியாகக் கொடுக்கிறார்கள் என்பதை நர்ஸ் அம்மா மூலம் அறிந்து, அவர் மூலமே மனுக் கொடுத்தேன். அந்த உதவித் தொகை மூலம் மருந்து, மாத்திரை, காய்கறி எல்லாம் வாங்கிப் பஞ்சம் பசி தெரியாமல் இருந்து பயன்பெற்றேன். இந்தத் தொகை பேறுகாலத்தில் எனக்கு மிகவும் உதவியாக இருந்தது'' என்றார்.

அதே கிராமத்தைச் சார்ந்த பழனிச்சாமியின் மனைவி சாவித்திரி என்பவர் மகப்பேறு உதவி பெற்றுப் பயனடைந்தவர். இத்திட்டத்தின் பயன் பற்றி அப்பெண்ணிடம் கேட்கும்பொழுது—

''குடியிருக்க அரசாங்கம் இந்த வீடு கட்டிக் கொடுத்தாங்க. இப்ப எனக்கு இந்தப் பெண் குழந்தை பிறந்த 7 நாளில் 200 ரூபாய் உதவியாகக் கொடுத்தாங்க. நர்ஸ் அம்மா மூலமாகக் கிடைச்ச இந்தப் பணத்தைக் குழந்தைக்கும் எனக்கும் வைத்தியத்துக்குச் செலவழிச்சேன், இப்ப நாங்க நல்லாயிருக்கோம்'' என்றார்.

சர்க்கார் சாமக்குளம் ஒன்றியம் சாமநாய்க்கன் பாளையத்தில், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தில் பயன் பெற்ற தம்பதிகள் சாந்தாமணி (வயது 20) - நடராஜன் ஆகியோர்

திருமதி ராஜேஸ்வரி



பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த ஏழை விவசாயக் கூலிகள். சத்துணவு அமைப்பாளர் மூலம் 'இத்திட்டம் பற்றி அறிந்த சாந்தாமணி முக்கிய சேவிகா மூலம் ஒன்றிய அலுவலகத் தில் விண்ணப்பித்து திருமணத்திற்கு 2 நாள் முன்னதாகவே உதவித் தொகையைப் பெற்று, திருமணத்தை நடத்தியுள்ளார்.

அதே கிராமத்தில் மகப்பேறு உதவி பெற்ற வேலுச்சாமியின் மனைவி ராஜேஸ்வரி என்பவர் கூலி வேலை செய்து குடும்பத்தை நடத்தி வந்தவர். இவருக்கும் கர்ப்பிணி உதவி தொகை ரூ.200 வழங்கப் பட்டது. அதுபற்றி இருவரும் பெருமை யோடு சொல்லி, அரசையும் முதலமைச்சரையும் பாராட்டினர்.

சாமநாய்க்கன் பாளையத்தைச் சேர்ந்த சண்முகசுந்தரம் மனைவி நாகம்மா என்பவர் மகப்பேறு உதவித் தொகை சமூக நலத்துறை மூலமாக வழங்கப்பட்டு அதனால் பயன் பெற்றவர். பிள்ளைப் பேறுக்கு முன்பே உதவித் தொகை பெற்றுக் கொண்ட இவர் - ''மந்திரி அம்மா கொடுத்த 200 ரூபாயை என் குழந்தை பிறக்கிற துக்கு முன்னாடியும், பிறந்த பின்னாடி யும் மாத்திரை, மருந்து, காய்கறி எல்லாம் வாங்கி சாப்பிட்டு நல்ல பயனைப் பெற்றேன்'' என்று நன்றி யுடன் கூறினார்.

- கோ.த. மோகன்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
கோயம்புத்தூர் மாவட்டம்.

## திருச்சிராப்பள்ளி மாவட்டம்:

ஏழைப் பெண்களின் வாழ்வு ஏற்றம் பெற, ஏணியாக உதவும் திட்டம்தான் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம்.

இத்திட்டத்தின் கீழ், திருச்சிராப் பள்ளி மாவட்டத்திற்கு முதல் கட்டமாக, 1990-91-ஆம் ஆண் டுக்கு 1,500 ஏழைப் பெண்களுக் குத் தலா ரூ.5,000 வீதம் திருமண நிதியுதவி வழங்க ரூ.75 இலட்சம் பெறப்பட்டது. பின்பு இரண்டாம் கட்டமாக 200 பெண்களுக்கு ரூ.10 இலட்சம் பெறப்பட்டது. இதில் அக்டோபர் மாதம் வரை 1,338 மகளிருக்கு 66 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் திருமண நிதியுதவி யாக வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ், திருச்சி மாவட்டத்தில்- நலிவுற்ற கர்ப்பிணிப் பெண்களுக்குத் தாய்மை அடைந்த 8-வது மாதத்தில் மகப் பேறு நிதியுதவி வழங்க 1990-91-ஆம் ஆண்டுக்கு 13,500 நபர்களுக்குத் தலா ரூ.200 வீதம் வழங்க ரூ.27 இலட்சங்கள் பெறப்பட்டு, தற்போது 11,489 கர்ப்பிணித் தாய்மார் களுக்கு ரூ.22 இலட்சத்து 97 ஆயி ரத்து 800 வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் தர்மாம்பாள் விதவை மறுமணத் திட்டத்தின்கீழ், இவ் வாண்டுக்கு 5 விதவை மகளிருக்குத் தலா ரூ.5,000 வீதம் ஒதுக்கீடு பெறப்பட்டு, 5 விதவை மகளிர் மறுமணம் புரிய ரூ.25,000 வழங் கப்பட்டுள்ளது.

விதவைப் பெண்மணியின் மகள் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ், திருச்சி மாவட்டத்தில்- 1990-91-ஆம் ஆண்டுக்கு 100 விதவைகளின் மகள் திருமணத்திற்காகத் தலா ரூ.2,000 வீதம் வழங்க ரூ.2 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டு 100 பேருக்கு வழங்கப்பட்டு விட்டது.

இந்த ஆண்டில் விதவைத் தாய் மார்களின் குழந்தைகளுக்கு இலவசப் பாடப்புத்தகம் மற்றும் குறிப்பேடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ், 220 குழந் தைகளுக்குப் புத்தகங்கள் வழங்கப் பட்டுள்ளன.

அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித்திட்டத்தின் கீழ்- சாதிபேதமற்ற சமத்துவச் சமு தாயம் அமைய உதவ வழிகோலும் வகையில்- நடப்பாண்டில் 34 கலப்புமணத் தம்பதியர்களுக்குத் தலா ரூ.5,000 வீதம் வழங்க ஒரு இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

கண் பார்வையற்றவர்களுக்குக் கருப்புக் கண்ணாடி வழங்கும் திட்டத்தின்கீழ், நடப்பாண்டில் திருச்சி மாவட்டத்தில் 469 கருப்புக் கண்ணாடிகள் வழங்க ஒதுக்கீடு பெறப்பட்டு, இதுவரை 320 கண் பார்வை இழந்தவர்களுக்குக் கருப்புக் கண்ணாடி வழங்கப்பட்டுள்ளன.

அரசு அறிவித்துள்ள இலவச மின்சாரத் திட்டத்தின் மூலம் மட்டும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 97 ஆயிரத்து 70 விவசாயிகள் பயன் அடைகிறார்கள். இதன் மூலம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு ஆண்டுக்கு இரண்டு கோடியே 21 இலட்சத்து 56 ஆயிரத்து 740 ரூபாய் வருமான இழப்பு ஏற்படு கிறது.

எஸ். சுதாகர்,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்

**உள்ளம் வளர்கிறது - சிந்தனை யால் - உலகில் உலவும் எண்ண அலைகளால் - வாழ்க்கை எனும் ஆசிரியன் புகட்டும் பாடங்களால்! இலட்சியங்கள் புதிது புதிதாகப் பிறக்கின்றன. இவைகளுக்கேற்ற வண்ணம் அறிவுத் தாகம் ஏற்படு கிறது. அந்தத் தாகத்தைத் தீர்க்கும் ஏடுகளை நாடுகிறோம்.**

**—பேரறிஞர் அண்ணா**

## திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம்:

தமிழக அரசின் சமூக நலத் திட்டங்களை மூவலூர் இராமா மிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம், டாக்டர் முத்து லெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவைகள் மறுமண நிதி உதவித் திட்டம், விதவைகளின் மகள் திருமண உதவித் திட்டம் ஆகியவற்றில்- ஆண்டிற்கு அரசு நிர்ணயித்த குறியீட்டைத் திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம் எய்தியுள்ளது.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தில், 8-ஆம் வகுப்புப் படித்துத் தேறிய 600 பெண்களுக்குத் திருமண உதவியாகத் தலா ரூ.5 ஆயிரம் வீதம் ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கியது. நடப்பு ஆண்டிற்கு ஒதுக்கிய தொகை அனைத்தும் இந்தத் திருமண உதவிக்கு வழங்கப்பட்டுவிட்டது.

டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவைகள் மறுமண நிதி உதவித்



திருமதி தனபாக்கியம்

திட்டத்திற்கு ரூ.20 ஆயிரமும், விதவைகள் மகளின் திருமண உதவித் திட்டத்தின்கீழ் ரூ.80 ஆயிரமும், இம்மாவட்டத்திற்கு நிதியாக ஒதுக்கியது. இத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகைகள் அனைத்தும் வழங்கப்பட்டுவிட்டது.

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்திற்கு ரூ.17 இலட்சம் நிதியாக அரசு ஒதுக்கியது. அதில் இதுவரை ரூ.6 ஆயிரம் கர்ப்பிணிப் பெண்கள் பயன்பெறும் வகையில் ரூ.12 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

ரூ.5 ஆயிரம், மகளிர் திருமண உதவித் திட்டத்தால் திருமணம் செய்து கொண்ட சாணார்ப்பட்டி ஊராட்சி ஒன்றியம் கம்பிளியம்பட்டியைச் சேர்ந்த வெள்ளைச்சாமியின் மகள் தனபாக்கியம் கூறியதாவது:

''எனது பெற்றோர்கள் கூலி வேலை செய்து வருகிறார்கள். தற்போது எனது தந்தைக்கு 67 வயதாகிறது. என்னுடன் பிறந்தவர்கள் 3 அண்ணன்மார்கள், ஒரு அக்காள், ஒரு தங்கச்சி. என் தங்கை பள்ளியில் படித்து வருகிறாள். அண்ணன், அக்காள் படிக்கவில்லை. திருமணமாகித் தனித்தனியே வாழ்ந்து வருகிறார்கள். நான் 8-வது படித்து 7 ஆண்டுகள் ஆகிவிட்டது. திருமண வயதையெட்டியும், கூலி வேலை செய்துவரும் எனது பெற்றோரால் திருமணம் செய்துவைக்க இயலவில்லை. தமிழக முதல்வர் கருணாநிதி அவர்கள் திண்டுக்கல் மாவட்டக் கலெக்டர் அலுவலகத் திறப்பு விழாவில், படித்த பெண்களுக்குத் திருமண உதவி வழங்குவது பற்றிச் சிலர் பேசிக் கொண்டதை அறிந்தேன். விவரம் தெரிந்தபின் யூனியன் ஆபீசுக்கு மனுச் செய்து, ரூ.5 ஆயிரம் பெற்றேன். எனது திருமணமும் நடைபெற்றது'' எனக் கூறினார்.

''இந்த ஐந்தாயிரம் ரூபாய் கிடைக்கவில்லையென்றால் எனது திருமணம் எப்போது நடந்திருக்குமோ?'' இத்திட்டத்தால் ஒரு புது வாழ்வு எனக்குக் கிடைத்தது'' என்று பெருமகிழ்வோடு கூறினார்.

திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம் கோபால்பட்டியில் வசித்து வரும் குழந்தைவேலுவின் மகள் முத்துப்பாப்பா கூறியதாவது:

''எனது குடும்பத்தில் என் தாய், தந்தையரைச் சேர்த்து 5 நபர்கள். எனது மூத்த அக்காள் இருவரும் படிக்காதவர்கள். எங்களது உறவுக்காரப் பையன்களுக்கு எனது தந்தை எப்படியோ திருமணத்தை நடத்தி வைத்துவிட்டார். நான் கடைசி மகள். எனக்குத் திருமணம் செய்வது பற்றி யோசித்துக் கொண்டே வந்தார். எனது தகப்பனார் நெருங்கிய உறவுப் பையனுக்கு என்னைக் கட்டிவைக்க நினைத்தால் கூட, கல்யாணச் செலவு மற்றும் தோடு, மூக்குத்தி வாங்குவதற்கும், தட்டு முட்டுச் சாமான்கள் வாங்குவது போன்ற சராசரிச் செலவிற்கே ரூ.3 ஆயிரம் தேவைப்படும். இரண்டு அக்காளைக் கரை சேர்த்த எனது தந்தை, எனது திருமணத்தை முடித்து வைக்கக் கையில் பணமில்லாமல் தவித்துக் கொண்டிருந்த சமயத்தில், அரசின் சார்பில் படித்த பெண்களான என் போன்றவர்களுக்குத் திருமண உதவி செய்த அரசாங்கத்தை என் வாழ்நாளில் மறக்க முடியாது'' எனக் கூறினார்.

8-ஆம் வகுப்புவரை படித்த பெண்களுக்குத் திருமண உதவித் திட்டத்தின்கீழ் மணம் முடித்துக் கொண்ட காவேரிசெட்டிபட்டியைச் சேர்ந்த-மறைந்த- திரு ரெங்கசாமியின் மகள் நாகரத்தினம் கூறியதாவது:

''எனது தந்தை உயிருடன் இருக்கும்போது என் அண்ணனுக்குத் திருமணம் செய்துவைத்துவிட்டார். எனது தாய் கூலி வேலை பார்க்கிறார். எனக்குக் கீழ் இரண்டு தம்பிகள் உள்ளனர். எனது தாய் சம்பாதிக்கும் கூலிப் பணத்தில் எனது திருமணச் செலவிற்கு வழி இல்லை. எனது ஊருக்காரப் பெண், 9-ஆவது வகுப்பு படித்திருந்தாள். அவளுக்கு அரசாங்கப் பணம் பெற்றுத் திருமணம் முடிந்ததை அறிந்து, வழிமுறைகளைத் தெரிந்து, எனது திருமணத்திற்கும் அரசாங்கம் கொடுக்கும் பணத்தால் திருமணம் செய்யலாம் என்று திட்டமிட்டு, அரசாங்கப் பணத்தைப் பெற்று எனக்குத் திருமணம் நடந்தது'' என்று மகிழ்வோடும் நன்றிப் பெருக்கோடும் கூறினார்.

—மு. அண்ணாமலை
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம்

திருமதி முத்துப்பாப்பா



# சிறு சேமிப்புத் துறை

## அறுபது வயது முடிந்ததும் அறுபது மாத சேமிப்பின் மூலம் மனநிறைவோடு வாழுங்கள்



**ரூ. 125/- வீதம் அறுபது மாதம் சேமியுங்கள்.**
**உங்களின் அறுபதாவது வயதில் ரூ. 6,40,000/- பெறுங்கள்!**
**பென்ஷன் வசதியும் உண்டு!!**

| வயது வரம்பு | 60 மாதத்திற்கு மாதந்தோறும் 5 வருட R.D. கணக்கில் செலுத்தும் தொகை | 5 வருட R.D. கணக்கில் முதிர்வு பெறும் தொகை | R.D.-ல் முதிர்வு பெற்ற தொகையை IVP-ல் மறு முதலீடு | IVP-ல் செய்த முதலீடு 58-ம் வயதில் முதிர்வு பெறும் தொகை | 58-ம் வயதில் MIS மற்றும் இதர பொருத்தமான திட்டங்களில் முதலீடு செய்யும் தொகை | மாதாந்திர பென்ஷன் |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 18-23 | 125* | 10,003.75 | 10,000 | 6,40,000 | 6,40,000 | 6,400 |
| 23-28 | 125* | 10,003.75 | 10,000 | 3,20,000 | 3,20,000 | 3,200 |
| 28-33 | 125* | 10,003.75 | 10,000 | 1,60,000 | 1,60,000 | 1,600 |
| 33-38 | 250* | 20,007.50 | 20,000 | 1,60,000 | 1,60,000 | 1,600 |
| 38-43 | 250* | 20,007.50 | 20,000 | 80,000 | 80,000 | 800 |
| 43-48 | 500* | 40,015.00 | 40,000 | 80,000 | 80,000 | 800 |
| 48-53 | 500* | 40,015.00 | 40,000 | 40,000 | 40,000 | 400 |

* ரூ. 50/-க்கு ஒரு கணக்கும், மீதத் தொகைக்கு மற்றொரு கணக்கும் தொடங்க வேண்டும்.

** 6-வது கட்டத்தில் காணப்படும் தொகை, மாதாந்திர பென்ஷனுக்காக, மாதாந்திர வருமானத் திட்டத்தில் (MIS) முதலீடு செய்யப்படுகிறது (அதிகபட்சம் ரூ. 4 லட்சம். மீதத் தொகை பொருத்தமான இதர திட்டங்களில் முதலீடு செய்யப்படும்) 6-வது கட்டத்தில் காட்டப்பட்டுள்ள தொகைக்கு, 6 ஆண்டுகளுக்கு ஒருமுறை **10% போனஸ் உங்களுக்குக் கிடைக்கும்.**

5 ஆண்டுகளுக்கு மட்டும் ஒரு குறிப்பிட்ட தொகையில் டெபாசிட் செய்தாலே போதும். மேலே குறிப்பிட்டுள்ளபடி உங்களுக்கு ரூ. 400/- முதல் ரூ. 6400/- வரை மாதாந்திர பென்ஷன் கிடைக்கும். 13.3% அளவில் அதிக வட்டி வழங்குகிறது.

- மாதம் ஒன்றுக்கு ரூ. 50 வரை R.D.-யில் இலவச இன்ஷூரன்ஸ் கிடைக்கும்.
- சம்பளப் பட்டியல் சேமிப்புத் திட்டத்தின் மூலம் மாத ஊதியம் பெறுவோர் சேமிக்க R.D. திட்டம் பயனுள்ளது.
- உங்கள் வீட்டுக்கே வந்து தொகையைப் பெற்று, தபால் நிலையத்தில் டெபாசிட் செய்ய M.P.K.B.Y. ஏஜெண்டுகள் வசதி உண்டு.
- *1.6.90 முதல் 31.12.90 வரை தமிழ்நாட்டில் R.D.-ல் டெபாசிட் செய்யப்படும் ஒவ்வொரு ரூ. 500/- முதலீட்டிற்கும் தமிழ்நாடு அரசு ஒரு இலவச பரிசுக்கூப்பனை வழங்குகிறது. இதன்மூலம் மாருதி கார், ஸ்கூட்டர், கலர் டி.வி., ரெப்ரிஜிரேட்டர், மோஃபா, தையல் எந்திரம், சைக்கிள், கைக்கடிகாரம், குவார்ட்ஸ் சுவர்க்கடிகாரம் முதலிய 262 பரிசுகளைப் பெற வாய்ப்பு உண்டு.*
- *1.6.90 முதல் 31.12.90 வரை* NSS, NSC VIII Issue, KVP *போன்ற திட்டங்களில் ரூ. 1,000/-ம் அதற்கு மேலும் தமிழ்நாட்டில் முதலீடு செய்யும் முதலீட்டாளர்களுக்கு 1% ஊக்கத்தொகை வழங்கப்படும்.*

DIPR/2844/MS/90/ARIES

### பரிசுக்கூப்பன்கள் கிடைக்குமிடம்:

**சென்னையில்:**
மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம், சென்னை-5 மற்றும் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள்,
மாநகராட்சி அலுவலகம், சென்னை-3 மற்றும் அனைத்து மாநகராட்சி வட்ட அலுவலகங்கள்,
சமூக பாதுகாப்பு துணை இயக்குநர் அலுவலகம், குறளகம், சென்னை-108.

**மாவட்டங்களில்:**
மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்கள்
வட்டாட்சியர் அலுவலகங்கள்
வட்டார வளர்ச்சி அலுவலகங்கள்

மேலும் விவரங்களுக்கு:
இயக்குநர்,
**சிறு சேமிப்புத்துறை,**
143, அண்ணா சாலை,
சென்னை-600 002.
தொலைபேசி: 840223/846209

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

அதி நவீன பருத்தி வகைகள்




உங்கள் ஆடை அணிகள் பொலிவுடன் விளங்குவதில் உங்களுக்கு அதிக விருப்பம். ஆகவேதான் உயிரோட்டமான வண்ணங்களின் உன்னதத்தை உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் பருத்தி வகைகளில் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

**கோ-ஆப்டெக்ஸ்**
தமிழ்நாடு கைத்தறி

இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங் • பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23






மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், திருச்சிராப்பள்ளி மாவட்டம் எறையூரில் உள்ள பெரம்பலூர் ஜவகர்லால் நேரு சர்க்கரை ஆலை விரிவாக்கம் - தொழிலாளர் குடியிருப்பு ஆகியவற்றைத் திறந்து வைத்தார். (11.11.90)